அவை - அதிகாரிஸம்பத்பாதிகள். அதிக்ருதாதிகாரமான விஷயங்களுக்கு - ப்ரவ்ருத்யாதிகர்மங் களுக்கு. 'ஸர்வாதிகாரமுமாய்' என்றவிடத்திலே-''**ஸ ஹ்ருஷ்டரூபோ விபுலாந்தராத்மா ஸ்ரியா ஜ்வலன் ராஜவதம்ஸதேஜாஃ । ஸவ்யேன பாணிம் பரிகூடஸம்ஸ்தம் ஸவ்யம் ஸமுத்யம்ய ஜகாத தீர்஘ம்**''என்றதனுலறியலாம். இச்சாமாத்ரமேயமையும் என்னுமதுக்கு ஹேதுவந்தா கழுநபூர்வகமாக, இச்சைபார்த்திருக்கும் என்னுமதுக்கு ப்ரமாணம் காட்டுகிறார் - விஷயாநுரூபமாக இத்யாதி. ஆட்பார்த்துழி தருமவன் என்றது - ''நமக்கடிமையாவாருண்டோ'' என்றதுவே யாத்தையாய்த் திரியுமவனென்றபடி. நாலாந்திருவந்தாதி அறுபதாம்பாட்டு, ''ஆட்பார்த்துழிதருவாய்'' இத்யாதி. அப்படி இவன்ஆலி முக்யம் பார்த்திருக்குமோவென்ன - யதிவா இத்யாதி. ''**ஸுக்ரீவஸஹாயோ ஹ்யஹமஜ்ஞாபயம் ஹரீணாமீஶ்வரஸ்ய விபீஷணோவாஸ்ய ஸமீபே ராக்ஷஸாதிபஃ । விபீஷணோவாலஸ்ய ஸமீபே யதிவா ராவணஸ்ஸ்வயம்**'' இதி யுத்தகாண்டே ராமா. (18-34½) ''யதிவா'' என்றதுக்கர்த்தம் - விபீஷணன் என்று இத்யாதி. போய் என்றது பேரிட்டுக்கொண்டுவந்தானுயென்றபடி. ''ஸ்வயம்'' என்றதுக்கு பாவம் - அதுவேன் இத்யாதி. அதாவது - ''ஸ்வயம்'' என்று இவனுக்கதிஸயஞ் சொல்லுகிறதென்? அங்குநின்றும் வந்தவனுரேனுமாகிலும் அவனைக்கைக்கொண்டாரென்னுமதுவமையாதோ என்னவேண்டாமென்றபடி. அதுகுறை. விபீஷணன் குறைவாளனல்லவோவென்ன - விபீஷணஸ்த்வித்யாதி. ''**விபீஷணஸ்துதர்மாத்மா ந கதாசிந்நராக்ஷஸவதேஷ்டிதஃ । ஸுஸுகாதிவிபுலம் ராஜ்யமனைஶ்வர்யம் தனானி ச விபீஷணஸ்**'' இத்யாரண்யகாண்டே சூர்பணகா (கள-உசி). ராவணனையே கைக்கொள்ள வேணுமென்றதுக்கு ஹேத்வந்தரம்-இனித்தான் இத்யாதி. துறுப்புக்கூடு-துற்றுப்பொலி. இதுக்கு த்ருஷ்டாந்தம் - மஹாராஜர் இத்யாதி. எதத்தைப் போக்குமென்னுதே, ''எதம்சாரா'' என்றதுக்கு பாவம்-அதுக்கு அவன் இத்யாதி. விவரணம்-சும்மெனுதே இத்யாதி. சும்மெனுதே-மூச்சுவிடாதே போகைக்கு ஹேது - ராஜகுல இத்யாதி. அப்படி போமோவென்ன, ப்ரமாணம் - வானெ இத்யாதி. பெரியதிருவந்தாதி ஐம்பத்தைநாலாம்பாட்டு. ஆகாசம், கடல், காற்றுத் தீ காடுகளிலே எங்கே யொருங்கிற்றே? வன்துயரை மருங்கு கண்டிலம் என்று பாட்டுக்கர்த்தம். ''எதஞ்சாரா'' என்ற

மறிகடலோ'' இத்யாதி. [குன்றுஇத்யாதி] - ஏதம் சார்ந்தாலும் சென்று புகவேண்டும்படி காணும் ஊரின்ஐச்வர்யமும் ஸோக்யதையும். மலைகளைப் புடைபடத்தோலித்து நெருங்கவைத்தாற்போலே யிருக்கிற மாடங்களும், அதினருகே அம்மாடங்களுக்கு நிழல்செய்தாற்போலே யிருக்கிற குருந்து, அத்தோடே சேர்ந்த செருந்தி, புன்னையென்னுதல்; அந்யோந்யம் சேர்ந்தவையென்னுதல். [மன்றலர்பொழில்] - ஊர்ச்சுற்றிலே யலர்ந்துகிடக்கு மாய்த்துப் பொழில்கள். அன்றியே, மன்றென்று - மன்றலாய், மன்றலென்று - பரிமளமாய், அலருகையாவது - பரம்புகையுமாய், பரிமளம் பரம்பாநின்றுள்ள பொழிலென்றுமாம். மன்றல்-மன்று என்று குறைத்துக் கிடக்கிறது. [குன்றுநேர்மாடம்] - ''பிள்ளை திருநறையூரரையரும் பட்டரும் உள்ளேபுக்கு ப்ரதக்ஷிணம்பண்ணுநிற்க நான் ஸேவித்துப் போனேன்: அல்லாதாரெல்லாம் விரைந்து சடக்கென வாராநிற்க, இவர்கள் திருமாளிகைகளையும் திருக்கோபுரங்களையும் கண்ணுலே பருகுவாரைப்போலே பார்த்துக்கொண்டு வருகிறபடியைக் கண்டு, 'அல்லாதார்க்கும் இவர்களுக்கும் சேயல்ஒத்திருக்கச்செய்தே இவர்களான வாசியிருந்தபடியென்!' என்றிருந்தேன்'' என்றருளிச்செய்வர். [சேர் செருந்தி] - ''ஸாவவொஹுதிவெஹெஹீழி'' போலேயாய்த்து மேல் நித்யஸூரிகளைச் சொல்லக்கடவதாயிருக்க, இங்கே ஸ்த்தாவரங்களைச் சொல்லுகிறது - உகந்தருளின நிலங்களில் விலக்ஷணரோடே ஸ்த்தாவரங்களோடே வாசியில்லையென்றிருக்கும் உத்தேச்ய புத்தியாலே: நித்யஸூரிகளுக்காளல் அவ்வருகேபோக நினைவுண்டாகைக்கு யோக்யதையுண்டு: நினையார்கள் இத்தனைசைதந்யத்தில் உறைப்பாலே: நினைக்கைக்கும் யோக்யதையுண்டிறே; வேறொரிடத்தில் போக நினைக்கைக்கு ப்ராப்தியில்லையிறே இவற்றுக்கு. பிள்ளை ஜகந்நாதப்ரஹ்மராயர் திருமுடிக்குறையிலே மரம்வெட்டுவியாநிற்க எம்பார் அருளிச்செய்த வார்த்தையை நினைப்பது. ஆச்சான் திருவாலிநாடதாஸர் நல்லன சில

வகந்தரம் ''குன்றுநேர்'' இத்யாதிகளைச் சொன்னதுக்கு ஹேவம் - ஏதம் இத்யாதி. ''குன்றுநேர் மாடம்'' என்றதைப்பற்ற - ஐச்வர்யமிதம் என்றது; ''குருந்துசேர்'' இத்யாதியைப்பற்ற - ஸோக்யதையும் என்றது. ஸ்தார்த்தம் - மலைகளை இத்யாதி. நேர் - ஒப்பு. மாடு - சமீபம். புடைபட - இடமுண்டாம்படி. ''மாடேகுருந்து'' என்றதுக்கு ஹேவம் - அம்மாடங்களுக்கு இத்யாதி. ''சேர்'' என்றதுக்கு - மாடங்களினருகேசேர்ந்தகுருந்துசேர்புன்னை என்று முந்தினவர்த்தம் அத்தோடே - அந்தமாடங்களோடேயென்றபடி. 'மன்று' என்று-நாற்சந்தியாய், சுற்றமென்றபடி. † புன்னைகளை யுடைத்தாய் க்ராமபர்யந்தங்களிலே விகவியாநின்றுள்ள பொழிலென்னுதல், குருந்து முதலான வ்ருக்ஷங்களை யுடைத்தாய் பரிமளம் ப்ரவஹியாநின்றுள்ள பொழிலென்னுதல். ''மன்று'' என்று - பரிமளத்தைச் சொல்லும்படியென்? என்ன - மன்றலை இத்யாதி. ''குன்றுநேர்'' இத்யாதியாலே வர்ணிக்கைக்கு இவை ஹேக்யமாயிருக்குமோவென்ன, ஐகிஞ்சித்கரம் - பிள்ளை இத்யாதி. விரைந்து - த்வரித்து. 'அருளிச்செய்வர்' களென்றபடி. ''சேர்'' என்றதுக்கு - வ்ருக்ஷங்கள் அந்யோந்யம் ஸத்ருசமாயிருக்குமென்று மூன்றுமர்த்தமாதல், த்விதீயார்த்த விவரணமாதல். நாகவோர்வரதி இத்யாதி. கீழ் பொழிலை வர்ணித்தவிப்ரகாரத்தை யநுவதித்துப் பரிஹரிக்கிறார்- மேல்நித்யஸூரிகளை இத்யாதி. ''விண்ணோர்'' என்றதைப்பற்ற - நித்யஸூரிகள் என்றது. ஆஸ்ரயமும் விலக்ஷணரான ஸூரிகளோபாதி இவையும் உத்தேச்யமாமோவென்ன - நித்யஸூரிகளுக்கு இத்யாதிநாலுவாக்யம். சைதந்யத்திலுறைப்பு - ஜ்ஞாநகார்யமான ப்ரேமாதிசயம். திவ்யதேசங்களிலுள்ளவை ஹேவத்கடாக்ஷவிஷயமாகையாலே யுத்தேச்யமென்னுமதுக்கு ஐகிஞ்சித்கரம் - பிள்ளைஜகந்நாத இத்யாதி. எம்பார் அருளிச்செய்த வார்த்தை * மானேய்நோக்கிலே கண்டுகொள்வது. இவை அவன் கடாக்ஷவிஷயமென்றதுக்கைகிஞ்சித்கரம் - ஆச்சான் இத்யாதி. சூரவன்பாக்கு - ஸ்லாக்யமான

† 'குருந்துமுதலான வ்ருக்ஷங்களை' என்றிருக்கலாம்.

சுரவன்பாக்குக்கூ பட்டருக்குக் கோடுவந்துகோடுத்தாராய், அவற்றைக்கண்டு "இவை யிருந்தபடியென்? * திருவருள்கமுகினின்றும்வந்தவையோ?" என்றருளிச் செய்தாராம். நீராலே வளர்ந்தவையன்றே, அவனுடைய கடாக்ஷத்தாலே வளர்ந்தவையிறே. [அனந்த புரநகர்மாயன்] - ஸ்ரீவைகுண்டத்தைவிட்டு "தாழ்ந்தார்க்கு முகங்கோடுக்கலாம்" என் னுமத்தாலே திருவனந்தபுரத்தை விடமாட்டாதே நிற்கிற லீலகுணதிக்யத்தைச் சொல்லு கிறது. [நாமமொன்றுமோராயிரமாம்] - ஒருதிருநாமந்தானே விரோயிகளைப்போக்கி ரக்ஷிக்குமென்னுமிடஞ் சொல்லிற்றிறே; அப்படியே ஆயிரம்படி ரக்ஷகமான ஆயிரந்திரு நாமத்தையுடையவன். [உள்ளுவார்க்கு] - உத்தேச்யதை குறைவற்றிருந்தது, இனி அநுஸந்திப்பாரேயிறே தேட்டம். [உள்ளுவார்க்கு] - ஸ்ரீவைகுண்டத்திலே நித்யஸூரி களோலக்கங்கோடுக்க அவர்கள் நடுவேயிருக்கக்கடவ ஸர்வேச்வரன், "தாழ்ந்தார்க்கு முகங்கோடுக்கலாம்" என்று இத்தேசத்தை விரும்பிவர்த்திக்கிற நீர்மையிலேற்றத்தை அநுஸந்திக்கவல்லார்க்கு. [உம்பரூரே] - திருநாமங்களை யநுஸந்திப்பார்க்கு, அவ்விடந் தானே யும்பரூரென்றுமாம்; அன்றியே, உள்ளுவார்பெறுமிடம் உம்பரூரென்னவுமாம். அவ்விடந்தானுமுத்தேச்யமாகிறதும் அவன்விடாதே வர்த்திக்கையிறே. இனி ஸ்மர்மைக்ய முடையவன் தான் இவ்விடத்தே வர்த்தியாநின்றால் பின்னை இவ்விடமேஉத்தேச்யமாகத் தட்டில்லையிறே. (உ)

மூன்றும் பாட்டு.

ஊரும்புட்கோடியும் அஃதே உலகெல்லாம்உண்டுமிழ்ந்தான்
சேரும்தண்ணனந்தபுரம் சிக்கெனப்புகுதிராகில்
தீரும்நோய்வினைகளெல்லாந் திண்ணம்நாம்அறியச்சொன்னேம்
பேருமோராயிரத்துள் ஒன்றுநீர்பேசுமினே.

ஆ—(ஊரும்புள்.) - ஹேயோபகரணங்களினுலும் லீலோபகரணங்களினு லும் பரிபூர்ணனாயிருந்த எம்பெருமானுக்கும் ப்ராப்யமான திருவனந்தபுரத்திலே

பாக்கு. "திருவருட்கமுகு" என்றதனுக்கர்த்தம் - நீராலே இத்யாதி. அனந்தபுரநகரில் ஆச்சர்யமே தென்ன - ஸ்ரீ வைகுண்டத்தை இத்யாதி. 'சொல்லிற்றிறே' - முதற்பாட்டிலேயென்றபடி. திரு நாமங்களாயிரத்தையு முடையவ னென்றது - ப்ராஸங்கிகம். "உள்ளுவார்க்கு" என்றதற்கு அவதா ரிகை - உத்தேச்யதை இத்யாதி. "ஒன்றுமோராயிரமாம்" என்றது - ஒருநாமமே ஆயிரம் ப்ரகாரம் ரக்ஷகமாமென்னுதல், குணசேஷ்டிதாதிகளேயொழிய நாமமொன்றுமே ஆயிரமுண்டாயிருக்கு மென்னுதல்; 'என்னுதல்' என்கையாலே - இவ்வர்த்தத்வயமும் தோற்றுகிறது. "ஓராயிரமாம்" என்றதற்போலே "உள்ளுவார்க்கு" என்றதற்கு ஹ்ருதய-நிநாமங்களை இத்யாதி. கீழே, நாமத்தை உள்ளுவர்க்கு என்றருளிச்செய்து, "மாயன்" என்றதிற்சொன்ன சிலகுணத்தையுள்ளு வார்க்கு என்றவர்த்தாந்தரம் - ஸ்ரீவைகுண்டத்திலே இத்யாதி. இது சதுர்விம்ஸத்ஸஹஸ்ரத்திலே ஸ்புடம். அவ்விடந்தானே - திருவனந்தபுரந்தானே. நித்யவிபூதியன்றே வுத்தேச்யமென்ன - அவ்விடந்தானும் இத்யாதி. அவ்விடந்தானும் - பரமபதந் தானும். இவ்விடமே - திருவனந்த புரமே. உம்பரூர் - * ஹேவாநாம்ஹ்ருதித்யர்த்த:. பரமபதம். "உம்பரூர்" என்றதற்கு - திருவனந்த புரமே யும்பரூரென்னுதல், திருநாமங்களை யநுஸந்திப்பாரிருந்தவிடமே யும்பரூரென்னுதல், உள் ளுவார் பெறுமிடம் உம்பர்ஊரென்னுதல் என்றர்த்தத்ரயமாதல்; அர்த்தத்வயமாதல். (உ)

அநர்யப்ரயோஜநராய்க்கொண்டு புகுநிராகில் உங்களுடைய ஸமஸ்தது:஖ங்களும் போம்: இது நிஸ்ஸம்சயம்; இப்ப்ராப்யத்தைப்பெறுகைக்கும் ப்ரதிவந்யகம்போகைக்கும் ஆயிரந்திருநாமத்திலே ஒருதிருநாமத்தைச் சொல்லவேணுமென்னும் நியமமில்லை; அவ னுடைய அஸங்க்யேயமான திருநாமத்திலே வேண்டிற்றொரு திருநாமத்தைச் சொல் லுங்கோ ளென்கிறார்.

ஒ.—மூன்றும்பாட்டில், ப்ரதிவந்யகங்கள் போகைக்கு இன்ன திருநாம மென்று இல்லை, ஆயிரத்திலும் ஏதேனுமொன்றைச் சொல்லவமையு மென்கிறார்.

[ஊரும்புள்ளென்றுமேலுக்கு] - ஸர்வவிய ஸுஷவ்ருத்தியும் பெரிய திருவடி யைக் கொள்ளுவதுஞ்செய்து ஜகத்துக்கு ஸர்வவிதரக்ஷணமானவன் கண்வளர்ந்தரு ளுகிற நிரதிஸயபோக்யமான திருவனந்தபுரத்தைப் பரமப்ராப்யமென்று அங்கேபுகுவுதி கோளாகில், து:஖ங்களும் து:஖ஹேதுவான பாபங்களுமெல்லாம் போம்; ஒருவர்க் கும் தெரியாத ரஹஸ்யத்தை வ்யக்தமாம்படி நாங்கள் சொன்னோம்.

ப.—அநந்தரம், அத்தேசத்தை ப்ராபித்தவளவிலே ஸமஸ்தவிரோதிகளும் கழலும்: ஸர்வரக்ஷகனான அத்தேசிகனுடைய திருநாமங்களாயிரத்திலும் ஏதேனு மொன்றையுஞ்சொல்லி அநுபவியுங்கோ ளென்கிறார்.

(ரக்ஷணார்த்தமாக), புள் - பெரியதிருவடியை, ஊரும் - நடத்தாநிற்கும், கொடியும் - ரக்ஷணத்துக்குக்கட்டினகொடியும், அஃதே - அதுவே: (சென்று ரக்ஷிக்க வொண்ணாத ப்ரளயத்தளவில்), உலகெல்லாம் - லோகத்தையெல்லாம், உண்டு - அமுது செய்து (வயிற்றிலேவைத்துரோக்கி), உமிழ்ந்தான் - ப்ரளயாநந்தரமுமிழ்ந்தவன், சேரும் - பிற்பாடர்க்கு முகங்கொடுக்கைக்காகக் கண்வளர்ந்தருளுகிற, தண் - ஸ்ரமஹரமான, அனந்தபுரம் - திருவனந்தபுரத்தை, சிக்கென - அநந்யப்ரயோஜநத்வ வ்யவஸாயத்தை யுடையீர்களாய்க்கொண்டு, புகுநிராகில் - ப்ராபிப்புநிரோளாகில், நோய் - (ப்ரதியோஜ நாந்தரருசியான) நோயும், வினைகளெல்லாந்தீரும் - (அதுக்கடியான) கர்மங்களும் நிரவ ஸேஷமாகநசிக்கும்; நாம் - இவ்வர்த்தத்தில் நிலவரானநாங்கள், (உங்களுக்கு), அறிய - அறியும்படி, திண்ணம் - த்ருடமாக, சொன்னோம் -; (அங்குச்சென்றால்), பேருமோரா யிரத்துள் - அவனுடைய அநுரூப்யமான நாமமாயிரத்திலும் வைத்துக்கொண்டு, ஒன்று - ஏதேனுமொன்றை, நீர் -, பேசுமின் - சொல்லுங்கோள். ரோக்யமாமிடத் தில் ப்ரயாநாப்ரயாந விஷாமமில்லையென்று கருத்து.

இ.—மூன்றும்பாட்டில், ப்ரதிவந்யகங்கள் போகைக்கு தேசப்ராப்தியே அமையும், ஆயிரந்திருநாமத்திலும் ஏதேனுமொன்றைச் சொல்லுங்கோள் என்கிறார்.

[ஊரும்புள்] - வாஹநமான தான பெரியதிருவடி. [கொடியும் அஃதே] - இது நித்யஸூரிகளுக்கும் உபலக்ஷணம். இது, நித்யஸூரிகளுக்குக் கொடுத்துவைக்கும் நாநாரஸாநுபவத்தை இன்றுசெல்லு மவனுக்கும் கொடுக்குமென்னுமிதுக்காகச் சொல்லுகிறது. [உலகெல்லாம் உண்டுமிழ்ந்தான்] - ப்ரளயாபத்தில் ஆபத்தேமுதலாக வரையாதே திருவயிற்றிலேவைத்து, உள்ளிருந்து நோவுபடாதபடி வெளிநாடுகாண உமிழ்ந்தான். [சேரும்] - இப்படி உபயவிபூதியையும் நிர்வஹிக்கிறவன் ஸ்ருஷ்ட மான ஜகத்தினுடைய ரக்ஷணார்த்தமாகத் தன்செல்லாமையாலே வந்து கண்வளர்ந்தரு ளுகிற நிரதிஸயபோக்யமான திருவனந்தபுரத்தை. [சிக்கெனப் புகுநிராகில்] - "உய

வாநராவதபூதை'' என்கிறபடியே மீட்சியில்லாத ருசியோடேபோய்ப் புகுவதிகோளாகில், ஊவெங்களும் ஊவெஹேதுக்களான பாபங்களும் போம். [திண்ணம் நாம் அறியச்சொன்னோம்] - அநுஜீவித்துக் கைவந்த நாங்கள், ஒருத்தர்க்கும் தெரியாத ரஹஸ்யத்தை வ்யக்தமாக அறியும்படி சொன்னோம். இதுண்டாய்க் கழிந்தார் வ்ருத்தியாகையாலே ஆப்தமென்கை. ப்ரதிபத்தி பண்ணுதார் இழக்குமித்தனை. ஊவநிவ்ருத்திக்கு தேசப்ராப்தியே அமையும்; குணசேஷ்டிதங்களுக்கு வாசகமான திருநாமங்கள் ஆயிரத்திலும் ஒரு திருநாமத்தைச் சொல்லி அநுஜீவியுங்கோள்.

ஏடு.—மூன்றும்பாட்டு. ப்ரதிவந்யகங்கள்போகைக்கு தேசப்ராப்தியேயமையும்: ஆயிரந்திருநாமத்திலும் ஏதேனுமொன்றைச்சொல்லி யநுஜீவியுங்கோளென்கிறார்.

[ஊரும்புள்] - பெரியதிருவடியை வாஹநமாகக்கொண்டு நடத்தும். [கொடியுமஃதே] - இது நித்யஸூரிகளுக்கும் உபலக்ஷணம். அல்ப்ருஷ்டலம்லாரஹ்யர்க்கு ''சென்றூற்குடையாம்'' என்கிறபடியே உண்டாகச் சொல்லுகிற நாநாஹாவம், இன்று போய்க்கிட்டினவனுக்கும் வாசியறக் கொடுக்கு மென்கைக்காகச் சொல்லுகிறது. இவன் ''அஹம்ஸர்வபாபேப்யோமோக்ஷயிஷ்யாமி'' (அஹம்ஸர்வம்கரிஷ்யாமி) என்றிருந்தாலும் ஹலமில்லையிறே, ''குருஷ்வ'' என்று அவன்அப்படி கொள்ளாதவன்று. இவனுக்கு கிஞ்சித்கரியாதவன்று ஸ்வரூபலாஹமில்லை. நிரபேக்ஷனானதான் குறையநின்று இவனுடைய குறையைத்தீர்க்குமாய்த்து. தான் ஸாபேக்ஷனுய் நின்று இவனை நிரபேக்ஷனாக்கும். இவனுக்கு ஸ்வரூபஸித்தியுண்டாம்படி பண்ணிக்கொண்டு நிரபேக்ஷனாகவேணுமிறே அவனுக்கு. இவனுடைய ஸ்வரூபஸித்த்யர்த்தமாக அவன் தன்னைத் தாழவிட்டானென்றுள், அதுதானே நைரபேக்ஷ்யத்துக்கு உடலாயிருக்குமிறே அவனுக்கு. ''இன்னுரதனென நின்றான்'' என்றபின்பிறே அவனுக்கு ஸ்வரூபஸித்தியுண்டாய்த்து. [உலகு இத்யாதி]-ஸம்

மூன்றும்பாட்டு.—ஊநம் இத்யாதி. ''அனந்தபுரம் சிக்கெனப்புகுதிராகில் தீரும் நோய் வினைகளெல்லாம். பேருமோராயிரத்துள் ஒன்று நீர்பேசுமின்'' என்றவற்றைக் கடாகூத்தவதாரிகை - ப்ரதிவந்யகங்கள் இத்யாதி.

''புள்ளூ - ஊரும்'' என்றந்வயிப்பது. இது உபலக்ஷணமென்கிறார் - நித்ய இத்யாதி. நித்யஸூரிகளுக்கும் உபலக்ஷணம் என்றது - பெரியதிருவடி யொருவனையும் வாஹநமாகவும் கொடியாகவும் கொள்ளுமென்ற இது, நித்யஸூரிகளெல்லாரையும் ஒவ்வொருத்தரையே அநேக சேஷவ்ருத்திகள் கொள்ளுமென்றுமதனுக்கும் உபலக்ஷணமென்றபடி. இப்படிப்ரயோகத்துக்கு ஹேது- அஸ்ப்ருஷ்ட இத்யாதி. அவன் கொடுக்கிறதென், தானேசெய்யவொண்ணுதோவென்ன - இவன் இத்யாதி. ''அஹம்ஸர்வபாபேப்யோமோக்ஷயிஷ்யாமீஜாதஃஸ்வயமதிஸ்ருதெஸ்வராம்ஸ்ச'' இத்யாதி ''கரஸ்வேதிநசேத்வரம்வெயமேவம்நெஹவிஸ்வதெ । கூதாயெபூஹமஹவிஷ்யாமி தவயாபூர்வகூவதெ'' இத்யயோத்யாகாண்டே லக்ஷ்மணஃ. (நக-உக,-உஉ) பூர்ணனவன் இவனைக்கொண்டு கைங்கர்யம் கொள்ளுகிறதென்னென்ன - இவனுக்கு இத்யாதி. ஆகையாலே நிரபேக்ஷனென்று சூட்டுவது. விவரணம் - தான் ஸாபேக்ஷனென் இத்யாதி. ஆனாலும் நைரபேக்ஷ்யஹாநிவாராதோவென்ன - இவனுக்கு இத்யாதி என்னுதல்; கீழ்-பரார்த்தமாக ஸாபேக்ஷனாகையாலே நைரபேக்ஷ்யஹாநியில்லையென்றருளிச்செய்து, இங்கே - ஸ்வநைரபேக்ஷ்ய லித்தியும் இவனையும் நிரபேக்ஷனாக்கினலென்கிறார் - இவனுக்கு இத்யாதி என்னுதல். விவரணம் - இவனுடைய இத்யாதி. தாழவிட்டது நைரபேக்ஷ்யத்துக்கு உடலாகக்கண்ட விடமுண்டோவென்ன - இன்னுரதானென் இத்யாதி. திருமொழி இரண்டாம்பத்து, ''மூன்னுர்தானே'' இத்யாதி. நின்றான் - ஸத்தை

ஸாரஸ்பர்ஶமில்லாதாரை எல்லாவடிமைகளும் கொள்ளுகையன்றிக்கே, ப்ரளயாபத்தில் லோகத்தை யெடுத்து வயிற்றிலேவைத்து நோக்கி, பின்னை யுள்ளேகிடந்து தளரவொண்ணுதென்று வெளிநாடுகாண வுமிழ்ந்தவன். [சேரும்தண்ணனந்தபுரம்] - ப்ரளயாபத்தில் ஜகத்துக்கு அவன்வயிற்றில் புகாதபோது உண்டான செல்லாமையோபாதியும் போருமாய்த்து,அவனுக்குஇத்தேசத்தில் புகுராதபோதுஉண்டானதரிப்பறுதி; ப்ரளயாபத்தினின்றும் ஜகத்தையடைய ரக்ஷித்தவன் † (ஸ்ருஷ்டமான ஜகத்தினுடையரக்ஷணுர்த்தமாக) வந்துசேருகிற விடமென்னுதல், அவன் நிர்ப்பரனுய்க்கொண்டு சாய்ந்தருளுகிற விடமென்னுதல். [தண்ணனந்தபுரம்] - ப்ராந்தியாலே அவன்இப்படி விரும்புகிறனல்லன்; ஹேய்யதையாலே விடமாட்டாமையாய்த்து. உகந்தருளினநிலமாகில் இப்படியிருக்கவேண்டாவோ?''தானுகந்தவூர்''என்னக்கடவதிறே.தானுமுகந்த நித்யஸூரிகளும் உகக்குமிடமிறே பரமபதம்; இங்குத் தன்னுகப்பேயிறே: இவர்கள் வைமுக்யம்பண்ணுநிற்கச்செய்தேயும் தான் விடமாட்டாதே அவஸரப்ரதீக்ஷனுய் நிற்கிறவிடமிறே. [சிக்கென] - ''நவவ்யூஹாவதூதே'' (நசபுநராவர்த்ததே) என்கிறபடியே மீளாதருசியையுடையீர்களாய்க்கொண்டு கிட்டுவதிகோளாகில். [தீரும்இத்யாதி]-ஊஹங்களும் ஊஹஹேதுக்களுமெல்லாம் நசிக்கும். [திண்ணம்] - ''ஸத்யம்ஸத்யம்புநஸ்ஸத்யம்) என்னுமாபோலே. [நாம்அறியச்சொன்னேம்] - சரதமாக அநு஭வத்தாலே கைகண்ட நாம்,இதில் வாசியறியாத நீங்களும் இழக்கவொண்ணுதென்று உங்கள் நெஞ்சிலே படும்படிசொன்னேம். [நாம்] - நெடுநாள் க்லேஶப்பட்டுக் கரைகண்டவரிறே. [சொன்னேம்] - இனி கர்மவஶ்யராய்ப்படுமேவர்கள், சொன்னவார்த்தை ப்ரதிபத்திபண்ணுமையாலே படுகிறார்களத்தனை ; நம்மேல் குறையற நாம் சொன்னேம். செயலுக்கு தேசப்ராப்திஅமையுமென்றிர், இனிச்சொல்லியிருக்க வடுப்பதென் என்ன ?-[பேரும்ஓர்இத்யாதி]-ஒருதிருநாமந்தானே ஆயிரம்படி ரக்ஷகமான ஆயிரந்திருநாமத்தையுடையவனென்று சொன்னேமிறே முன்பே; அதில் வாய்க்குத்தோற்றிற்றுஒரு திருநாமத்தைச் சொல்லுங்கோள். [பேசுமினே]-மநஸ்ஸஹகாரமும் வேண்டா. (கூ)

பெற்ருன். ''உலகெல்லாமுண்டுமிழ்ந்தான் சேரும்'' என்றபதச்சேர்த்திக்கு ஹேவம் - ப்ரளயாபத்தில் ஜகத்துக்கு இத்யாதி. உக்தத்தை யநுவதியாகின்றுகொண்டு, பதச்சேர்த்திக்கு ஹேவார்த்தரம் - ப்ரளயாபத்தினின்றும் இத்யாதிவாக்யத்வயம். ''சேரும்'' என்றது - ரக்ஷ்யாபேக்ஷையோடேவந்து நிற்கிறவென்னுதல், சாய்ந்தருளுகிறவென்னுதலென் றர்த்தத்வயம். ''தண்'' என்றதுக்கு ஹேவம் - ப்ராந்தியாலே இத்யாதி. ஈடுபாடு - உகந்தருளின இத்யாதி. இப்படியிருக்கவேண்டாவோ வென்றது - ஈஸ்வரன விரும்பும்படி ஹேய்யமாயிருக்க வேண்டாவோவென்றபடி. ''அவன் விரும்பினதே உகந்தருளினநிலம்'' என்றதுக்கு ப்ரமாணம் - தானுகந்த இத்யாதி. ''அலம்புரிந்த'' இத்யாதி, திருநெடுந்தாண்டகம். இதுக்கர்த்தம் - தானும் இத்யாதி. ''தன்னுகப்பேயிறே'' என்றத்தை விவரிக்கிறார் - இவர்கள் இத்யாதி. சாதம் - நிஶ்சிதம். ''நவவ்யூஹாவதூதே நவவ்யூஹாவதூதே'' இதி சாந்தோக்யே. (அ-கரி-சரமனதி) ''ஸத்யம்ஸத்யம்புநஸ்ஸத்யமேவைதத்ரயம்நாவ்ருத்திநஷ்டெவம்கோவாதூரே'' இதிமஹாஹாரதே. ''அறிய'' என்றதுக்கு ஹேவம்-இதில்வாசி இத்யாதி. அப்படி கைகண்டாரோவென்ன-நெடுநாள் இத்யாதி. ''சொன்னேம்'' என்ற ஹேதுநிர்த்தேசத்தால் ஹேலிதம்-இனி கர்மவஶ்யராய் இத்யாதி. செயலுக்கு - காயிகவ்யாபாரத்துக்கு. சொன்னேமிறே முன்பேயென்றது- ''ஓராயிரமாய்'' என்கிறபாட்டிலேயென்றபடி. ''பேசுமின்'' என்றதுக்கு ஹேவம்-மநஸ்ஸஹகாரமும் இத்யாதி. அத்விதீயமான ஆயிரந்திருநாமத்திலும் வைத்துக்கொண்டு ஏதேனுமொன்றைச் சொல்லுங்கோளென்று ஸப்தார்த்தம்.

(கூ)

நான்காம் பாட்டு.

பேசுமின்கூசமின்றிப்பேரியநீர் வேலைசூழ்ந்து
வாசமேகமழுஞ்சோலை வயலணியனந்தபுரம்
நேசஞ்செய்துறைகின்றானெறிமையால்மலர்கள்தூவிப்
பூசனைசெய்கின்றார்கள் புண்ணியஞ்செய்தவாறே.

ஆ.—(பேசுமின்.) - நாம் அகர்ஹரென்று கூசாதே அவன்திருநாமத்தைச் சொல்லுங்கோளென்றுசொல்லி, அடிமைசெய்கையிலே அவர்களுக்கு ஸ்ப்ருஹைபெறு கைக்காகத் திருவனந்தபுரத்தில் எம்பெருமானுக்கு அகிஞ்சநராய்க்கொண்டு அடிமைசெய்கிறவர்கள் என்னபுண்யஞ்செய்தாரோவென்று, அவர்களுடைய ப்ரஹ்மஸ்ரூவத்தாலே ப்ராப்யமான அடிமையினுடைய உத்கர்ஷத்தைச் சொல்லுகிறார்.

ஒ.—நாலாம்பாட்டில், ஆஸ்ரயிப்பார்க்கு ருசிபிறக்கைக்காக, 'திருவனந்தபுரத்தில் எம்பெருமானுக்கு அகிஞ்சநராய்க்கொண்டு அடிமை செய்கிறவர்கள் என்னபுண்யம் செய்தார்களோ?' என்கிறார்; அவர்கள் ஹர்யம்பண்ணினபடியைப் பேசுங்கோள் என்றுமாம்.

[பேசுமின் கூசமின்றி] - அயோக்யரென்று கூசாதே திருநாமத்தைச்சொல்லுங்கோள். [பெரியநீர் என்றுதொடங்கி] - பெரியகடலைசூழ்ந்து நிரந்தரமான பரிமளத்தையுடைய சோலையோடுகூடினவபலாலே அணியப்பட்ட திருவனந்தபுரத்தை விரும்பி அங்கே கண்வளர்ந்தருளுகிறவனை.

ப.—அநந்தரம், ஆஸ்ரிதரக்ஷணார்த்தமான நிரவதிக வாத்ஸல்யத்தையுடையனுய்க்கொண்டு திருவனந்தபுரத்திலே வர்த்திக்கிறவனை ஆராதிக்கிறவர்களுடைய ஹர்யாதிஸயத்தை ஸ்லாகிக்கப்பாருங்கோள் என்கிறார்.

பெரிய - ஸம்ருத்தமான, நீர் - ஜலத்தையுடைத்தான, வேலை - கடலாலே, சூழ்ந்த - சூழப்பட்டு, வாசமே கமழும் - பரிமளத்தைப்பரப்பாகிற்கிற, சோலை - சோலைகளையும், வயல் - வயல்களையும், அணி - அலங்காரமாகவுடைய, அனந்தபுரம் - திருவனந்தபுரத்திலே, நேசம்செய்து - (ஆஸ்ரித மூவப்ரகாரமாக) நிரதிஸய வாத்ஸல்யத்தைப்பண்ணி, உறைகின்றானை - நித்யவாஸம்பண்ணுகிறவனை, நெறிமையால் - அவன் ஸேவித்வாதரூபமான மார்க்கத்தாலே, மலர்கள் - புஷ்பாத்புபகரணங்களை, தூவி - (ப்ரேமபரவசராய்க்கொண்டு) விநியோகித்து, பூசனைசெய்கின்றார்கள் - ஆராதிக்கிறவர்கள், புண்ணியம் - ஹர்யத்தை, செய்தவாறு - பண்ணினப்ரகாரத்தை, கூசமின்றி - (உங்களுடைய) அயோக்யதையைப்பாராதே (வத்ஸலனானவனை ஆராதிக்கிறவர்களுடைய வாத்ஸல்யாதிஸயத்தைப்பார்த்துக்) கூசாதே, பேசுமின் - ஸ்லாகிக்கப்பாருங்கோள்.

இ.—நாலாம்பாட்டில், ஆஸ்ரயிப்பார்க்கு ருசிபிறக்கைக்காக, 'திருவனந்தபுரத்திலேபுக்கு அடிமைசெய்கிறவர்கள் என்ன ஹர்யவான்கள்!, என்கிறார்; அவர்கள் ஹர்யம் பண்ணினபடியைப் பேசுங்கோள் என்றுமாம்.

[பேசுமின் கூசமின்றி] - உங்கள் அயோக்யதையைப்பார்த்துக் கூசாதே, அத்தலையில் நீர்மையையும் ப்ராப்தியையும் பார்த்துப் பேசுங்கோள். வளவேழுலகில்

தமக்குப்பிறக்க விருப்பு இவர்களுக்கும் ஒக்குமென்றிருப்பரிறே. [பெரியீர் இத்யாதி] - பெரியீரையுடைத்தான கடல்சூழ்ந்திருப்பதாய் நிரந்தரமான பரிமளத்தையுடைய சோலையோடுகூடின வயலாலே அலங்க்ருதமான திருவனந்தபுரம். சோலையின் பரிமளம் புறப்படாதபடி மதிளிட்டாற்போலேயாய்த்துக் கடலிருப்பது. கடலில் நாற்றம் மேலிடாதபடி பாய்த்தப் பரிமளம் விஞ்சிருப்பது. [நேசஞ்செய்து உறைகின்றீரீன] - பரமபதத்திற்காட்டில் வ்யாவ்ருத்தி; "ஸுகமாவஸாவ" என்கிறபடியே. ஆர்த்தரக்ஷணத்துக்கு உடலான தேசமென்று ஸ்நேஹித்து நித்யவாஸம்பண்ணுகிறவனே. அத்தேசத்துக்கு ஆர்த்தரில்லாக் குறையுண்டிறே. "ஆர்த்தரில்லாதவிடமும் ஒருவாஸஸ்தானமோ?" என்று அத்தேசத்தை வசைபாடியாய்த்திருப்பது. 'நேசஞ்செய்து உறைகின்றீரீன-பேசுமின் கூசமின்றி' என்னுதல்; 'புண்ணியஞ்செய்தவர்த்தை-பேசுமின் கூசமின்றி' என்னுதல். [தெறிமரபால் இத்யாதி] - அநந்யப்ரயோஜநராய், சூட்டுநன்மாலைப்படியே புஷ்பாதியுபகரணங்களைக்கொண்டு அக்ரமமாக ப்ரயோஜிக்கும் அடிமைசெய்யுமவர்கள் நித்யஸூரிகளிற்காட்டில் ஸாதிகர்: ஸம்ஸாரத்திலே நித்யஸூரிகள் பரிமாற்றத்தையுடையவர்கள் ஸாதியாயிகரன்றே? அப்போது, புண்ணியஞ்செய்தவாறே! என்று ஆஸ்சர்யம். இவர்கள்படியைப் பேசும்போது ஸர்வேஸ்வரனைப் பேசுமதிற்காட்டில் கூச்சமறப் பேசலாமிறே.

ஈடு.—நாலாம்பாட்டு. ஆஸ்ரயிப்பார்க்கு ருசிபிறக்கைக்காக, 'திருவனந்தபுரத்திலேபுக்கு அடிமை செய்கிறவர்கள் என்ன ஸாக்யவான்கள்!' என்கிறார்; அவர்கள் ஸாக்யம்பண்ணினபடியைப் பேசுங்கோளென்றுமாம்.

[பேசுமின்கூசமின்றி] - உங்கள் அயோக்யதையைப்பார்த்துக் கூசாதே பேசுங்கோள். தாம் * மயர்வறமதிநலம்அருளப்பேறச்செய்தேயும், அநாதிகாலம் ஸம்ஸரித்துப்போந்த வாஸனையாலே "அருவினையேன்" என்று பேசுகைக்குக் கூசினவிது, இவர்களுக்கும் உண்டென்றிருக்கிறார். ஸ்ரீவத்விஷயத்தைப் பேசும்போது கூசத்தான்வேண்டாவிறே: அப்ரதிபத்தியாலேயிறே பேசாதிருந்தது; ப்ராப்தவிஷயமென்றறியவே கூசாதே பேசலாமிறே. [பெரியீர் இத்யாதி] - மிக்கஜலத்தையுடைத்தான கடலாலேசூழப்பட்டு, வாசமேகமழாநிற்குமாய்த்துச்சோலை. சூழப்போந்தசோலையில் பரிமளம் புறம்புபோகாதபடி மதிளிட்டாற்போலேயாய்த் திருப்பது கடல். [வாசமே கமழும்] - கடலில் நாற்றம் மேலிடாதபடி சோலையில் பரிமளமே விஞ்சியிருக்குமாய்த்து; இப்படிப்பட்ட சோலையையுடைத்தான வயலாலே யலங்க்ருதமான திருவனந்தபுரத்தை. 'நேசஞ்செய்துறைகின்

நாலாம்பாட்டு.—பேசுமின் இத்யாதி. "பூசனைசெய்கின்றீர்கள் புண்ணியம் செய்தவாறே" என்றதத்தைக் கடாஸுத்தவதாரிகாத்வயம் அருளிச்செய்கிறார் - ஆஸ்ரயிப்பார்க்கு இத்யாதிவாக்யத்வயத்தாலே..

இவர்களுக்குக்கூச ப்ரஸக்தியேதென்ன - தாம் இத்யாதி. அவனைப்பேசும்போது கூச வேண்டாவென்னுமத்தையும், இப்படியிருக்கச்செய்தேயும் தாம் கூசியகன்றதற்கு ஹேதுவையும், அவனைக் கூசாதேபேசுகைக்கு ஹேதுவையும் அடைவேயருளிச்செய்கிறார் - ஸ்ரீவத்விஷயத்தை இத்யாதி வாக்யத்ரயத்தாலே. "வேலைசூழ்ந்து வாசமேகமழும்" என்ற பதச்சேர்த்திக்கு ஸ்ரீவம்-சூழப்போந்த இத்யாதி. "வாசமே" என்ற அவதாரணார்த்தம் - கடலில் இத்யாதி. "கடலில் நாற்றம் மேலிடாதபடி" என்றதற்கு ஸ்வாபதேயம் - ஸம்ஸாரஜந்துக்கள் தட்டாதபடியென்ற. சோலையையுடைத்தான வென்றது-சோலையையு முடைத்தாயென்றபடி. பாட்டின் முந்தினவவதாரிகைக்குச்சேர அந்வயம்-நேசஞ்செய்து இத்யாதி வாக்யத்வயம். த்விதீயாவதாரிகைக்குச் சேர அந்வயம்-

ரூனை - பேசுமின் கூசமின்றி' என்று கீழோடே கூட்டவுமாம்; அப்போது, ''நேசஞ்செய்துறைகின்ரூனை - பூசனைசெய்கின்றார்கள் புண்ணியம் செய்தவாறோ?'' என்றது - ஆச்சர்யத்திலே யாகிறது. அன்றிக்கே, பெரியநீர் தொடங்கி - 'பூசனைசெய்கின்றார்கள் புண்ணியஞ் செய்தவாற்றை - பேசுமின் கூசமின்றி' என்னவுமாம்; அப்போது, கூச்மின்றிப் பேசுகையாவதென்? என்னில்,—ஹரிவத்விஷயம்போலே வாய்வந்தபடி சொல்லவொண்ணுதிறே ஹரிவத விஷயம். [நேசஞ்செய்துறைகின்ரூனை] - பரமபதத்தில் தவிரவொண்ணுமையாலே யிருக்குமத்தனை. அவ்விடத்தை வசைசொல்லியாய்த்து இங்குவர்த்திப்பது; ''ஆர்த்தரக்ஷணத்துக்கு உடலல்லாதவிடமுண்டோ ஒரு வாஸஸ்த்தாநமாயற்றதோ!'' என்று, ஆர்த்தரக்ஷணத்துக்குப் பாங்கானதேஹமென்று விரும்பிவர்த்திப்பது இங்கேயாய்த்து; ''ஸுகிகம்வாரவாஹ'' (அதிகம்புரவாஸாச்ச). [நெறிமையால் மலர்கள்தூவி]; - ''ஸர்வேஸ்வரன் போஷி; இவ்வாத்மவஸ்து அவனுக்குபோஷம்'' என்கிற முறைமையாலே, புஷ்பாதியுபகரணங்களை அவன்திருவடிகளிலே பணிமாறி; அன்றிக்கே, அவன்தான் இத்தேஹத்தை ஸ்நேஹித்து வர்த்திக்கிறாப்போலே தாங்களும் ஸ்நேஹத்தையுடையராய் மலர்கள் தூவியென்னுதல்; இவர்கள் வர்த்திக்கிறவிடமென்று அவன் விரும்பிவந்தவோபாதி தாங்களும் ஒருப்ரயோஜநத்தைக் கணிசியாதே யாஸ்ரயித்தென்னவுமாம். [புண்ணியஞ்செய்தவாறே] - * சூட்டுநன்மாலைகள் தூயனவேந்தி அடிமைசெய்கிறவர்களதும் ஓரடிமையாயற்றதோ! ஸ்ரீஹரதாழ்வானைப்போலே யாய்த்துஅவர்கள்; இங்கேபெருமாளைப்போலேயாய்த்து இவர்கள். அவன் விட்டுப்போரச்செய்தேயும், பாரதந்த்ர்யத்தாலே விடமாட்டாதே கிடக்கிறார்களித்தனையிறே. (சை)

அன்றிக்கேஇத்யாதி. ஹரிவதர்களைப்பேசும்போது கூச்சத்துக்கு ப்ரஸக்திபோதென்கிற ஸங்கையை யநுவதித்துப் பரிஹரிக்கிறார் - அப்போது கூசமின்றி இத்யாதிவாக்யத்வயத்தாலே. 'அப்போது' என்றவநந்தரம், ''ஹரிவதவிஷயத்தை'' என்றநுகூட்டுவது. 'வாய்வந்தபடி சொல்லவொண்ணுதிறே ஹரிவதவிஷயம் என்றது-அவர்கள் அவனிலும் பூஜ்யராகையாலே பேசப்போகாதென்றபடி. ஆனால் பேசும்படியென்னென்ன; பூஜ்யரேயாகிலும் லீலாரஸாகையாலேபேசத்தட்டில்லையென்றருத்து. ''அனந்தபுரம்நேசஞ்செய்து'' என்றத்தால் ஹரிவம்- பரமபதத்திலீ இத்யாதி. கீழ்வாக்யவிவரணம் - அவ்விடத்தை இத்யாதி. வசை-தோஷம். இங்கே யவனுக்கு ஸ்நேஹமுண்டாகைக்கு ஹேதுவருளிச்செய்கிறார் - ஆர்த்தரக்ஷணத்துக்கு இத்யாதி. இவ்வாக்யாவதாரம் அவ்விடத்தை வசை இத்யாதி வாக்யம்அநுஸந்தேயம். இதுக்கு ஸம்வாதம் - அதிகம் இத்யாதி. ''ஸுகிகம்வாரவாஹ நெறி திவஜபூநாஸ்'' இதி சித்ரகூடே ஸீதாம்ப்ராதி ராமஸ்.(அயோ-கநி-கட) சித்ரகூடஸ்ய-பூர்ஸகம்-புரவாஸாத்-அதிகம்ச, மந்தாகிந்யா:-பூர்ஸகம்-தவ - பூர்ஸகாத்-அதிகம்ச-மந்யே இத்யந்வயஸ். நெறிமையால் - ஸேஷஸேஷிபாவமுறையாலேயென்னுதல், ஸ்நேஹமார்க்கத்தாலேயென்னுதல். த்விதீயார்த்தத்துக்கு, நெறிமையாலென்று-அவன் ஸ்நேஹித்தமார்க்கத்தாலேயென்றபடி. த்விதீயார்த்தவிவரணமாதல், த்ருதீயார்த்தமாதல் - இவர்கள் வர்த்திக்கிற இத்யாதி. த்ருதீயார்த்தமானபோது, ''நெறிமையால்'' என்றது - அநந்யப்ரயோஜநதையாலே யென்றபடி. ''செய்தவாறே'' என்ற ஸ்வரத்துக்கு பாவம், சூட்டுநன்மாலைகள் இத்யாதி. திருவீருத்தம். இருவருடையவும் ஆகிஞ்சந்யாநுகூலங்களுக்கு த்ருஷ்டாந்தம் - ஸ்ரீஹரதாழ்வான இத்யாதி வாக்யத்வயம். அவர்கள்- நித்யஸூரிகள். இவர்கள் - திருவனந்தபுரத்தில் லடிமைசெய்கிறவர்கள். நித்யஸூரிகள் ஸ்ரீஹரதாழ்வானைப்போலே யானபடியை இசைவிக்கிறார் - அவன்விட்டுப்போர இத்யாதி. 'பெரியநீர்' என்று தொடங்கி, 'நேசம்செய்துறைகின்ரூனை - கூசமின்றி - பேசுமின்; நேசம்செய்துறைகின்ரூனை நெறிமையால்' என்று தொடங்கி, 'புண்ணியம் செய்தவாறே' என்று விஸ்மிதராகிறாரென்னுதல்; பெரியநீர்' என்று தொடங்கி, 'புண்ணியம்செய்தவாற்றை - கூசமின்றி - பேசுமின்' என்றந்வயமாதல். (சை)

ஐந்தாம் பாட்டு.

புண்ணியஞ்செய்துநல்லபுனலோடுமலர்கள்தூவி
எண்ணுமின் எந்தைநாமம்இப்பிறப்பறுக்கும்அப்பால்
திண்ணம்நாம்அறியச்சொன்னேம்செறிபோழில்அனந்தபுரத்து
அண்ணலார்கமலபாதம் அணுகுவாரமராவார்.

ஆ.—(புண்ணியஞ்செய்து.) - நீங்களும் அங்ஙனே புண்யரூபமான திரு நாமத்தைச்சொல்லி நிரஸ்தஸமஸ்தப்ரதிபந்தகராய்த் திருவனந்தபுரத்திலேபோய்ப் புக்கு வாஸ்யாந்தஸ் ஸர்வகரணங்களாலும் எம்பெருமானுக்கு அடிமைசெய்யுங்கோள்! அவன் உங்களுடைய இந்தஸம்ஸாரத்தைப் போக்கும்; இப்போது தன் திருவடிகளை ஆஸ்ரயிக்கிற உங்களைப் பின்னை யமராக்கும்; இது நிஸ்சிதம். உமக்குத் தெரியச் சொன்னேம் என்கிறார்.

ஓ.—அஞ்சாம்பாட்டில், திருவனந்தபுரத்தில் ஆஸ்ரயிக்குமவர்கள் அயர் வறுமமரர்களோடு ஒப்பர் என்றுகொண்டாடி, அப்படியே நீங்களும் ஆஸ்ரயியுங்கோள் என்கிறார்.

[புண்ணியம் என்றுதொடங்கி] - ஸ்நேஹத்தைப்பண்ணி நல்லபுனலோடு கூடின மலர்களை ப்ரேமபரவஸராய்க்கொண்டு திருவடிகளிலே பணிமாறி என்ஸ்வாமி யுடைய திருநாமத்தை அநுஸந்தியுங்கோள்; அடிமைக்கு விரோதியான இஸ்ஸம்ஸா ரத்தை அறுக்கும். [அப்பால் என்றுமேலுக்கு] - வேறு அயர்வறுமமரர்கள் என்று சொல்லப்படுகிறவர்களும் செறிந்த பொழிலையுடைய திருவனந்தபுரத்திற் கண்வளர்ந் தருளுகிற ஸர்வேஸ்வரனுடைய நிரதிஸய போக்யமான திருவடிகளை ஆஸ்ரயிக்குமவர் கள்; இப்பொருள் நிஸ்சிதம்; இது வ்யக்தமாகச் சொன்னேம்.

ப.—அநந்தரம், திருவனந்தபுரத்திலே வர்த்திக்கிற நிரபாயகபோஷியான வன்திருவடியைக் கிட்டினவர்கள் ஸுகரிகளாகை அறுதி; ஆகலால், ப்ரேமபுரஸ்ஸராய்க் கொண்டு ஆராதித்து அவன் திருநாமங்களை அநுஸந்தியுங்கோள் என்கிறார்.

புண்ணியம்செய்து-லோகரக்ஷையான பக்தியைப்பண்ணி, நல்ல-ஹ்ருத்யமான ஹ்ருதயமாகையாலே அவனுக்கு ஆதரணீயமான, புனலோடு மலர்கள்-ஜலபுஷ்பாதிகளை, தூவி - (ப்ரீதிப்ரேரிதராய்க்கொண்டு) ப்ரயோகித்து, எந்தை - உத்பாதகனுடைய, நாமம் - திருநாமங்களை, எண்ணுமின் - நிரந்தராநுஸந்தானம்பண்ணி யநுபவியுங்கோள்; (இவ்வநுபவத்தானே), இப்பிறப்பு - த்ருஷ்டதோஷமான இஜ்ஜன்மத்தை, அறுக்கும் - அறும்படிபண்ணும்; அப்பால் - மேலும், செறிபொழில் - செறிந்த பொழிலையுடைத்தான, அனந்தபுரத்து - திருவனந்தபுரத்திலே, அண்ணலார்கமலபாதம் - திருபாயிகஸ்வாமியானவன் திருவடிகளை, அணுகுவார் - (உக்தப்ரகாரத்திலே) ஸ்நேஹ மாகக்கிட்டுமவர்கள், அமராவார் - * அயர்வறுமமரர்களிலே அந்யதமராவர்கள்; (இவ் வர்த்தத்தை), நாம் - (அஜ்ஞரான) நாங்கள், திண்ணம் - த்ருடமாக, அறிய-, சொன் னேம் - சொன்னேம்.

இ.—அஞ்சாம்பாட்டில், திருவனந்தபுரத்தில் ஆஸ்ரயிக்குமவர்கள் நித்ய ஸுரிகளாவர்கள்; ஆகையாலே, நீங்களும் ஆஸ்ரயியுங்கோள் என்கிறார்.

[புண்ணியம் செய்து] - ஸ்நேஹத்தைப்பண்ணி: வர்ணஸ்ரமஸ்தர்மதிகர் தவ்யதாகமான ஸத்திரூபாபந்ந ஜ்ஞாநத்தை நினைக்கிறது. "ஹ்ருகோ நாஹவ" என்னக்கடவதிறே. [நல்லபுனல் இத்யாதி] - நல்லபுனலோடேகூடின மலர்களைப்பரிமாறி: அர்ச்சனைகளைச் சொல்லுகிறது. "ஹ்ருயாஜீமாம நமஸ்குரு" என்னக்கடவதிறே: [எண்ணுமின் எந்தைநாமம்] - எண்ஸ்வாமியுடைய திருநாமத்தை அநுஸந்தியுங்கோள். இடறினவன் "அம்மே?" என்னுமாபோலே வகுத்தவனுடைய திருநாமத்தை அநுஸந்தியுங்கோள்: "ஸததம்கீர்தயந்தஃ" என்னக்கடவதிறே. [இப்பிறப்பறுக்கும்]- பிறவியினுடைய தோஷப்ராசுர்யம் ப்ரத்யக்ஷஸித்தமிறே. [அப்பால் - அமராவார் - செறிபொழிலணந்தபுரத்து அண்ணலார் கமலபாதம் அணுகுவார்] - செறிந்தபொழிலையுடைய திருவனந்தபுரத்திலே கண்வளர்ந்தருளுகிற ஸர்வேஸ்வரனுடைய நிரதிசயபோக்யமான திருவடிகளை ஆஸ்ரயிக்குமவர்கள், "இப்பிறப்பறுக்கவேணும்" என்ன வேண்டாத நித்யஸூரிகளாவார்கள். இத்தால் - விரோதியைப் போக்குமளவன்றியே உத்தேஸ்யத்தைப் பெறுகைக்கும் திருவனந்தபுரமே ஆஸ்ரயணீயஸ்தலமென்கிறது. [நிண்ணம்நாம் அறியச்சொன்னோம்] - வ்யக்தமாக, மஹர்ஷிபரமதிதலமருளப்பெற்ற நாம், தேஹாத்மாபிமானிகளான நீங்கள் அறியும்படி உங்கள் அநர்த்தத்தைப் பார்த்துச் சொன்னோம்.

ஈடு.—அஞ்சாம்பாட்டு. திருவனந்தபுரத்தில் ஆஸ்ரயிக்குமவர்கள் நித்யஸூரிகளாவார்கள்; ஆகையாலே, அங்கே நீங்களும் ஆஸ்ரயியுங்கோளென்கிறார்.

[புண்ணியஞ்செய்து] - ஸ்நேஹத்தைப்பண்ணி. யஜ்ஞாநம் வர்ணாஸ்ரமதர்மங்களை இதிகர்த்தவ்யதையாக வுடைத்தாயிருக்குமிறே; ஆக, ஸத்கர்மஸஹிதமான ஸத்திரூபாபந்ந ஜ்ஞாநத்தை நினைக்கிறது. "ஹ்ருகோ - நாஹவ" (மத்பக்தோ - மந்மநாபவ) என்னக்கடவதிறே. [நல்லபுனலோடு மலர்கள் தூவி] - நல்ல புனலோடே கூடின மலர்களை ப்ரேமபரவசராய்க்கொண்டு பணிமாறி. இத்தால் - அர்ச்சநாதிகளைச் சொல்லுகிறது. "ஹ்ருயாஜீமாம நமஸ்குரு" (மத்யாஜீமாம்நமஸ்குரு) என்னக்கடவதிறே. [எண்ணுமின்] - "ஸததம்கீர்தயந்தஃ" (ஸததம்கீர்த்தயந்தஃ) என்னுநின்றதிறே.

அஞ்சாம்பாட்டு.—புண்ணியம் இத்யாதி. "அனந்தபுரத்தண்ணலார் கமலபாதமணுகுவார் - அப்பால் - அமராவார்: எண்ணுமின்எந்தைநாமம்" என்றவற்றைக் கடாகூத்தவதாரிகை - திருவனந்தபுரத்தில் இத்யாதி.

புண்யஸப்தம் கர்மவாசக மொழிய, ஜ்ஞாநவாசகமாம்படியென்? என்ன - யஜ்ஞாநம் இத்யாதி; வர்ணாஸ்ரமதர்மங்களை யென்றபடி. இதிகர்த்தவ்யதையாக - அங்கமாக. ஸ்நேஹமும் ஜ்ஞாநமும் பர்யாயம். இத்தால்-காரணமான கர்மத்தையிட்டுக் கார்யமான ஜ்ஞாநத்தை லகூக்கிறதென்கிறார் - ஆக ஸத்கர்ம இத்யாதி. காரணமான கர்மத்தையிட்டுக் கார்யமான ஜ்ஞாநத்தை லகூக்கிறதென்? கர்மாந்தரத்தையே சொன்னாலோ? என்ன - ஹ்ருகோ இத்யாதி. அதாவது - "ஹ்ருகோ நாஹவ, ஹ்ருகோ ஹ்ருயாஜீமாம, ஹ்ருகோ மாம நமஸ்குரு" என்று எல்லாம் ஜ்ஞாநபுரஸ்ஸரமாகச் செய்யச்சொல்லுகையாலே, இங்கும் "நல்லபுனலோடு" இத்யாத்யுக்த அர்ச்சநாத்யங்கத்தோடே ஜ்ஞாநத்தையே சொல்லுகிறதென்று கொள்ளவேணுமென்றபடி. "அர்ச்சநாதிகளைப்பண்ணி" என்றதுக்கு ப்ரமாணம் - "ஹ்ருயாஜீ" இத்யாதி. ஜ்ஞாநவாரமோக்ஷகாரணமும் ஜ்ஞாநத்துக்குபயுக்தமென்று விவக்ஷித்து, அதுக்கு ப்ரமாணம் - "ஸததம்கீ" இத்யாதி. "ஹ்ருநாஹவஹ்ருகோ ஹ்ருயாஜீமாம நமஸ்குரு । மாமேவைஷ்யஸியுக்த்வைவமாத்மானம்மத்பராயணஃ ॥ (கீ) ஸததம்

[எந்தைநாமம்] - இடறினவன் ''அம்மே'' என்னுமாபோலே திருநாமம்சொல்லும்போது ஒரு அதிகாரிஸம்பத்தி தேடவேண்டா; சீயர் பட்டரை ''திருநாமம் சொல்லும்போது ப்ரயதனுய்க்கொண்டுசொல்லவேணுமோ?'' என்று கேட்க, ''கங்கையிலேமுழுகப்போம வனுக்கு வேறேருகு †உவர்க்குழியிலே முழுகிப்போக வேணுமோ? மேலுண்டான நன்மை யைத் தருகிற இது அதிகாரிஸம்பத்தியையும் தரமாட்டாதோ?'' என்றருளிச்செய்தாராம். திருநாமம் சொல்லுகைக்கு ருசியேயாய்த்து வேண்டுவது; அவர்களே அதிகாரிகள். [இப் பிறப்பறுக்கும்] - கண்டதிறே இதினுடைய இழையீடு. கவிழ்ந்துபார்க்கவமையுமே இதினுடைய அகவாயை; தன்னடையே விரக்தி பிறக்குமே. இப்படி ப்ரத்யக்ஷிக்கச் செய்தேயும் கார்யகரமாகாதிருக்கிறதிறே வாஸனையின் கனம். ஒருசேட்டியை ''இவன் தமிழுக்குத்தேசிகனுயிருக்கும்''என்று பட்டருக்குக்காட்டினர்களாய், ''உனக்குஏதேனும் அபேக்ஷையுண்டாகில் கேட்கலாகாதோ?'' என்ன. ''சிலர் 'காண்கிறதேஹத்துக்கு அவ் வருகு ஆத்மாவுமில்லை, தர்மாதர்மங்களுமில்லை, ஈச்வரனுமில்லை' என்றிராநின்ருர்கள்: சிலர் 'இத்தேஹந்தான் அஸ்த்திரம்' என்று இதின்தோஷத்தை ஊர்ஜித்து 'அவ்வருகே ஸ்த்திரமாயிருப்பதோன்றைப் பற்றவேணும்' என்றிராநின்ருர்கள்: விஷயமொன்ருயிருக்க இவ்விரண்டு பரிமாற்றமும் நடக்கிறபடியெங்ஙனே?'' என்ன; ''ममायाधुरत्यया'' (மமமாயாதுரத்யயா) என்றும் 'मायामेतांतरंतिते' (மாயாமேதாந்தரந்திதே) என் றும் சொல்லுகிறபடியே ஹாக்யவான்களுக்கு இதினுடைய தோஷதுர்ஜநத்தைப் பண் ணிக் கழித்துக்கொள்ளுகைக்கும், ஹாக்யஹீநர்க்கு இதிலே ஹோக்யதாபுத்திபண்ணி அநர்த்தப்படுகைக்கும் உடலாமபடி கர்மாநுகுணமாக இத்தை இடையேடுத்துக்காணும் ஈச்வரன்பண்ணிற்று'' என்றருளிச்செய்தார். ''இதுகண்டாய்'' என்னும்படியா யிருக்கு மிறே:நாம் நன்ருக நினைத்திருக்குமதல்ல இதுக்குஆகாரம்; ஈச்வரன், வெளிச்சிறப்பைப் பிறப்பிக்க ''இது அல்பம், அஸ்த்திரம்'' என்றுஅறிந்தஇதுவேகிடாய் இதுக்கு நிலைநின்ற ஸ்வஹாவம். [இப்பிறப்பறுக்கும்] - இப்படி ஹேயதயா ஜ்ஞாதவ்யமான இத்தேஹ ஸம்ஸர்கத்தை யறுக்கும். [செறிபொழில்இத்யாதி] - செறிந்த சோலையையுடைத்தான திருவனந்தபுரத்திலேவந்து கண்வளர்ந்தருளுகிற ஸர்வஸ்வாமியுடைய நிரதிசயஹோக்

கீதயுதோரோம்பதஜுஜுஜுவு தாரு: । நகிஸ்வுதுஜுஜுரோம்ஹதுஜு நிதுயுஜுஹோஉவா ஸுதே'' (கசு) இதி ஹமவத்கீதாஸு நவமே. ''எந்தைநாமம்'' என்று விசேஷித்ததுக்கு ஹேது - இடறினவன் இத்யாதி. இதுக்கு ஸம்வாதம் - சீயர் இத்யாதி. இத்தால் ஹேயத்வம் - திருநாமம் இத் யாதி. ''இ'' என்றதுக்கு ஹேது - கண்டதிறே இத்யாதி. இதினுடைய - தேஹத்தினுடைய. இழையீடு - நூலாலே தைக்கை. அதாவது - இழையிட்டாற்போலே யிருக்கிற அவயவங்களுடைய சேர்த்தி. விவரணம் - கவிழ்ந்து இத்யாதி. அகவாயை - அந்தஸ்த்தங்களான மூத்ரபுரீஷாதி தோஷங்களை. அகவாயில் தோஷத்தை ஊர்ஜிக்கவும் நமக்கு விரக்தி பிறவாமைக் கடியேதென்ன - இப்படி இத்யாதி. ''வாஸனையின்கனம்'' என்றதுக்கு ஸம்வாதம் - ஒரு சேட்டியை இத்யாதி. காட்டினவிடத்து, பட்டர் ''நாமறியாததொன்று இவணைக் கேட்கவேண்டியிருந்ததோ'' என்று, அவன்தன்னையே ''நம்பக்கலிலே வேண்டுவது கேட்கலாகாதோ'' என்ருரென்றபடி. இடையே டுத்து - நிறுத்து; நிச்சயித்தென்றபடி. இது ஹேயம் என்னுமதுக்குப்ரமாணம் - இதுகண்டாயி இத்யாதி. இரண்டாந்திருவந்தாதி, அறுபத்தாறும்பாட்டு. இதுக்கர்த்தம்-நாம் இத்யாதி. உக்தத்தை யநுவதித்துக்கொண்டு, ஸ்பஷ்டார்த்தம் - இப்படி இத்யாதி. ''அப்பால் - அமரராணவர்களும் - அனந்தபுரத்தண்ணலார் கமலபாதமணுகுவார்'' என்று தாத்பர்யார்த்தம் - இப்பிறப்பறுக்கும் இத்

† 'உவட் குழியில்' என்று காணப்படுகிறது.

யமான திருவடிகளைக் கிட்டுமேவர்கள். [அப்பால் - அமரராவார்] - "இப்பிறப்பறுக்கும்" என்ன வேண்டாத தேஹத்தைப் பரிக்ரஹித்து அடிமைசெய்கிறவர்களும், திருவனந்த புரத்துக் கண்வளர்ந்தருளுகிறவன் திருவடிகளை யாஶ்ரயித்தவர்கள். ஆக, இத்தால் விரோதியைப் போக்குமளவே யன்றியே உத்தேஶ்யத்தைப் பெறுகைக்கும் திருவனந்த புரமே ஆஶ்ரயணீயஸ்த்தலமென்கிறது. [திண்ணம்] - நிஶ்சிதம். [நாம்அறியச்சொன் னோம்] - அவனுலே * மயர்வறமதிநலமருளப்பெற்ற நாம், தேஹாத்மாஹிமானிகளான நீங்களும் அறியும்படி உங்கள்அநர்த்தத்தைப் பார்த்துச் சொன்னோம். (டு)

ஆறும் பாட்டு.

அமரராய்த்திரிகின்றார்கட்கு ஆதிசேரனந்தபுரத்து
அமரர்கோன் அர்ச்சிக்கின்ற அங்கைகப்பணிசெய்வர்விண்ணோர்
நமர்களோ!சொல்லக்கேண்மின்நாமும்போய்நணுகவேண்டும்
குமரனூர்தாதைதுன்பந்துடைத்தகோவிந்தனூரே.

ஆ.—(அமரராய்.) - திருநாட்டிலேபோய் எம்பெருமானுக்கு அடிமைசெய் கையன்றோ ப்ராப்யமென்னில் ?—அங்குள்ளாரும் திருவனந்தபுரத்திலே வந்தன்றோ அடிமைசெய்கிறது ; ஆதலால் இங்கே யடிமைசெய்யும் இதுவே ப்ராப்யம்; ஆனபின்பு, நாம் இங்கேபோய் அடிமைசெய்யவேணுமென்கிறார்.

ஓ.—ஆறும்பாட்டில், அயர்வறுமமரர்களும்வந்து அடிமைசெய்கிறது திரு வனந்தபுரத்திலேயாதலால் திருநாட்டிற்காட்டில் பரமப்ராப்யம் திருவனந்தபுரம்; நாமும் இங்கே அடிமைசெய்யவேணும் என்கிறார்.

யாதி. முந்தினயோஜனையில் " இப்பிறப்பறுக்கும், அப்பால் - அமரராவார் " என்கிற பதத்வயத் தாலும் ஹலிதம் - ஆக இத்யாதி. 'புண்ணியம்செய்து' என்று தொடங்கி, 'எந்தைநாமம்-எண்ணு மின், இப்பிறப்பறுக்கும் ; 'செறிபொழில்' என்று தொடங்கி, 'அணுகுவார்' - அப்பால் - அமரா வார் ; திண்ணம் நாம் அறியச்சொன்னோம்' இத்யன்வயம். 'இதுகண்டாய் நன்னெஞ்சே' இத்யாதி. நன்னெஞ்சே - ஸம்ஸாரம் பொல்லாதென்றுல் அதுக்கிசைந்து என்னோடு ஒருமிடறுணகல்ல நெஞ்சே! இப்பிறவியாவது, நிருஷ்டதோஷதுஷ்டமான இந்த ஸம்ஸாரமாகிறது - இதுகண் டாய் - "இது நிலைநிற்கும், போக்யமாயிருக்கும்" என்று நாட்டார் ப்ரமிக்கிறவாகாரமின்றிக்கே அல்பாஸ்த்திரத்வாதி தோஷதூஷிதமான இவ்வாகாரத்தோடேகூடின இதுவே கிடாய் ; எல்லாகா மூற்றமு இதுகண்டாய் - முன்பு அநாதிகாலமெல்லாம் நன்றுய்த்தோற்றுகிற ஆகாரத்தாலே நாம் மறுபாடுருவ அகாந்மவம் பண்ணிப் போந்தது இதுகிடாய் ; நாரணன்பேரோதி - வகுத்தஸ்வாமி யான நாராயணனுடைய திருநாமங்களை கிரந்தரமாகச்சொல்லி, நரகத்தருகுணையாக்காரணமும் இதுகண்டாய் - ஸம்ஸாரமாகிற நரகத்தினுடைய பர்யந்தத்திலும் ப்ரவேஶிபாபைக்குக் காரணமும் அல்பாஸ்த்திரத்வாதி தோஷங்களாலே த்யாஜ்யமென்னும் ஆகாரம் ப்ரத்யக்ஷிக்கலாம்படி யிருக்கிற இஜ்ஜந்ம ஸம்பந்தங்கிடாய்; வல்லியேல்காண் - 'மேலெழத்தோற்றுகிற நன்மையில் பசை யில்லை, தேஹமேயிதுக்கு வேஷம்'என்னுமத்தைத் தப்பாதபடி காணவல்லியாகில் நான்சொன் னதுசெய்குமென்னும் இடத்தைக் கண்டுகொள் என்று பாட்டுக்கர்த்தம். (டு)

[அமரென்று தொடங்கி] - தேவர்களாய்த்திரிகிற ப்ரஹ்மாதிகளுக்கும் காரணபூதனனவன் கண்வளர்ந்தருளுகிற திருவனந்தபுரத்திலே அயர்வறுமமரர்களுக்கு ப்ரயாநனன ஸ்ரீஸேனபதியாழ்வான் அடிமைசெய்யுமிடத்தில் எடுத்துக் கைநீட்டுவர் அயர்வறுமமரர்கள். [நமர்கள் என்றுமேலுக்கு] - வைய்யகளாயுள்ள நீங்கள் சொல்லக்கேளுங்கோள்; தேவஸேனபதியாய்ப் பெருமிடுக்கனன ஸுப்ரஹ்மண்யனுக்குங்கூட ஜநகனனவனுக்குப் பாதகத்தால்வந்த துஃவத்தைப்போக்கின க்ருஷ்ணனே நாமும் போய்க்கிட்டவேணும்.

ப.—அநந்தாம், ஸர்வதேவநிர்வாஹகன் வர்த்திக்கிற திருவநந்தபுரத்திலே ஸூரிகள் ஆராதியாநிற்பர்கள்; நாமும்போய்க் கிட்டவேணும் என்கிறார்.

குமாரனர்தாதை - ஸுப்ரஹ்மண்யனுக்கு உத்பாதகனன ருத்ரனுடைய, தன் பம் துடைத்த - பாதகதுஃகத்தைப்போக்கின, கோவிந்தனர் - க்ருஷ்ணனுய், அமரர் ஆய் - மற்றும் தேவர்களாய், திரிகின்றார்கட்கு - திரிகிறவர்களுக்கும், ஆதி - உத்பாதகனனவன், சேர் - கண்வளர்ந்தருளுகிற, அனந்தபுரத்து - திருவனந்தபுரத்திலே, அமரர் கோன் - ஸேநைமுதலிபார், அர்ச்சிக்கின்ற - ஆராதிக்கிற இதுக்கு, அங்கு - அத்தேசத்திலேவந்து, அகப்பணிசெய்வர் - அந்தரங்கவ்ருத்திபண்ணி எடுத்துக்கைநீட்டுவார், விண்ணோர் - பரமபதவாஸிகளாயிருக்கும்; நமர்களோ - நம்முடையவர்களானவர்களே! சொல்லக்கேண்மின் - சொல்லக்கேளுங்கோள்; நாமும் போய் - நாமும்(அவர்களோடே) போய், நணுகவேண்டும் - கிட்டவேணும்.

இ.—ஆரும்பாட்டில், நித்யஸூரிகளும் வந்து அடிமைசெய்கையாலே திருவனந்தபுரமே ப்ராப்யம்: அங்கே நாம் அடிமைசெய்யவேணும் என்கிறார்.

[அமராய்த் திரிகின்றார்கட்கு] - மநுஷ்யாதிகளிற்காட்டில் சிலகாலவ்வறவிருக்கிற இத்தைக்கொண்டு தங்களே நித்யரென்று அபிமாநித்திருக்கிறவர்களுக்கு. [திரிகின்றார்கட்கு] - மநுஷ்யாதிகளிற்காட்டில் வைபகம் கனதிருக்கச்செய்தேயும், நிர்ப்பயராய்த் திரியாநிற்பர்கள், மநுஷ்யர்களுடைய விரக்திக்கு அவர்கள் பரிக்ரஹித்த வளவிறே த்யஜிக்கவேண்டுவது? ப்ரஹ்மாவுக்கு சதுர்த்தஸ ஊவநமும் த்யஜிக்கவேணும்.[ஆதிசேர் அனந்தபுரத்து] - காரணபூதன் வர்த்திக்கிற தேஸத்திலே. [அமரர் கோனர்ச்சிக்கின்ற இத்யாதி] - ஸ்ரீஸேனபதியாழ்வான் அடிமைசெய்யுமிடத்தில்எடுத்துக் கைநீட்டுவார் நித்யஸூரிகள். [நமர்களோ சொல்லக்கேண்மின்] - நம்மோடு கூடப்பிறந்தவர்களுள்ள நீங்கள் சொல்லக்கேளுங்கோள்; "வழுவிலா அடிமைசெய்யவேண்டும்நாம்" என்கிற நம்நிலைமையை நினைவாயுள்ளார் கேளுங்கோள். [நாமும்போய் நணுகவேண்டும்] - அந்த நித்யஸூரிகள் நடுவிலே அடிமையிலே ருசியையுடைய நாமும் சென்று கிட்டவேணும். இங்கேயிருந்து மநோரதிக்குமளவு போராது; அத்தலையிலே சடக்கெனப் புகவேணும். அவர்களுடனே ஸம்ஸாரிகளான நமக்குக் கிட்டவொண்ணுமோ? என்னில்,—[குமரனர் இத்யாதி] - தேவஸேனபதியாய் ப்ரபலனன ஸுப்ரஹ்மண்யனுக்குங்கூட ஜநகனனவனுக்குப் பாதகத்தால்வந்த துஃவத்தைப்போக்கின க்ருஷ்ணனே; வாணனுக்குத் துணையாயிருக்கிற ருத்ராதிகள் துஃவநிவ்ருத்திக்கு ஹேதுவாயிருக்கிறவன் நம்துஃவத்தைப்போக்கச் சொல்லவேணுமோ? ருத்ராதிகளுக்கு துஃவநிவர்த்தகனுயிருக்கும்; பசுக்களுக்கும் இடையர்க்கும் எளியனுயிருக்குமென்னை.

ஈடு.—ஆரும்பாட்டு. நித்யஸூரிகளும் வந்து அடிமைசெய்கிறது இங்கே யாகையாலே திருவனந்தபுரமே பரமப்ராப்யம்: அங்கே நாம் அடிமைசெய்யவேணு மென்கிறார்.

[அமராய்த்திரிகின்றார்கட்கு]-மாம்பழத்தோடு ஒருஸம்வந்தமில்லாத தோன்றுக்கு மாம்பழவுண்ணியேன்று பேராயிருக்குமாபோலே, இக்கரையராய் அவ்வருகுள்ளாரிற்காட்டில் நாலுநாளேழ ஜீவித்திருந்து சாகிற இவ்வளவையேகொண்டு தங்களுடைய ஆயுஸ்ஸுக்கு ஓரவஸாநமுண்டாயிருக்கச்செய்தே அதில்லாதாரைப்போலே துர்மாநம் பண்ணிக்கொண்டு திரிவர்களாய்த்து. [திரிகின்றார்] - வந்யகம் கனத்திருக்கச்செய்தேயும், நிர்ப்பயராய்த் திரிவர்களாய்த்து. இவனளவல்லவிறே யவர்களுக்கு. விடும்போது ஒரு தேஹமாத்ரமாதல், ஒரு ஸ்த்ரீயாதலாயிருக்கும் இவனுக்கு; ப்ரஹ்மாவுக்கு அண்டமித்த ஹனயும் விடவேண்டி வருமிறே. [ஆதிசே ரணந்தபுரத்து] - இவர்களுக்கும் அவர்களுக்கும் அவன்பக்கல் ஸாம்யம் காரணத்வத்திலேயாய்த்து. அவர்களுக்கு, ஸத்தையை நிர்வஹித்துக்கோடேக்கும்; இவர்களுக்கு, தேஹத்தையும் ஆத்மாவையும்சேர்த்து இத்தேஹம் க்ஷணந்தோறும் நசிக்க உண்டாக்கி நடத்திக்கோடேக்கும். ஜகத்காரணஸ்தனனவன். வந்து நித்யவாஸம்பண்ணுகிற திருவனந்தபுரத்து. [அமரர்கோன் இத்யாதி] - ஸ்ரீஸேநாபதியாழ்வான் நித்யகைங்கர்யம் பண்ணுகிறான்; நித்யஸூரிகளோடுத்துக் கைநீட்டுவோர். [நமர்களோ சொல்லக் கேண்மின்] - "வழிவிலாவடிமைசெய்யவேண்டுநாம்" என்று சொன்னதுக்குள்ளே யடங்கும்படி என்னுடைய நிருபாயிகஸம்பந்தமுடையாரடங்க நான்சொல்லுகிற வார்த்தையைக் கேளுங்கோள். வந்யர்களாயிருப்பார்க்கு நல்வார்த்தை சொல்லவேணுமிறே. [நாமும்] - அடிமையிலே ருசியுடையநாமும், நித்யஸூரிகளோடே ஒருகோவையாய்ச் சென்றுகிட்டி அடிமைசெய்யவேணும். [போய் நணுகவேண்டும்] - இங்கேயிருந்து ம்நோரதக்குமளவு போராது, போய்ப்புகவேணும். அவர்கள் நடுவே ஸம்

ஆரும்பாட்டு.—அமராய் இத்யாதி. "அமரர்கோனர்ச்சிக்கின்றவற்கு அகப்பணி செய்வர்விண்ணோர், காமும்போய் நணுகவேண்டும்" என்றவற்றைக் கடாக்ஷித்தவதாரிகை - நித்யஸூரிகளும் இத்யாதி.

"ஆய்" என்றதற்கு லாவம் - மாம்பழத்தோடு இத்யாதி. அதாவது - நித்யஸூரிகளுடைய அமரத்வம் தங்களுக்கின்றிக்கேயிருக்க, அதுஉண்டானதாக அபிமாநித்துக்கொண்டு திரிவர்களென்றபடி. எழ - வீளம்பித்து. "திரிகின்றார்கள்" என்றதற்கு லாவம் - வந்யகம் இத்யாதி. அப்படி வந்யகமதிகமோ? என்ன - இவனளவல்ல இத்யாதி. இவன் - மநுஷ்யன். அதெங்நனேயென்ன அருளிச்செய்கிறார் - விடும்போது இத்யாதி வாக்யத்வயத்தாலே. ப்ரஹ்மாதிகளுக்கு அமரத்வமில்லையாகிலும், நித்யஸூரிகளுக்கும் ப்ரஹ்மாதிகளுக்கும் ஈச்வரன்உத்பாதகனுமாகாரம் ஸமாநமென்கிறார் - இவர்களுக்கும் இத்யாதி. ஸாம்யம் காரணத்வத்திலே என்கையாலே - ப்ரஹ்மாதிகளுக்கு நித்யஸூரிகளோடு அமரத்வஸாம்யமில்லையென்று கருத்து. இருவர்க்கும் ஆதியாம் ப்ரகாரமேதென்ன - அவர்களுக்கு இத்யாதி. அநுஜீவாலாவத்தில் ஸத்தாஹாநி பிறக்கையாலே அநுஜீவிப்பித்து ஸத்தையை நோக்குமென்றபடி. "அமராய்த் திரிகின்றார்கட்காதி" என்றத்தால் வலிதம் - ஜகத்காரண இத்யாதி. "அர்ச்சிக்கின்று" என்றது - மலையாளபாஷை; அர்ச்சிக்கிறவிடத்திலென்னுதல், உர்ச்சிக்கிறானென்னுதல். அங்கு - அத்தசையிலே. அகப்பணி செய்வர் - அந்தரங்கவ்ருத்திபண்ணுவார்; எடுத்துக் கைநீட்டுவாரென்றபடி. நமர்களாலுல் சொல்ல வேணுமோவென்ன - வந்யர்களாய் இத்யாதி. "நணுகவேண்டும்" என்றதற்கர்த்தம் - நித்யஸூரிகளோடே இத்யாதி. "போய்" என்றதற்கு வ்யாவர்த்யம் - இங்கேயிருந்து இத்யாதி. குமாரர்

ஸாரிகளான நமக்குக் கிட்டவோண்ணுமோவென்னில் - [குமரனூர் இத்யாதி] - (தேவ ஸேநாபதியாய்ப்ரஹ்லாதனன ஸுப்ரஹ்மண்யனுக்குங்கூட ஜகதனனவனுக்குப் பாதகத் தால்வந்தவுஜ்ஜீவத்தைப் போக்கினகிருஷ்ணனே)தேவர்களும்அஸுரர்களும்கூட்டுப்படை யாய் எதிரிட்டவேருமன்றும், அவர்கள் ஆபந்நராகுல் அவர்கள் ஆபத்தைப்போக்கி ரக்ஷிக்கு மவனுய்த்து அவன்; ஆனபின்பு, நமக்கு அத்தேசத்தை ப்ராபிக்கைக்கு ஓருமைப்பட வேணுமோ? துர்மாநிகளுக்கும் துஜ்ஜீவநிவ்ருத்தியைப் பண்ணிக்கோடுக்குமவன், அஹிமாந சூந்யரான நமக்குத் தன்னைக் கிட்டுகையில் அருமைப்படுத்துமோ? ருத்ராதிகளுக்கு உஜ்ஜீவ நிவர்த்தகனுயிருக்கும்; பசுக்களுக்கும் இடையர்க்கும் கையாளாயிருக்கும். 'கோவிந்த னூரை - நாமும் போய் நணுகவேண்டும்.' (சு)

———

ஏழாம் பாட்டு.

———

துடைத்தகோவிந்தனூரேஉலகுயிர்தேவும்மற்றும்
படைத்தஈம்பரமமூர்த்தி பாம்பணைப்பள்ளிகோண்டான்
மடைத்தலைவாளைபாயும் வயலணியனந்தபுரம்
கடைத்தலைசீய்க்கப்பெற்றுல்கடவினைகளாயலாமே.

ஆ.—(துடைத்த) - ஆஸ்ரிதஉஜ்ஜீவபோதக ஸ்வபாவனுய், ஸர்வகாரண மாகையாலே ஸர்வேஸ்வரனன எம்பெருமான் கண்வளர்ந்தருளுகிற திருவனந்தபுரத் திலேசென்று அடிமைசெய்யப்பெறில், நம்முடைய உஜ்ஜீவமெல்லாம்போம், அடிமைசெய் யப்போங்கோ ளென்கிறார்.

ஓ.—ஏழாம்பாட்டில், ஸர்வேஸ்வரன் கண்வளர்ந்தருளுகிற திருவனந்தபுரத் திலே சென்று அடிமைசெய்ய இதுக்குமுன்பெல்லாம் அடிமைசெய்யப் பெற்றிலோ மென்னும் உஜ்ஜீவம் இப்போதே போமென்கிறார்.

[உலகுயிர் என்றுதொடங்கி] - லோகத்தையும் தேவர்களையும் மற்றுமுண் டான ஆத்மாக்களையும் உண்டாக்கின ஆஸ்ரிதர்க்கு ஹவ்யனன ஸர்வேஸ்வரனுனாய், திருவநந்தாழ்வான்மேலே கண்வளர்ந்தருளுவதுஞ்செய்தவனுடைய, ஜலஸம்ருத்தியாலே களித்து மடைத்தலையிலே வாளைபாயாநின்றுள்ள வயலாலே அலங்க்ருதமான திருவனந்த புரத்தில் திருவாசலிலே திருவலகுகிருப்பணி செய்யப்பெற்றால்.

தாதை துன்பம்துடைத்தது - வாணனைத் தலையறுதே ரக்ஷிக்கையென்கிறார் -- தேவர்களும் இத் யாதி. அதாவது - "கோவிந்தனூர்" என்ற க்ருஷ்ணனைச்சொல்லுகையாலே, பாணயுத்தத்தில் துன்பம் துடைத்தானென்றபடி. ஆனபின்பு என்றது - உஜ்ஜீவநிகளுக்கும் ரக்ஷகனனபின் பென்ற படி. "அருமைப்படவேணுமோ" என்றதை யுபபாதிக்கிறார் - உஜ்ஜீவநிகளுக்கும் இத்யாதி. கீழிற்பதத்தோடே "கோவிந்தனூர்" என்றதைக்கூட்டி ஹாவம் - நந்நாதிகளுக்கு இத்யாதி. க்ரியையேதென்ன - கோவிந்தனூரை இத்யாதி. 'அமராய்' என்று தொடங்கி, 'விண்ணோர்: ஆகையாலே, நமர்களோ! சொல்லக்கேண்மின்; குமரனூர்' என்ற தொடங்கி, 'கோவிந்தனூரை - நாமும்போய் நணுகவேண்டும்' இத்யன்வயம்.

(ஈ)

ப.—அநந்தரம், ஸகலஜகத்ஸ்ருஷ்ட்யாதி யுக்தனான ஸர்வேஸ்வரன் வர்த்திக்கிற திருவனந்தபுரத்திலே யடிமைசெய்யப்பெற்றால், ப்ராப்யலாஹ நிஷ்க்ருஷ்டமான க்லேசத்தைப் போக்கலா மென்கிறார்.

உலகு - லோகங்களையும், உயிர்-(மநுஷ்யாதிகளான) ப்ராணிகளையும், தேவும்-தேவதைகளையும், மற்றும் - மற்றும் மஹதாதிபதார்த்தங்களையும், துடைத்த - ஒன்றொழியாமல் படைத்து ஸம்ஹரித்தவனும், கோவிந்தனுமே - (“தஸ்ஸ்ருஷ்ட்வா ததேவானுப்ராவிசத்” என்கிறபடியே அவ்வவஸ்தையில் த்யோதமான விக்ரஹபுக்தனுகையாலே) கோவிந்தஸப்தவாச்யனானவன்தானே, (ஸம்ஹ்ருதமான அந்த ஸகலபதார்த்தங்களையும்), படைத்த - உத்பாதித்தவனும், எம் - இக்காரணத்வத்தை நமக்குப்காசிப்பித்த, பரம மூர்த்தி - ஸர்வாதிகஸோஷியாய், (ஸ்ருஷ்ட ஜகத்ரக்ஷணார்த்தமாக), பாம்புஅணை-திருவநந்தவாழ்வானிலே, பள்ளிகொண்டான் - கண்வளர்ந்தருளுகிறவனுடையதாய், (ஜலஸம்ருத்தியாலே), மடைத்தலை-மடைத்தலைகளிலே, வாளை பாயும் - வாளை களித்துப்பாயும், வயல் அணி - வயல் அலங்காரமாகவுடைய, அனந்தபுரம் - திருவனந்தபுரத்திலே, கடைத்தலை - திருவாசலிலே, சீய்க்கப்பெற்றால் - ஸம்மார்ஜநப்ரமுகஸோஷவ்ருத்திகளைப் பண்ணப்பெற்றால், கடு வினை-(கைங்கர்யாலாபநிஷ்க்ருஷ்டமான) அதிஸயிததுஷ்க்ருதத்தை, களையலாம் - போக்கலாம். கோவிந்தனென்றது - “கோ ஹி வாணீ தத்விதாவாப்தாவுபௌ” என்று க்ருஷ்ணனைச் சொல்லிற்றாகவுமாம்.

இ.—ஏழாம்பாட்டில், ஸர்வேஸ்வரன் கண்வளர்ந்தருளுகிற திருவனந்தபுரத்திலேசென்று அடிமைசெய்யப்பெறில், ஒருதேஸவிஸேஷத்திலே சென்று அடிமை செய்யப் பெற்றிலோமென்னும் தூஷ்யம் போமென்கிறார்.

[துடைத்த கோவிந்தனுர் இத்யாதி] - துடைக்கை - ஸம்ஹரிக்கை. அப்பய பூர்விகையாயிறே ஸ்ருஷ்டியிருப்பது. “கோ ஹி வாணீ”. [உலகுயிர் இத்யாதி] - லோகத்தையும் தேவஜாதியையும் மற்றுமுண்டான ஆத்மாக்களையும் உண்டாக்கினவன். இவை, அதிப்ரவ்ருத்தமானவன்று ஸம்ஹரித்து, பின்பு, புருஷார்தோபயோகியான காரணங்களைக் கொடுத்து ரக்ஷித்த. [எம் பரமமூர்த்தி]- ஆஸ்ரிதஹவ்யனான ஸர்வேஸ்வரன். [பாம்பணைப் பள்ளிகொண்டான்] - ஸ்ருஷ்டமான ஜகத்திலே ரக்ஷணார்த்தமாகத் திருவநந்தாழ்வான்மேலே கண்வளர்ந்தருளினவனுடைய. [மடைத்தலை இத்யாதி] - ஜலஸம்ருத்தியாலே மடைத்தலைகளிலே களித்து வாளை பாயாநின்றுள்ள வயலாலே யலங்க்ருதமான தேஸத்திலே. ஸாமஸாநத்தாலே முக்தர் களித்துவர்த்திக்குமாபோலேயாய்த்து அத்தேசத்தில் திர்யக்குக்களும் களித்து வர்த்திக்கும்படி. [கடைத்தலை சீய்க்கப்பெற்றால்] - திருவாசலிலே திருவலகு திருப்பணிசெய்யப்பெற்றால். [கடுவினை களையலாமே] - அடிமைசெய்யப்பெறுமையா லுண்டான க்லேசமெல்லாம் போம். ஸோஷத்வஜ்ஞாநம் பிறந்தால், ஸ்வரூபாநுரூபமானவ்ருத்தி பெறுமையால் வரும் க்லேசம் ப்ராயஸ்சித்தத்தால் போக்குமதன்றிறே.

ஈடு.—ஏழாம்பாட்டு. ஸர்வேஸ்வரன் கண்வளர்ந்தருளுகிற திருவனந்தபுரத்திலே சென்று அடிமைசெய்யப்பேறில், ஒருதேஸவிஸேஷத்தே சென்று அடிமைசெய்யப்பேற்றிலோமென்னும் தூஷ்யம் போ மென்கிறார்.

ஏழாம்பாட்டு.—துடைத்தகோவிந்தனுர் இத்யாதி. “அனந்தபுரம் கடைத்தலை சீய்க்கப் பெற்றால் கடுவினை களையலாமே” என்றதத்தைக் கடாகரித்தவதாரிகை - ஸர்வேஸ்வரன் இத்யாதி.

[துடைத்தகோவிந்தனுரே இத்யாதி]-துடைக்கை - ஸம்ஹரிக்கை. அப்பயபூர் விகையாயிறே ஸ்ருஷ்டி யிருப்பது. ''கூஷ்ணவவஹிலொகாகாடி'' (க்ருஷ்ணஏவஹி லோகாநாம்,) ''வையமேழும்கண்டாள் பிள்ளாவாயுளே.'' [உலகுயிரித்யாதி] - லோகத் தையும் தேவஜாதியையும் மற்றமுண்டான ஆத்மாக்களையும் உண்டாக்கின. இவை அதி ப்ரவ்ருத்தமான வன்று ஸம்ஹரித்து, பின்னை புருஷார்த்தோபயோகியான கரணங்களைக் கொடுத்து ரக்ஷித்த. [எம் பரமமூர்த்தி] - ஆஸ்ரிதவ்யனை ஸர்வேஸ்வரன். [பார்ப ணைப் பள்ளிகொண்டான்] - ஸ்ருஷ்டமான ஜகத்திலே ரக்ஷணார்த்தமாகத் திருவனந் தாழ்வான்மேலே கண்வளர்ந்தருளுகிறவனுடைய. [மடைத்தலைஇத்யாதி] - ஜலஸம்ருத் தியாலே மடைத்தலைகளிலே களித்து வாளைகள் பாயாநின்றுள்ள வயலாலே அலங்க்ருத மான தேசத்திலே; முக்தர் ஸாமகாநம்பண்ணிக் களித்து வர்த்திக்குமாபோலே யாய்த்து, அத்தேசத்தில் திர்யக்குக்களும் களித்து வர்த்திப்பது [கடைத்தலைசீய்க்கப்பெற்றால்] - திருவாசலிலே திருவலகு திருப்பணிசெய்யப்பெற்றால். [கடுவினைகளையலாமே] - அடிமை செய்யப் பெறுமையாலுண்டான க்லேஸமெல்லாம் போம். ஸோஷத்வஜ்ஞாநம் பிறந்தால், ஸ்வரூபாநுரூபமான வ்ருத்திபெறுமையால் வரும் க்லேஸம் ப்ராயஸ்சித்தத்தால் போக்கு மதன்றே. (எ)

எட்டாம் பாட்டு.

கடுவினைகளையலாகுங் காமனைப்பயந்தகாளை
இடவகைகொண்டதென்பர்எழிலணியனந்தபுரம்
படமுடையரவிற் பள்ளிபயின்றவன்பாதங்காண
நடமினைநமர்களுள்ளீர்! நாம்உமக்கறியச்சொன்னேம்.

ஆ.—(கடுவினை.) - ஸௌந்தர்ய லாவண்ய யௌவநாதி கல்யாணகுணங்களினால் யான எம்பெருமான் எல்லார்க்கும் ஆத்மயாகம்பண்ணிக்கொண்டிருக்கிற திருநகரி, திருவனந்தபுரம் என்றுசொல்லாநின்றீர்கள்; நாமும் அங்கே கண்வளர்ந்தருளுகிற

ஸ்ருஷ்டிக்குமுன்னே ஸம்ஹாரத்தைச் சொல்லுவானென்னென்ன - அப்பய இத்யாதி. க்ருஷ்ணனே ஜகத்ஸம்ஹாரம் பண்ணினனென்ன - கீருஷ்ணஏவஹி இத்யாதி. 'கூஷ்ணவவஹிலொகாநாகி-ஷ்டதிரவியாவ்யயு' இத்யாதி மஹாபாரதே ராஜஸூயே.(ந அ உ) இதுக்கு ப்ரமாணந்தாமாதல், அன்றிக்கே, அடைக்கை-நிஸ்ஸோஷமாக விழுங்குகையென்று அவாந்தரப்ரளயமாக அர்த்தாந்தரம் விவக்ஷித்து, அதுக்கு ப்ரமாணமாதல் வையமேழும் இத்யாதி.படைத்த தொழியத் அடைத்ததும் உபகாரமோவென்ன - இவை அதிப்ரவ்ருத்தம் இத்யாதி. மடைத்தலை - மடைகளிலேயென்றபடி. இதுக்குஹேது - முக்தர் இத்யாதி. கடைத்தலை - தலைக்கடை; வாசலென்றபடி. சீய்க்கை - திருவலகிடுகை. கைங்கர்யம் பண்ணப்பெறுமையாலுள்ள க்லேஸத்தை ''கடுவினை'' என்னலாமோவென்ன - ஸோஷத்வஜ்ஞாநம் இத்யாதி. அதாவது - ஸோஷத்வஜ்ஞாநாநந்தரம் கடைத்தலை சீய்க்கப்பெற்றால் கூடியலான கடுவினை, அதுபெறுமையால்வந்த க்லேஸமேயாகவேணும். அஸ்கர்மமாகில் ப்ராயஸ்சித்தவிநாஸ்யமென்கை. 'உலகுயிர்தேவும்மற்றும்-அடைத்த லாமே' இத்யந்வயம்.

(எ)

அவன் திருவடிகளைக் காணப்போரிகோள்: இஸ்மம்ருத்தியை நீங்கள் அறியாமையாலே இழக்கலாகாதென்று உங்களுக்கு அறிவித்தோமென்கிறார்.

ஒ.—எட்டாம்பாட்டில், 'திருவனந்தபுரத்தில் கண்வளர்ந்தருளுகிற ஸர்வேஸ்வரனுடைய திருவடிகளைக் காணப்போருங்கோள்!' என்று ஸ்ரீவைஷ்ணவர்களை அழைக்கிறார்.

[கடுவினை] - மிக்க வினை. [காமனை என்றுதொடங்கி] - விலக்ஷணமான திருவனந்தபுரத்தை லோகத்தையெல்லாம் தன்னழகாலே பிச்சேற்றக்கடவனான காமனுக்கு ஜநகனும், அவனிலும் முக்தனான க்ருஷ்ணன், ஸ்யாநமாகக் கொண்டதென்பர். தன்னுடைய ஸ்பர்ஸவத்தாலே விரித்தவணங்களையுடைய திருவநந்தாழ்வான்மேலே நிரந்தரமாகப் பள்ளிகொண்டருளுகிறவனுடைய திருவடிகளைக் காண நடவுங்கோள். எனக்கு வந்யக்களாயுள்ள நீங்கள் இஸ்மம்ருத்தியை யறியாதே இழக்கலாகாதென்று சொன்னோம்.

ப.—அநந்தரம், நிரதிஸயபோக்யமான திருவனந்தபுரத்திலே கண்வளர்ந்தருளுகிற பரமப்ராப்யஸ்தன் திருவடிகளே யநுபவிக்கைக்கு நம்முடையராயுள்ளார் எல்லாரும் நடக்கும்படி பாருங்கோளென்கிறார்.

கடு வினை-(ப்ராப்திவிளம்ப ஹேதுக்களாயுள்ள)க்ரூரமான பாபங்களை, களையல் ஆகும் - போக்கலாம், காமனை - (அழகுக்கு ப்ரஸித்தனான) காமனை, பயந்த - உத்பாதித்தவனுய், காளை - (அவ்வளவிலும்) யௌவநம்குலையாத க்ருஷ்ணனவன், இடவகை - இடமாக, கொண்டது—, எழில்-அழகை, அணி- அணிந்த, அனந்தபுரம் - திருவனந்தபுரம், என்பர் - என்றுசொல்லாநிற்பர்; (அங்கே), படமுடை-(ஸ்வஸ்பர்ஸத்தாலே விரிகிற) ஹணங்களையுடைய, அரவில் - திருவரவணையிலே, பள்ளி - கண்வளர்ந்தருளுகையிலே, பயின்றவன் - மிகவும் செறிந்தவனுடைய, பாதம் - திருவடிகளை, காண - கண்டநுபவிக்கைக்கு, நமர்களுள்ளீர் - நம்முடையராயுள்ளீர், நடமினே - நடவுங்கோள்; (அறிவிப்பார் குறையாயிராதே), நாம் - (விஷயவைலக்ஷண்யம் அறிந்த) நாங்கள், உமக்கு - உங்களுக்கு, அறிய - அறியும்படி, சொன்னோம் - சொன்னோம்.

இ.—எட்டாம்பாட்டில், திருவனந்தபுரத்திலே கண்வளர்ந்தருளுகிற ஸர்வேஸ்வரனுடைய திருவடிகளைக் காணப்போருங்கோள் என்று அநுகூலரை அழைக்கிறார்.

[கடுவினை களையலாகும்] - அநுபவவிரோதியாய்ப் போக்கவரிதான பாபம் போம். [காமனைப் பயந்தகாளை] - இது நான்உபதேசிக்கவேண்டுவது அவனை ப்ரத்யக்ஷிக்குந்தனையுமிறே. நாட்டையடங்கத் தன்னழகாலே பிச்சேற்றித்திரியும் காமனுக்கும் உத்பாதகனானவன். [காளை]-யௌவநம் ப்ரஸவார்ஹமாயிருக்க, பருவத்தால் அவனிலும் இளகிப்பதித்திருக்கும். [இடவகை இத்யாதி] - அழகாலே அலங்க்ருதமான திருவனந்தபுரத்தை வாஸஸ்யாநமாகக் கொண்டதென்று விஸேஷஜ்ஞர் வாய்புலற்றுகிற்பர்; ''வஞ்நாஹம்விஷ்ணோஸ்ஸுயாந்''. [படமுடைஇத்யாதி] ஸ்வஸ்பர்ஸத்தாலேவிஸ்தருதஹணனான திருவநந்தாழ்வான்மேலே நிரந்தரமாகக் கண்வளர்ந்தருளுகிறவனுடைய திருவடிகளைக் காண. பயின்றவென்று - வீசி வில்லிட்டெழுப்பிலும் எழுப்பவொண்ணாதபடியிறே படுக்கை வாய்ப்பிருப்பது. [நடமினேநமர்கள் உள்ளீர்] - என்னோடு குடற்றுடக்குடையாரடைய நடவுங்கோள். [நாம் உமக்குஅறியச் சொன்னோம்] - ''வரிவாளரவினணைப்

பள்ளிகொள்கின்றகரியான்கழல் காணக்கருதும்கருத்தே''என்று சபலரான நாம்,''வனகo ஞாவம்வாவஜஜளள'' என்னும்படியிருக்கிறஉங்களுக்குநெஞ்சிலேபடச்சொன்னேனும்.

ஈடு.—எட்டாம்பாட்டு. திருவனந்தபுரத்திலே கண்வளர்ந்தருளுகிற ஸர்வேச்வரனுடைய திருவடிகளைக்காணப் போருங்கோளென்று, அநுகூலரை யழைக்கிறார்.

[கடுவினைகளையலாகும்]-நம்மால்போக்கவரிதான பாபங்களையும் போக்கலாம். [காமனைப்பயந்தகாளை] - உங்களுக்கு நான் உபதேசிக்கவேண்டுவது அவ்வஸ்துவை ஸாக்ஷாத்கரிக்குமளவுமே! நாட்டைத் தன்னழகாலேவெருட்டித் திரிகிற காமனுக்கும் உத்பாதகனுயிருக்கும். இருவரையும் கூடக்கண்டால் ''மூறைகெடச்சொன்னுர்களே'' என்றிருக்கும். ''ஜூஜவாஜஜஜயளவநழி'' (ப்ரஸவாந்தஞ்சயௌவநம்) என்கிறதும், இவ்விஷயத்திலே மற்றைப்படியாயிருக்கிறது காணும். [இடவகைகொண்டதென்பர்] - இவ்விடத்தை வாஸஸ்தாநமாகக்கொண்டதென்று, அறிவுடையாரடங்கச் செவிசீப்பாய்ந்துகிடப்பார்கள்; ''வஜ்ஜாஹாஸவிஜ்ஜஜுஜயாஜ்'' (பத்மநாபம்விதுர்ப்புதாஜ்). [எழிலணியனந்தபுரம்] - பரமபதத்தில் ஒருபுதுமை செய்யவொண்ணுதிறே; அங்குத்தையிற் காட்டில் இங்குத்தைக்குத் தன்னேற்றமிருக்கிறபடி. [படமுடையரவில்] - ஸர்வேச்வரன் சாய்ந்தருளினுல் அவனுக்குப்பிறக்கும் விகாஸம்சொல்லுகிறது - படமுடையரவென்று. [பள்ளிபயின்றவன்] - ஸ்வதஸ்ஸர்வஜ்ஞமான வஸ்துவும் உணர்த்தியறும்படியாய்த்துப் படுக்கையாய்ப்பு. [பாதம்இத்யாதி] - திருவடிகளைக்காணும்படியாக, ''வரிவாளரவினணைப்பள்ளிகொள்கின்ற கரியான்கழல்காணக்கருதும்கருத்து'' என்றிருக்கும் என்னுடை ஒருகுடற்றுடக்குடையாரடங்கலும் போகப் பாருங்கோள. திருவத்யயநம பாடாந்நாக, இத்தைக் கேட்டருளி, ஆளவந்தார் ''நமகசுஆழ்வாரோடே ஒருஸம்வஸ்ஜமுண்டாக வேணும்'' என்று, அப்போதே ஸ்ரீபாதத்தையுடையாரைக் கூட்டிக்கொண்டேழுந்தருளினுர். [நாம்] - கண்வளர்ந்தருளுகிறவழகில் சுவடறிந்து, ''யவரேலுமவர் - எம்மையாளும் பரமர்'' என்னக்கடவ நாம். [உமக்குஅறியச்சொன்னேனும்] - அவவடிவைக் காணவேணுமென்கிற அபேக்ஷையுடைய உங்களுக்கு அறியும்படிசொனனேனும். (உ)

எட்டாம்பாட்டு.—கடுவினை இத்யாதி. ''பள்ளிபயின்றவன்'' என்றுதொடங்கி, ''நமர்களுள்ளீர்'' என்றவற்றைக்கடாக்ஷித்தவதாரிகை - திருவனந்தபுரத்திலே இத்யாதி.

[வானேறஇத்யாதி] - பரமபதத்திலேபோய்ப் புகுகைக்கு அர்ச்சிராதிமார்க்கத்தைத் தந்த. பரமபதலாஹத்திலும் அவ்வருகே யொருலாஹமென்னும்படியிறே அர்ச்சிராதி ஸித்தி. ''போம்வழியைத்தரும்'' என்று ஈடேடும்படியிறே அதினுடைய வைலக்ஷண்யம். [வாட்டாற்றான்] - இப்பேற்றுக்கு க்ருஷிபண்ணினவிடம். [பணிவகையே]-அவன் திருவுள்ளமானபடியே: அதாவது - ''மாமேகம்ஶரணம்வ்ரஜ'' (மாமேகம்ஶரணம் வ்ரஜ) என்றத்தைச் சொல்லுகிறார்; ''பண்டேபரமன்பணித்த பணிவகையே'' என்றதிறே; ''மரணமானுல்'' என்றத்தைச் சொல்லிற்றாகவுமாம். [நானேறப்பெறுகின்றேன்] - ''கண்ணன்வைகுந்தனுடே எனைனெஞ்சினுரைக்கண்டால்'' என்று தூதுவிட்டுப்பார்த்திருக்கக்கடவ நான் உனக்குச்சொல்லவேண்டும்படியாவதே! [நான்இத்யாதி]- நான் பரமபதத்திலே ஏறப்பெறுகின்றேன். ஆனுல் நான் செய்யவேண்டுவதென்னென்ன? - [நரகத்தை நகுநெஞ்சே] - ப்ராப்யபூமி கிட்டிற்றென்னு கூகைக் கால்வாங்கிப் போகப்பாராதேகிடாய்! நேநோள் நம்மைக் குடிமக்களாக்கி எளிவரவு படுத்தின ஸம்ஸாரத்தைப் புரிந்து பார்த்துச் சிரித்துப்போருகிடாய். 'உன்னைவென்றுமிறே'' என்று புரிந்து பார்த்துச் சிரித்துப்போரு. பிள்ளை யழகியமணவாளப்பெருமாளரையர் க்ரந்தியைப்பார்த்துச் சிரித்துச் சொன்னவார்த்தையை நினைப்பது. ''தெதெநாதெநேஹதரநிஜபுமாஹஹரீஸ்வரஃ'' (தேநநாதேந மஹதா நிர்ஜகாமஹரீஸ்வரஃ)-மஹாராஜர் வந்துஅறைகூவ,''பூர்வக்ஷணத்திலே பரிஹவப்பட்டுப்போனவன் இப்போதுவந்து அறைகூவும்போது, வெறுமனல்ல; போதல்லாப்போதிலே நீ புறப்படக்கடவையல்லே'' என்று தாரை காற்கட்டச் செய்தேயும், க்ஷத்ரியனுகையாலே பரிஹவம் பொறுக்கமாட்டாமை புறப்பட்டு,''மிடற்றுசை யிருந்தபடியென்? பழைய கோழைத்தனமற்றுத் தெளிந்து முழங்கியிருந்தது: இதுக்கோரடியுண்டாகவேணும்: உண்டாய்த்தாகில் நமக்குஇரைபோருகிறது'' என்றருளிறே. ''ஹரீஸ்வரஃ'' (ஹரீஸ்வரஃ)-இதுக்குமுன்பு பிறரைக்கூவ ஜீவித்தவனல்லன். அப்படியே அவனை யண்டைகொண்டவலத்தாலே,ஸமஸாரத்தைப் பாராதது ''உன்னைவென்றுமிறே'' என்று கையைத்தட்டிச் சிரித்துக்கிடாய் போருவது. அறிவுகேடார்க்கு, நரகமென்று-யமாதிகள் குடியிருப்பைச் சொல்லிற்றாகவுமாம். ''மற்றைநரகம்'' என்கிற ஸம்ஸாரத்தைச் சொல்லுகிறது; * வானுயரின்பத்

வானிலே யேறுகைக்குஎன்றபடி. வானேத்தந்தவென்னுதே, ''வழியைத்தந்த'' என்பானென்? என்ன-பரமபத இத்யாதி. அப்படி லிலக்ஷணமாயிருக்குமோவென்ன-போம்வழியை இத்யாதி. ஸப்தார்த்தம் - அவன் இத்யாதி. பணிதல் - சொல்லுதல். ''பணிவகை'' என்றல் - சரம ஸ்லோகத்தைச் சொல்லுமோவென்ன - பண்டே இத்யாதி. அர்த்தாந்தரம் - மரணமானுல் இத்யாதி. ''நான்'' என்றதுக்கு ஹாவம் - கண்ணன் இத்யாதி. திருவிருத்தம், ''அன்னம் செல்வீரும்'' இத்யாதி. ஸ்பஷ்டோர்த்தஃ. ஸப்தார்த்தம் - நான்பரமபதத்திலே இத்யாதி. குடிமக்கள் - குடியாள்கள். எளிவரவுபடுத்தின - லவுதாரமாக்கின. நகுதல்-சிரித்தல். சிரிக்கும்படியேதென்ன - உன்னை இத்யாதி. இதுக்கு ஸம்வாதம் - பிள்ளை இத்யாதி. அதாவது - பரமபதத்துக்குப் போகிற ஸமயத்திலே, ''உன்னைவென்றேன்'' என்று க்ரந்தியைப்பார்த்தருளிச்செய்தா ரென்றபடி. ஸம்ஸாரத்தைப்பார்த்துச் சிரிக்கைக்கு ஹேது அவனை யண்டைகொண்ட வலமென்று திருவுள்ளம் பற்றி, அத்தை ஸங்க்ஷேபமாக அருளிச்செய்கிறார் - தேநநாதேந இத்யாதி ஸங்கேபே, ''ததொ மஜ்ஜுலரிவரஸ்ரீவொஹைவிஜஃ। தெநநாதெந'' இத்யாதி. அறைகூவ - ஜயத்வநிபண்ண. இத்தால் இங்கே எது சொல்லப்பட்டதென்ன - அப்படியே இத்யாதி. ''நரகம்'' என்றவிது - ஸம்ஸாரத்தைச் சொல்லுமேரவென்ன - அறிவுகேடார்க்கு இத்யாதி. 'மற்றைநரகம்' என்கிறவாக்யத்தடியிலே, ''இங்கே'' என்று கூட்டிக்கொள்வது. ''மற்றைநரகம்'' என்றல்

---

† க்ரந்தி - புண்கட்டி.

துக்குஈதிர்த்தட்டிறே. நாம் இப்படி ஸம்ஸாரத்தைக் கைதட்டிச் சிரிக்கைக்கு நமக்கு உத்தேச்யவஸ்துதான் கைபுகுந்ததோவென்ன - [தேனேறுஇத்யாதி] - கிண்ணகப்பெருக்குப் போலே நாட்செல்ல நாட்செல்லத் தேனேறிவாராநிற்பதாய் மலரையுடைத்தான திருத்துழாயானது விளங்காநின்றுள்ள திருவடிகளையுடையவன். [செழும்பறவை] - அவனுடைய ஸம்ச்லேஷத்தாலே குளிர்ந்து ஔஜ்ஜ்வல்யமான வேஷத்தையுடைய திருவடியை. இத்தால் ஸர்வேச்வரனுடைய ஸ்பர்சம் இவனுக்கிருக்கும்படி சொல்லிற்று. [தானேழித்திரிவான] - அவனுக்காகவுமன்றிக்கே அவன்தோளில் இருப்பு ஸ்வஸ்பர்சமாயிருக்கையாலே அவனை மேற்கொண்டு ஸஞ்சரியாநிற்குமாய்த்து. [தானேழித்திரிவானதாளிணையென்தலைமேலே] - திருவடிதிருத்தோளிலும் என்தலையிலுமான இது தவிர்ந்து என்தலையிலேயாய்த்து. அவன் இழவுக்கு வேறுக்கவேண்டாவிறே ; அவன்தானே கொடுவந்து கொடுக்கப்பெற்றவராகையாலே. ஆகையிறே ஒருபழஏறப்பெற்றது. (டு)

ஆறும் பாட்டு.

தலைமேலதாளிணைகள் தாமரைக்கண்ணென்னம்மான்
நிலைபேரானென்னெஞ்சத்துப்போழுதும்எம்பெருமான்
மலைமாடத்தரவணைமேல்வாட்டாற்றான்மதமிக்க
கோலையானைமருப்போசித்தான்குரைகழல்கள்குறுகினமே.

ஆ.—(தலைமேல.) - திருவடிகளை என் தலைமேலே வைத்தருளினான் ; அழகிய திருக்கண்களாலே என்னைக் குளிரப்பார்த்தருளாநின்றான்; ஒருகாலும், என் நெஞ்சில் நின்றும் நிலைபேரான்; இங்ஙனே அவன்திருவடிகளை நாம் குறுகப்பெற்றோமென்கிறார்.

ஒ.—ஆறும்பாட்டில், திருக்கண்களில் அழகைக் காட்டி என்னை அடிமை கொண்டு என்னுடைய ஹ்ருதயத்தில் நின்று ஒருகாலும் போகிறிலன்: அவன் திருவடிகளைக் குறுகப்பெற்றோமென்று ப்ரீதராகிறார்.

[கோலியானை மருப்போசித்தான்] - தம்முடைய ப்ரதிவ்ருத்தத்தைப் போக்கினபடி. [குரைகழல்கள்] - சில சதங்கைகளாலே த்வனிக்கிற திருவடிகள்.

ப.—அகந்தரம், திருவடிகளைத் தலையிலேவைத்தவளவன்றியே, என்னெஞ்சிலே ஸ்திரமாகப் புகுந்துநிற்கிறவன் திருவடிகளைக் கூடப்பெற்றோமென்கிறார்.

ஸம்ஸாரத்தைச் சொல்லுமோவென்ன - வானுயர் இத்யாதி. "ஏறு" என்ற வர்த்தமானார்த்தம். கிண்ணகப்பெருக்கு இத்யாதி. கிண்ணகப்பெருக்கு - ஆற்றப்பெருக்கு. மலர் - பூ. செழுமை - அழகு. ஏறி என்னுமிது "தானேறி" என்றதற்கு ஹேது - அவனுக்காகவும் இத்யாதி. "தலைமேலே" என்றவவதாரணார்த்தம் - திருவடி இத்யாதி. ஆனால் பெரியதிருவடி ஊர்வப்படாரோ, பரஸம்ருத்யேகப்ரயாகரான இவர் அவனிழவுக்குவெறுதே "என்தலைமேலே" என்று உகப்பானென்னென்ன - அவனிழவுக்கு இத்யாதி. அதுக்கு நியாமகமேதென்ன - ஆகையிறே இத்யாதி. அதாவது - அவன் புருஷகாரமாகக்கொண்டு வருகையாலேயிறே, அவனைப்போலே தோளிலன்றிக்கே தலைமேலே யாகப்பெற்றதென்றபடி. பழ - படி. (ஙி)

தாளிணைகள் - அவன் திருவடிகள், தலைமேல - என்தலைமேலேயிராநின்றன ; (அத்தால்வந்த உகப்பு தன்னதாம்படி தோன்ற), தாமரைக்கண் - தாமரைபோலே கிவர்த்த திருக்கண்களையுடையனும், என்னம்மான் - என்னைப் பெறுப்பேறுகப் பெற்றுனுய்க்கொண்டு எனக்கு ஸ்வாமியானவனுய், (அவ்வளவன்றியே), என்னெஞ்சத்து - என்நெஞ்சுக்குள், எப்பொழுதும் - எப்போதும், நிலைபேறன் — நின்றநிலைபேரானும், எம்பெருமான்-என்பக்கலிலே நிலைபெறுகையாலே ஸர்வாயிகனும், (எனக்குஉபகரிக்கைக்காக), மலை - மலைபோலேயிருக்கிற, மாடம் - மாடங்களையுடைய, வாட்டாறு - திருவாட்டாற்றிலே, அரவணைமேலான் - திருவரவணையின்மேலே கண்வளர்ந்தருளுகிறவனும், (ப்ராப்திப்ரதிவந்த்யகங்களை), மதம்மிக்க - மதத்தாலேமிக்கு, கொலை-கொலியிலே உடனியுக்தமான, யானை - குவலயாபீடத்தை, மருப்புஒசித்தான் - ம்ருகுங்க ஹம்மம்பண்ணினுற்போலே என்அநுஜவவிரோயியையழித்தவனுடைய, குரை - (வீரக் கழலில்) த்வனியையுடைய, கழல்கள் - திருவடிகளை, குறுகினம் - கூடப்பெற்றேறும்.

இ.—ஆறும்பாட்டில், திருவாட்டாற்றிலே லக்ஷ்மியபண்ணி என்னை ஸர்வதோமுவமாக விடமாட்டாதவனுடைய திருவடிகளைக் குறுகப்பெற்றேறுமென்கிறார். [தலைமேலதாளிணைகள்]- திருவடிகளாலே என்தலையை அலங்கரிபாகின்றன். [தாமரைக்கண் என்னம்மான்] - என்முன்னேநின்று கண்ணழகைக்காட்டி "ஜீதிழி" என்னப்பண்ணுகின்றன். [நிலைபேரான் என்னெஞ்சத்து]-ஹ்ருதயத்தினின்றும் கால்வாங்குகிறிலன். [எப்பொழுதும்] - ஸர்வகாலமும் இப்படி செய்யாநின்றன். தன்னை அநுஜவிப்பார் நாஞுவியஸரீரத்தாலே அநுஜவிக்குமாபோலே, என்னை அநுஜவிக்கைக்கு அநேக விக்ரஹங்களைக் கொள்ளாநின்றன். [எம்பெருமான்] - உடைமையுடையவனைப் பெற்றுலிருக்குமளவன்றிறே உடைமையைப்பெற்ற துடையவனுக் கிருப்பது. [மலைமாடத்தரவணை இத்யாதி] - மலைகளைச் சேரவைத்தாற்போலேயிருக்கிற மாடங்களையுடைத்தான திருவாட்டாற்றிலே திருவனந்தாழ்வான் மேலே கண்வளர்ந்தருளுகிறவன். பர்யங்க விக்ரியையிற் சொல்லுகிறபடியே: உத்தேச்ய வஸ்துவுக்குக் குறைவற்றிருக்கிறபடி. அநுஜவவிரோயியை, குவலயாபீடத்தைத் தள்ளினுற்போலே தள்ளிப் பொகட்டான். இப்படி ஸோபாதிகமான திருவடிகளைக் கிட்டப்பெற்றேறும். [குரை] - ஆஹரண த்வனி. "கூவிக்கொள்ளும் காலமின்னம் குறுகாதோ" என்னும் விடாய் தீரும்படி கிட்டப்பெற்றேறும்.

ஈடு.—ஆறும்பாட்டு. திருவாட்டாற்றிலே லக்ஷ்மியபண்ணி என்னை ஸர்வதோமுவமாக விடமாட்டாதவனுடைய திருவடிகளைக் கிட்டப்பெற்றேறுமென்கிறார்.

[தலைமேலதாளிணைகள்] — "நின்செம்மாபாதபற்புத் தலைசேர்த்து" என்றும் "பாதபங்கயமே தலைக்கணியாய்" என்றும் நான் ப்ரார்த்தித்தபடியே, அழகிய திருவடிகளாலே தலை அலங்காரமாகப்பண்ணினன். [தாமரைக்கண்என்னம்மான்]-என்முன்னே நின்று குளிநோக்கி "ஜீதிழி" (ஜிதம்) என்னப் பண்ணுகின்றன். [நிலைபேரான் என்னெஞ்

ஆறும்பாட்டு.—தலைமேல இத்யாதி. "தலைமேலதாளிணைகள்" என்ற தொடங்கி "குரைகழல்கள் குறுகினம்" என்னுமளவும் கடாகூத்தவதாரிகை - திருவாட்டாற்றிலே இத்யாதி.

"ஸர்வதோமுவமாக விடமாட்டாதவன்" என்கிறஇதிலே,முன்னுற "தலைமேலதாளிணைகள்" என்று விசேஷிக்கிறதுக்கு ஹேது - நின்செம்மா இத்யாதி. திருவடிகளிரண்டும் என்தலை

சத்து] - நெஞ்சுவிட்டுப்போதே நின்றுய்த்து இதெல்லாம்செய்கிறது. ஸௌஹார்தம்பது வடிவுகொண்டாற்போலே, இவன் தன்னை அநுஹவிக்க நாநாஹவநம்கொள்ளுமாபோலே, அவன்தான் இவரை அநுஹவிக்க அநேகவிக்ரஹம் கொள்ளாநின்றான். [எப்போழுதும்] - "எப்போழுதும்நாள்திங்களாண்டேழியூழி" என்று தன்னை அநுஹவிக்கைக்கு நான் பாரித்த துறைகளடையக் கைக்கொண்டான். ஸர்வஶக்தியோகமடையக் காட்டாநின்றான். என் னெஞ்சிலேநிற்பது, அப்படியே கண்ணுக்கிலக்காம்படி முன்னேநிற்பது, திருவடிகளைத் தலைமேலே வைப்பதாகிற இதெல்லாம் ஒருகாலே செய்யாநின்றான். [எம்பெருமான்] - உடைமை உடையவனைப் பெற்றாலிருக்குமாபோலன்றிமே, உடையவன் உடைமையைப் பெற்றாலிருக்கும்படி. [மலிஇத்யாதி] - மலிகளைப் புடைபடத் துளைத்து நெருங்கவைத் தாற்போலேயிருக்கிற மாடங்களையுடைத்தான திருவாட்டாற்றிலே திருவனந்தாழ்வான் மேலே கண்வளர்ந் தருளினவன். இத்தால் - ப்ராப்யவஸ்துவைச்சொல்லுகிறது, பர்யங்க விஶ்யையிற் சொல்லுகிறபடியே. [மதம்இத்யாதி] - அநுஹவவிரோதிகள் அடங்கலும் குவ லயாபீடம்பட்டது படும்இத்தனை. அவன் இவன்விரோதியைப்போக்க இவனுக்குஅநுஹ வத்திலே யந்வயம். [குரைகழல்கள் குறுகினம்] - ஆஹரணவோலி சேவிப்படாநின்றது. "தடந்தாமரைகட்கே கூவிக்கொள்ளும்காலம் இன்னம்குறுகாதோ" என்று ப்ரார்த்தித்தது பேற்றோம்.

(சு)

ஏழாம் பாட்டு.

குரைகழல்கள்குறுகினம்நம்கோவிந்தன்குடிகொண்டான்
திரைகுழுவுகடல்புடைசூழ்தென்னாட்டுத்திலதமன்ன
வரைகுழுவுமணிமாட வாட்டாற்றான்மலாடிமேல்
விரைகுழுவுகுறுந்துளவம்மெய்ந்நின்றுகமழுமே.

மேலே யிராநின்றனவென்று ஸம்தார்த்தம். "என்னெஞ்சத்து - நில்லேபோான்." என்னெஞ்சுக் குள் எப்போதும் நின்றநில்லே போாவென்ற ஸம்தார்த்தம். நெஞ்சைவிட்டுப் பேராதேயிதெல் லாம் செய்யக்கூடுமோவென்ன - ஸௌஹார்த இத்யாதிவாக்யத்வயம். அவன் அநேகஶரீர பரிக்ரஹம் பண்ணுகையாலே கூடுமென்றபடி. இரண்டாம்வாக்யம் முக்தவிஷயம். 'எப்பொழுதும்' இத்யாதி வாக்யத்துக்கு - நான் தன்னை நித்யாபூர்வமாகப் பாரித்ததெல்லாம் தானென்னை நித்யாபூர்வமாகப் பாரியாநின்றானென்று கருத்து. "அநேகஶரீரபரிக்ரஹம்பண்ணி யநுஹவியாநின்றான்" என்றத் தால் ஹலிதம் - ஸர்வஶக்தியோகம் இத்யாதி. அவரோஹக்ரமத்தாலே அந்த ஶக்தியைக் காட்டு கிறார்-என்னெஞ்சிலே இத்யாதி. இவன் அவனை ஸஹித்தால் நாநாஹவம்கொள்ள ப்ராப்தமாயிருக்க அவன் கொள்ளுகைக்கடியேதென்ன - உடைமை இத்யாதி. "மலைமரடம்" என்றது - *வாட் டாற்றுக்கு விசேஷணம். புடைபட - இடம்பட; அவகாஶமுண்டாம்படியாக. "அரவணைமேல்" என்றதுக்கு ஹவம் - இத்தால் இத்யாதிவாக்யத்வயம். "கொலையானைமருப்பொசித்தான்" என்ற தற்கு ஹவம் - அநுஹவ இத்யாதி. "குரைகழல்கள் குறுகினம்" என்றதையும் கூட்டி ஹவம் - அவன்இவன் இத்யாதி. குறுகினதற்கு நியாமகமேதென்ன - ஆஹரண இத்யாதி. குரை - ஸம்தம். "குறுகினம்" என்றதுக்கர்த்தம் - தடந்தாமரை இத்யாதி. கொலையானை - கொலையில் உத்யுக்த மான ஆனை.

(சு)

ஆ.—(குரைகழல்கள்.) - இப்படி நெஞ்சே! நாம் குரைகழல்கள் குறுகினம்; நம்கோவிந்தன் ஸபரிக்ரஹமாகவந்து என்னுள்ளேபுகுந்தருளினன். இதக்கடையாளமென்? என்னில்; வாட்டாற்றான் திருவடிகள் திருத்துழாய் என்னுடம்பெல்லாம் கமழ்கிறபடி பாராயென்கிறார்.

ஒ.—ஏழாம்பாட்டில், எம்பெருமான் ஸபரிகரமாக வந்து என்னுள்ளே புகுந்தருளினன்; அத்தாலே என் உடம்பு நிரந்தரமாகத் திருத்துழாய் நாறுகின்றது என்கிறார்.

[நம் கோவிந்தன்] - ஆஸ்ரிதவத்ஸலனான க்ருஷ்ணன். [திரைகுழவு என்று மேலுக்கு] - திரைமிக்க கடல் அருகே சூழ்வதுஞ்செய்து, தென்னாட்டுக்கு ஒரு திலதம் போலேயாய், மலைகள் திரண்டாற்போலேயிருக்கிற அழகிய மாடங்களையுடைய திருவாட்டாற்றில் எம்பெருமானுடைய திருவடிகளில் பரிமளம்மிக்கிருந்துள்ள நல்ல செல்வித்திருத்துழாய்.

ப.—அநந்தரம், தான் ஸம்ஸ்லேஷித்ததுக்கு அடையாளந்தோன்றும்படி ஆஸ்ரிதவத்ஸலனான க்ருஷ்ணன் தான் என்னெஞ்சிலே பூர்ணமாக இருந்தானென்கிறார்.

குரை - விலக்ஷணமான, கழல்கள் - திருவடிகளை, குறுகினம் - குறுகப்பெற்றோம்; (“கிலேபேரான்” என்கிறபடியே), நம் - நமக்குலுவ்யனான, கோவிந்தன் - க்ருஷ்ணனவன், (பரிபூர்ணமாக நம்நெஞ்சை), குடி - குடியிருப்பாக, கொண்டான் - ஸ்வீகரித்தான்: (அத்தாலே), திரை - திரைகள், குழவு - திரளத்திரண்ட, கடல் - கடலாலே, புடை - பரிஸரத்திலே, சூழ் - சூழப்பட்டு, தென்னாடு - தென்னாட்டுக்கு, திலதம்அன்ன - திலகம்போலே யிருப்பதாய், வரைகுழவு - மலைகள் திரளவிருந்தாற்போலே யிருக்கிற, மணிமாடம் - மணிமயமான மாடங்களையுடைய, வாட்டாற்றான் - திருவாட்டாற்றி லெழுந்தருளியிருக்கிறவனுடைய, மலரடிமேல் - விகஸிதபத்மம் போலே நிரதிஸயலோக்யமான திருவடிகளின்மேலே, விரை - பரிமளங்கள், குழவு - திரண்டு, நறும்துளபம் - கமழுகிற திருத்துழாயானது, மெய் நின்று - என்ஸரீரத்திலே ஸ்திரமாகநின்று, கமழும் - முகியாநின்றது.

இ.—ஏழாம்பாட்டில், அவன் ஸபரிகரமாக வந்து என்னுள்ளே புகுந்தான். அத்தாலே என் உடம்பு திருத்துழாய் நாறுகின்றது என்கிறார்.

[குரை இத்யாதி] - ஆஸ்ரணத்வநியோடே அவன்வந்து மேல்விழக்கிட்டப்பெற்றோம். [நம் கோவிந்தன் இத்யாதி] - ஆஸ்ரிதவத்ஸலனான க்ருஷ்ணன், “அகம்படிவந்து புகுந்து” என்கிறபடியே வந்து புகுந்தான். [திரை இத்யாதி]- திரைமிக்கிருந்துள்ள கடல் அருகே சூழப்பட்டிருப்பதாய், தென்னாட்டுக்குத் திலதம்போலேயாய், மலைகளை நெருங்கவைத்தாற்போலே யிருக்கிற மணிமயமான மாடங்களையுடைத்தான திருவாட்டாற்றிலே நின்றருளினவனுடைய திருவடிகளின்மேற் பரிமளம் மிக்கதான திருத்துழாய். விரை - பரிமளம். [மெய்நின்று கமழுமே] - ஸரீரம் நிரந்தரமாக நாறுகின்றது. “குரைகழல்கள் குறுகினம்” என்று நான் சொன்னவார்த்தை மெய்யென்னுமிடம், என் உடம்பே சொல்லாநின்றதென்கை. “அன்றி மற்றோருபாயமென்?” என்று தோழிசொல்லியும், “வெறிகொள் துழாய்மலர் நாறும்” என்று தாயார் சொல்லியும் போந்த இத்தைத் தம் வாயாலே சொல்லும்படியுமாய்த்து.

ஈடு.—ஏழாம்பாட்டு. "குறுகினம்" என்ற இது என்கொண்டு அறிவதென்னில், 'பார்க்கலாகாதோ உடம்பு கோயிற்சாந்து நாறுகிறபடி?' என்கிறார்.

[குரைகழல்கள் குறுகினம்] - அணித்தென்னும் இத்தைப் பற்றச் சொல்லுகிறேனல்லேன், கிட்டினேம். [நம்கோவிந்தன்] - ஆஸ்ரிதர்க்கு ஸ்வம்மாக ப்ரஸித்தனான க்ருஷ்ணன். [கோவிந்தன் குடிகொண்டான்] - "அரவத்தமளியினேமழகிய பாற்கடலோடும் அரவிந்தப்பாவையும் தானும் அகம்படிவந்துபுகுந்து" என்கிறபடியே - திருவாய்ப்பாடியில் பஞ்சலக்ஷம் குடியோடுங்கூடக் காணும் இவர்நெஞ்சிலே புகுந்தது. [திரைஇத்யாதி] - திரைமிக்கிருந்துள்ள கடலாலே சுற்றும் சூழப்பட்டிருப்பதாய், தென்னூட்டுக்கு ஒருதிலகம்போலேயாய், மலைகளேநெருங்க வைத்தாற்போலே மணிமயமான மாடங்களையுடைத்தான திருவாட்டாற்றைக் கலவிருக்கையாகவுடைய ஸர்வேச்வரனுடைய. [மலரடிமேல்] - செவ்வி, குளிர்த்தி, பரிமளங்களையுடைத்தான திருவடிகளின் மேலே, பரிமளம் மிக்கிருந்துள்ள திருத்துழாயானது. [மெய் நின்றுகமழுமே] - என்னுடம்பு நிரந்தரமாக நாறுநின்றது. "அன்றிமற்றேருபாயம்" என்று தோழிசொல்லியும் "வேறிகொள்துழாய்மலர்நாறும்" என்று தாயார்சொல்லியும் போந்தஇது, தன்வாயாலே சொல்லும்படியாய்த்து. [மெய் நின்றுகமழுமே]- என்வார்த்தை அறியவேணுமாகில் என்னுடம்பை மோந்து பார்க்கமாட்டிகோளோ? (எ)

எட்டாம் பாட்டு.

மெய்ந்நின்றுகமழ்துளவ விரையேறுதிருமுடியன்
கைந்நின்றசக்கரத்தன் கருதுமிடம்பொருதுபுனல்
மைந்நின்றவரைபோலும் திருவுருவ†வாட்டாற்றூற்று
எந்நன்றிசெய்தேனை என்னெஞ்சில்திகழ்வதுவே?

ஆ.—(மெய்ந்நின்று.)-திருத்துழாய் தொடக்கமாக அபர்யந்தமான ஹ்ருத்யங்களையுடையனும், ஸ்வேச்சாதுவர்த்தியான ஸ்வரூபஸ்திதி ப்ரவ்ருத்திக ளுக்யாயோபதனும், நிரவயிக ஸௌந்தர்ய விசிஷ்டனுமிருந்த வாட்டாற்றூற்று நான் என்ன அநுகூலவ்ருத்தி பண்ணினேனுகக்கொண்டு தான் என்னுள்ளேபுகுந்து திகழுகிறது? என்கிறார்.

ஏழாம்பாட்டு.—குரைகழல்கள் இத்யாதி. "விரைகுழுவுநறுந்துளபம் மெய்ந்நின்றுகமழுமே" என்றதற்கை கடாக்ஷித்தவதாரிகை - குறுகினம் இத்யாதி. "மெய்" என்றது - சாடு. மெய் - ஸரீரம், ஸத்யமும். விவரணம் - பார்க்கலாகாதோ இத்யாதி.

அரவத்தமளிக்கு ஹாவம் - அணித்தென்னும் இத்யாதி. "நம்" என்றதற்கு ஹாவம் - ஆஸ்ரிதர்க்கு இத்யாதி. குடிகொண்டான் - ஸபரிகரமாக இருப்பிடமாகக்கொண்டான். நெஞ்சிலே யென்றபடி. "கோவிந்தன் குடிகொண்டான்" என்றதற்கு த்ருஷ்டாந்த பூர்வகமாக ஹாவம் - அரவத்தமளி இத்யாதி. பெரியாழ்வார் திருமொழி. அமளி - படுக்கை. அகம்படி - அந்தரங்கரான அடியார். "கோவிந்தன்" என்றதைப்பற்ற - திருவாய்ப்பாடியில் பஞ்சலக்ஷம் குடியோடும் என்றது. குழவு - கூட்டம். புடை - சுற்றும். நறு - நன்றான. மெய்ந்நின்று - மெய்யிலேநின்று. "நின்று" என்றதற்கு ஹாவம் - நிரந்தரமாக என்று. "கமழும்" என்றவர்த்தமாகார்த்தம் - நாறுநின்றது என்று. இதற்கு ஹேதம் - அன்றிமற்றேரு இத்யாதி. மெய்ந்நின்றுகமழுமதறியும்படி யென்னென்ன - என்வார்த்தை இத்யாதி; இது "கமழுமே" என்கிற அவதாரணார்த்தம். (ஈ)

ஒ.—எட்டாம்பாட்டில், அத்யந்த விலக்ஷணனான திருவாட்டாற்றில் எம்பெருமான் என் ஹ்ருதயத்திலே புகுந்து உஜ்ஜ்வலனாகைக்கு நான் என்ன நன்மை செய்தேன்? என்கிறார்.

[மெய் என்று தொடங்கி] - திருமேனியெல்லாம் நின்று கமழுகிற திருத்துழாயினுடைய பரிமளம் பரம்பாநின்றுள்ள திருமுடியையுடையனும், திருவுள்ளமான விடத்திலே சென்று யுத்தம்பண்ணி மீண்டுவந்து திருக்கையிலேயிருக்கும் திருவாழியையுடையனும், புனல்போலேயும் மைந்நின்ற வரைபோலேயுமிருக்கிற திருவுருவையுடைய திருவாட்டாற்றில் எம்பெருமானுக்கு.

ப.—அநந்தரம், நிரதிசயபோக்யமான வடிவோடே என்னெஞ்சிலேபுகுந்து உஜ்ஜ்வலனாகைக்கு அவனுக்கென்ன நன்மைசெய்தேன்? என்கிறார்.

மெய் நின்று - திருமேனிமுழுக்கநின்று, கமழ்துளபம் - பரிமளத்தைப் பண்ணுகிற திருத்துழாயினுடைய, விரை - ஸௌரப்யம், எறி - அதிசயித்துவருகிற, திருமுடியன் - திருமுடியையுடையனும், கருதிடம் - திருவுள்ளத்தில் நினைத்தவிடத்திலேபோய், பொருது-, கை நின்ற - (''ராகவாஸ்ஸுஜமாம்'' என்னுமாபோலே மீண்டு) திருக்கையிலேநின்ற, சக்கரத்தன் - திருவாழியையுடையனும், புனல் - ஸமுத்ரஜலம் போலே, நின்ற - ஸ்திரமான, மை - கருமையையுடைத்தான, வரைபோலும் - மலைபோலே, திருவுருவ - உருமிக்கவழகியவடிவையுடையனுக்கொண்டு, வாட்டாற்றூற்கு- திருவாட்டாற்றிலே ஸுலபனாவனுக்கு, (''ராவணேநாஹமஸ்மீதி'' என்று ப்ராணனைநிருதலையாக அடிமைசெய்த பெரியவுடையாரைப்போலவும், ''ஏஷோஹீதா'' என்ற திருவடியைப்போலவும்), என் நன்றி - என்ன நன்மை, செய்தேனை - தனக்குச் செய்தேனாக, என் நெஞ்சில் திகழ்வது - என்னெஞ்சிலே புகுந்து உஜ்ஜ்வலனாகிறது?

இ.—எட்டாம்பாட்டில், அத்யந்த விலக்ஷணனானவன் திருவாட்டாற்றிலே வந்து ஸுலபனும், என் ஹ்ருதயத்திலே புகுந்து உஜ்ஜ்வலனாகைக்கு நான் என்ன நன்மை செய்தேன்? என்கிறார்.

[மெய்நின்று கமழ்துளவ விரை] - திருமேனியிலே கமழாநின்றுள்ள திருத்துழாயின் பரிமளம். [எறிதிருமுடியன்] - அப்பரிமளம் மிகாநின்றுள்ள திருமுடியையுடையனும்; கடலில் நீர் ஸஞ்சலத்திலே எறுமாபோலே திருமுடியிலே வெள்ளமிடாநின்றது. [கைநின்ற சக்கரத்தன்] - நினைத்தவிடத்தே சென்று யுத்தம்பண்ணி எதிரிகளையழித்து மீண்டு திருக்கையிலே வர்த்திக்கும் திருவாழியையுடையனும், ஸர்வஜ்ஞனும் அடிமைசெய்து; ''ஸ்வதந்த்ரோஹ்யஸ்மி'' என்றும், ''ராகவாஸ்ஸுஜமாம்'' என்றும் சொல்லுகிறபடியே திருக்கையிலே வர்த்திக்குமாய்த்து. ''ஸமுத்ரமிவ நாகா:'' [புனல்மைந்நின்றவரை இத்யாதி] - புனல்போலேயும் மைபோலேயும் நின்றவரைபோலேயுமென்னுதல். [மைநின்றவரை] - மைமாறாத வரை; அஞ்ஜநகிரி என்னுதல். [வாட்டாற்றூற்கு] - 'வாட்டாற்றூர்க்கு' என்று பூர்வாசார்யரல்ல: வாட்டாற்றூனுக்கு என்றபடி. [எந்நன்றிசெய்தேனை] - என்ன நன்மை செய்தேனாக. பெரிய உடையாரைப்போலே என்னை அழியமாறினேனோ? திருவடியைப்போலே தனியிடத்திலே உதவினேனோ? தன்னுடைய ஆஜ்ஞாரூபமான விஹிதங்களை அநுஷ்டித்தேனோ? என்னெஞ்சில் புகுந்த பின்பு விளங்கினனென்னை இப்படி விரும்பிற்று.

ஈடு.—எட்டாம்பாட்டு. அத்யந்தவிலக்ஷணனனவன் திருவாட்டாற்றிலே வந்து ஸுலபனுய் என் ஹ்ருதயத்திலேவந்து புகுந்து உஜ்ஜ்வலஜ்ஞைகைக்கு நான் என்ன நன்மைசெய்தேனென்கிறார்.

[மெய் இத்யாதி] - திருமேனியிலேநின்று சமழாநின்றுள்ள திருத்துழாயிற் பரிமளமானது கொழித்துஎறடா நின்றுள்ள திருமுடியையுடையவன். கடலில் நீர் ஸஹ்யத்திலேறக் கொழித்தாற்போலே காணும் மலரடிமேல் திருத்துழாயின் பரிமளமானது மெய்யெல்லாங்கொண்டு தலைக்குமேலே போனபடி. [கை இத்யாதி] - ஹாவஜ்ஞைகையாலே ஸர்வேச்வரன் திருவுள்ளத்திற் கருத்தறிந்து யுத்தத்திலேபுக்கு எதிரிகளை அழியச்செய்து வெற்றி கொண்டு, ''ஸ்வதாணீம் வைதேஹ்யா விமுக்தம்'' (ஸ்வதாணீம் புநராவிமுக்த) என்கிறபடியே கையிலேவந்திருக்குமாய்த்து; * ''ராமவாக்யம் ஜகாம'' (ராமபார்ச்வம்ஜகாம) போலே. ''அயமஹமரவிந்தாயதாக்ஷ:'' (அதஹமரவிந்தாயதாக்ஷ:) - ஒரு மூத்தின் குடை நிழலிலே பையல் பெருமாளுக்கெதிராகவந்து தோன்றினவாறே போறுக்க மாட்டாமை மேல்விழுந்து, நெடும்போது பொருது இளைப்பித்து, அவன் மாயாப்ரயோகத்திலே கைவைக்குமளவானவாறே, ''இனிநமக்கும் அதுவேண்டிவரும்; அது நமக்கீடல்ல; பெருமாள் பண்ணின ப்ரதிஜ்ஞையை நாம் அழிக்கவொண்ணாது'' என்று மீண்டார். ''ராமேணாஹிப்ரதிஜ்ஞாதம்'' (ராமேணஹிப்ரதிஜ்ஞாதம்)-ஸத்யஸங்கல்பரான பெருமாள் ப்ரதிஜ்ஞைபண்ணுகிறார். ''ஹர்யர்க்ஷகணஸங்கை:'' (ஹர்யர்க்ஷகணஸங்கை:)-வீரர்கள்திரள்நடுவே ப்ரதிஜ்ஞைபண்ணுகிறது. ஆனபின்பு இவர்க்குநிர்விஷயமாக்க வொண்ணுதென்று பார்த்தார். ''அஹமரவிந்தாயதாக்ஷ:'' (அஹமரவிந்தாயதாக்ஷ:) - தாம்செய்த இக் கார்யம் தம்பரிகரத்தில் செய்வாரில்லாமற் செய்தாரல்லர்; பொறுமையாலே செய்தா

---

* எட்டாம்பாட்டு.—மெய்நின்றின்று இத்யாதி, ''மைந்நின்றவரைபோலும்'' என்றுதொடங்கி ''என்னெஞ்சில்திகழ்வது'' என்னுமளவும் கடாக்ஷித்தவதாரிகை அத்யந்த இத்யாதி.

மெய் நின்று - ஈச்வரன் மெய்யிலே நின்றென்றபடி. தளவவிரை - தளபத்தினுடைய விரை; தளவம்பரிமளம். ''மலரடிமேல்'' என்றதையும் கூட்டிக்கொண்டு ''திருமுடியன்'' என்னுமளவும் கடாக்ஷித்து ரஸோக்தி - கடலில்நீர் இத்யாதி. ''கருதுமிடம்பொருது - கைந்நின்றசக்கரத்தன்'' என்றநவயித்தி, இதற்கு ஹாவம் - ஹாவஜ்ஞைகையாலே இத்யாதி. ''ஸஸரோராவணம் ஹத்வா ராமாயாக்லிஷ்டகர்மணே । ததர்ஸாபிமுகாஸீநம் ஸ்வதாணீம் வைதேஹிகம்'' இதியுத்தரகாண்டே. இதற்கு த்ருஷ்டாந்தம் - ராமபார்ச்வம் இத்யாதி. ஸ்லோகார்த்தம் அருளிச்செய்வதாக ப்ரதிகேரபாதாநம் - அதவறீ இத்யாதி. ஸ்லோகத்தக்கவதாரிகை - ஒருழத்தின் இத்யாதி. நமக்குமதுவேண்டிவரும் இத்யாதிக்கு - நமக்கும் மாயாப்ரயோகம் வேண்டிவரும்: அப்போது அவனுக்குக் கொலைதப்பாது;கொன்றால் பெருமாள் ப்ரதிஜ்ஞாஹாநம் வருமென்று மீண்டாரென்றபடி. அப்படி பெருமாள் ப்ரதிஜ்ஞைபண்ணினதோவென்ன - ராமேண இத்யாதி. ''ராமேண ஹிப்ரதிஜ்ஞாதம் ஹர்யர்க்ஷகணஸங்கை: உத்தாடநாதிதூராணாம்ஸீதாயைவாபி வஸுந்தரா'' இதி ராவணம் ப்ரதிமாருதி:. ப்ரதிஜ்ஞையை யழிக்கவொண்ணுதென்னுமத்தை ஹேதுபூர்வகமாக அருளிச்செய்கிறார் - ஸத்யஸங்கல்பரான இத்யாதிவாக்யத்ரயத்தாலே. ''ஹரி நாயம்:'' என்னுதே, ''அரிவரநாயம்:'' என்றதற்கு ஹாவம் - தாம்செய்த இத்யாதி. பூசல்

---

‡ யெஸ்ஸ்யஷி பூதா என்று பாடம் காண்கிறது ஸ்ரீராமாயணத்தில்.

ரித்தனே. ''ஸூரவ்ருஹ்ஜாஃகீகிழே'' (ப்ராப்யலங்க்ராமகீர்த்திம்)-பூசல்ஹாக்யமென்று தனியேயொன்றுண்டிறே; அத்தால்வந்த புகழைத் தாம் படைத்தார். ''நிஶிசரரவ கிழ்'' (நிஶிசரபதிம்)-களவுபூசல் செய்வார்க்குஒதுங்க நிழலான பையலே; ராஜபுத்ரர்களே யகற்றித் தனியிடத்திலே பிராட்டியைப் பிரித்த பையலிறே. ''ஸூஜெள'' (ஆஜௌ)-அவர்களுக்கு அஹ்மியானசேவ்வைப்பூசலிலே. 'யொஜயிக்வாஸ்ரஜெண' (யோஜயித்வாஸ்ரமேண)-அவனையிகப்போடே கூட்டினார்; தாம் புகழோடே கூடினார். ''மமநஃதிவிஸாலம்• ஸூஜயிக்வா'' (ககநமதிவிசாலம்லங்கயித்வா) - நடுவிடை வெளி பெருத்திருக்கிற ஆகாசத்தை வருத்தமறக்கடந்தார். ''அகுஹுவாஸிநஃ'' (அர்க்கஸுநுஃ)-அதுசெய்தபடி ஆதித்யபுத்ரனென்று, தோற்றும்படியாயிருந்தது. உதயகிரியிலே தோற்றினல் பின்பு அஸ்தமித்து நிற்கக்காணு மித்தனையிறே. ''ராகவாஸ்ஸுஜாஃ'' (ராமபார்ஶ்வம்ஜகாம)-பெருமாளுப்பிரிந்தபடியாலே வந்து கிட்டுவதும் செய்தோமென்று தோற்றும்படி மதிக்கவொன்று செய்து வாராமையாலே, நேர்கொடு நேர் முன்னிற்கமாட்டாதே பெருமாளருகே போய் நின்றார். பையல் தலையைப் பிடுங்கிக்கொடுவந்து திருவடிகளிலே இடப்பெறுத நாம் என் சொல்லி முன்பே நிற்பதென்று பெருமாளருகே வந்துநின்றார். [புனல்இத்யாதி] - புனல் போலவும் மைபோலவும் நின்றவரைபோலவும் இருக்கிறவென்னுதல், மைமாறுதவரை போலேயென்னுதல். வாட்டாற்றூர்க்கென்று - பூஜாவாசியன்று. வாட்டாற்றனுக்கென்ற படி. [என்னன்றிசெய்தேனு] - என்ன நன்மை செய்தேனுக. பெரியவுடையாரைப் போலே தடையோடே முடிந்தேனே? திருவடியைப்போலே ''த்ருஷ்டாஸீதா'' (த்ருஷ்டாஸீதா) என்றுவந்தேனே? அன்றியே, தன்னுடைய ஆஜ்ஞாநுவர்த்தநம்பண்ணினேனும்படி விஹிதகர்மங்களே அநுஷ்டித்தேனே? என்னநன்மைசெய்தேனுக என்னைஞ் சிலே புகுந்தபின்பு பெருப்பேறுபெற்றுற்போலே விளங்காநின்றான்? ஐஸ்வர்யஸுசகமான தாரது, நினைத்ததுசெய்து தலைக்கட்டவல்ல பரிகரமது, வடிவழகது, இப்படிதுறை தோறும் தலைமைபெறும்படி யிருக்கிறவன் என்னைஞ்சிலேபுகுந்து பெருப்பேறுபெற்றானு யிராநின்றான். (அ)

பாக்யம் - வீரஶ்ரீ. ராக்ஷஸமென்னுதே ''நிஶிசரரவ கிழ்'' என்று விசேஷித்ததுக்கு ஹேதும் - களவுபூசல் இத்யாதி. அவன் களவுபூசல்செய்தானேவென்ன - ராஜபுத்ரர்களே இத்யாதி. ''கீர்த்திம் - ப்ராப்ய'' என்றதைப்பற்ற - தாம் புகழோடே கூடினார்என்றது. ஆதித்யன் அப்படி வருத்தமறக் கடப்பனேவென்ன - உதயகிரியிலே இத்யாதி. வந்து கிட்டுவதும் செய்தோமென்று தோற்றும்படி - வந்துகிட்டுமிடத்தில் இன்னதுசெய்தோமென்று தோற்றும்படியென்று கூட்டுவது. ''மதிக்கவொன்றசெய்து வாராமையாலே'' என்றதை விவரிக்கிறார் - பையல் இத்யாதி. புனல் - ஸமுத்ரம். ''திருமுடியன்'' இத்யாதிகளிற்சொன்ன ஏகவசநாதுகுணமாக ''வாட்டாற்றூற்கு'' என்றதற்கர்த்தம் - வாட்டாற்றூர்க்கு இத்யாதி. கீழெல்லாவற்றையும் கடாக்ஷித்து ஹேதும் - ஐஸ்வர்ய இத்யாதி. ''தஸ்ருஷ்டாஸீதா ராகவாணாஞ்வ ஸ்ரஸ்தீ । ஸஜீவஸ்ய கயிஜீவஸ்ய ராகவாஃஸதொயழே'' இதிஸுந்தரகாண்டே ராமம்ப்ரதி மாருதிஃ. ''நுவெடிய ஒயாதுஷ்டாஸீதெகிதத்தஃ'' இதி ஸங்க்ஷேபே. (அ)

ஒன்பதாம் பாட்டு.

திகழ்கின்றதிருமார்பில் திருமங்கைதன்னோடும்
திகழ்கின்றதிருமாலார் சேர்விடம்தண்வாட்டாறு
†புகழ்கின்றபுள்ளூர்தி போரரக்கர்குலம்கெடுத்தான்
இகழ்வின்றிஎன்னெஞ்சத்து எப்பொழுதும்பிரியானே.

ஆ.—(திகழ்கின்ற.) - தனக்கு திவ்யமஹிஷி, ஸர்வலோகேச்வரியான பெரியபிராட்டி; சேர்விடம், திருவாட்டாறு; தன் திருவடிகளில் கைங்கர்யைக ரதித்வமே புகழாகவுடையனுயிருந்த பெரியதிருவடி, தனக்கு திவ்யவாஹநமும் ஆச்ரிதவிரோயி நிரஸநோபகாரணமும்; இங்ஙனே யிருந்துவைத்து, என்னுடைய நிகர்ஷத்தைப்பார்த்து என்னையிகழாதே ஒருக்ஷணமென்னப்பிரியில் ப்ரிக்கமாட்டாத ஸ்வபாவத்தை யுடையனுய்க்கொண்டு என்னெஞ்சிலுள்ளே புகுந்திருந்தருளினன்; ஒருவனுடைய குணவத்தையிருக்கும்படியே இது! என்கிறார்.

ஒ—ஒன்பதாம்பாட்டில், அத்யந்த பரிபூர்ணனான் தான் இகழ்வின்றிக்கே என்நெஞ்சத்து எப்பொழுதும் பிரியாதிராநின்றான்; ஒருவனுடைய வ்யாமோஹமே! என்று ப்ரீதராகிறார். [திகழ்கின்ற என்று தொடங்கி] - விளங்காநின்ற திருமார்விலேயிருக்கிற பெரியபிராட்டியாரோடுங்கூட விளங்காநின்றுள்ள திருமாலார் சேரும் ஸ்யாநம், ப்ரமஹரமான திருவாட்டாறு. [புகழ் என்று தொடங்கி] - புகழுக்கெல்லாம் ஸ்யாநமான பெரிய திருவடியைத் தனக்கு வாஹநமாகவுடையனுமாய், பெருமிடுக்கான ராக்ஷஸகுலத்தைக் கெடுத்தான்.

ப.—அநந்தரம், ஸ்ரீயைப்பிரியாய்க்கொண்டு திருவாட்டாற்றிலே நின்றவன், என்நெஞ்சை ஒருகாலும் பிரிகிறிலனென்கிறார்.

திகழ்கின்ற திருமார்பில் - ஸ்வாபாவிகமாக விளங்குகிற திருமார்பில், திருமங்கைதன்னோடும் - நித்யயோகத்தாலே ஸ்வரூபயோக்யையான லக்ஷ்மியோடேகூட, திகழ்கின்ற திருமாலார் - விளங்குகிற ஸ்ரீயைப்பதியானவன், சேர்விடம் - (தான்) நித்யவாஸம்பண்ணுகிறவிடம், தண் - ப்ரமஹரமான, வாட்டாறு - திருவாட்டாறு; (''ஓவஸ்ஸவா'' என்கிறபடியே), புகழ்கின்ற - மஹாத்மகீர்த்திக்கு வாஸஸ்யாநமான, புள் - பெரியதிருவடியை, ஊர்தி - நடத்துவானும், (இவ்வாஹநவ்யாபாரத்தாலே), போர்-யுத்தோத்யோகமான, அரக்கர் - ராக்ஷஸருடைய, குலம் - நிரளை, கெடுத்தான் - நிரஸிப்பித்தவன், என்நெஞ்சத்து - ஹ்ருதயமான என்னெஞ்சிலே, இகழ்வின்றி - ஒரு அநாதரமின்றியே, எப்பொழுதும் - ஸர்வகாலமும், பிரியான் - பிரிகிறிலன்.

இ.—ஒன்பதாம்பாட்டில், அத்யந்தம் பூர்ணனான் தான் இகழாதே என்மநஸ்ஸை ஸர்வகாலமும் விடுகிறிலன்; ஒருவனுடைய வ்யாமோஹமே! என்று ப்ரீதராகிறார்.

[திகழ்கின்ற இத்யாதி] - வெறும்புறத்திலே விளங்காநிற்கிற திருமார்விலேயிருக்கிற பிராட்டியோட்டைச் சேர்த்தியழகாலும் விளங்காநின்றுள்ள ஸ்ரீயைப்பதியான

† 'புகழ்கின்ற' என்று வழங்குகின்றனர் சிலர்.

வன் சேரும்ஸ்யூநம் ஸ்ரமஹரமான வாட்டாறு. ஸ்ரீபூபகியான ஏற்றத்தேரபாதி போருமாய்த்து திருவாட்டாற்றைக் கலவிருக்கையாக வுடையனுகையும். [புகழ்கின்ற இத்யாதி] - புகழுக்கெல்லாம் ஸ்யூநமான பெரிய திருவடியை வாஹநமாகவுடையவன். புகழடங்கலும் பெரிய திருவடி பக்கலிலேயாய், அவதீயுடையவ னென்னும் புகழே யாய்த்து இவனுக்கு உள்ளது. [போராக்கர் குலம் கெடுத்தான்] - செவ்வைப்பூசலிலே ராகூஷவர்முத்தைக் குலமாக முடித்தான். ''ஸம்ஸாரி'' என்று இகழாதே ஸர்வகால மும் விடுகிறிலன்.

ஈடு.—ஒன்பதாம்பாட்டு அத்யந்தம் பூர்ணனுதான் இகழாதேளன்மநஸ்ஸை ஸர்வகாலமும் விடுகிறிலன்: ஒருவனுடைய வ்யாமோஹமே ! என்று ப்ரீதராகிறார்.

[திகழ்கின்றவித்யாதி] - வேறும்புறத்திலே விளங்காநின்றுள்ள திருமார்விலே எழுந்தருளியிருக்கிற பெரிய பிராட்டியாரோட்டைச் சேர்த்தியழகாலும் விளங்கா நின் றுள்ள ஸ்ரியஃபதியானவன். அல்லாதாரையும் ஸ்ரீமான்களென்று சொல்லுமிறே ஔப சாரிகமாக; அப்படியல்ல இங்கு; * திருமங்கை தன்னேடும் திகழ்கையாலே ஸ்ரியஃபதி யென்று பேரையுடையவன். இந்த ரேஹமும் ஒரு ப்ரயோஜநமில்லே; திருமாலானவ னென்றபடி; ''புள்ளூர்தி'' என்றவோபாதி. [சேர்விடம் தண்வாட்டாறு] - ஸ்ரியஃபதித் வத்தோபாதியும் போருமாய்த்து அவ்வூரை இருப்பிடமாகவுடையனுயிருக்கிறவதுவும். [புகழ்இத்யாதி] - புகழெல்லாம் தன்பக்கலிலே கிடக்கும்படியிருக்கிற பெரியதிருவடி - வாஹநம். புகழடங்கலும் கிடப்பதுஅவன்பக்கலிலே; அத்தையுடையனென்கிற இதுவே இவனுக்குஏற்றம். [போர்இத்யாதி] - செவ்வைப்பூசலிலே ராகூஷஸஜாதியைக் குலமாக முடித்தான். [இகழ்வுஇத்யாதி] - ''ஸம்ஸாரி'' என்று பிற்காலியாதே, ஒரு கார்யப்பாட் டாலே செய்தானுய், பின்பு விட்டுக் கைப்பிடிக்கையன்றிக்கே ஸர்வகாலமும் விடுகிறி லன். பித்தோபஹதர் சந்தநபங்கத்தினின்றும் கைவாங்கமாட்டாதாற்போலே, கூஷண காலமும் பிரியமாட்டுகிறிலன். (கூ)

ஒன்பதாம்பாட்டு.—திகழ்கின்ற இத்யாதி. ''திருமாலார்'' என்று தொடங்கி ''எப்பொழு தும் பிரியாளே'' என்னுமளவும் கடாகூத்தவதாரிகை - அத்யந்தம் இத்யாதி. ''பிரியாளே'' என்றத்தைப்பற்ற - ப்ரீதராகிறார் என்றது.

''திருமாலார்'' என்னுநிற்க ''திருமங்கை தன்னேடும்'' என்றதற்குக் கருத்தேதென்ன - அல்லாதாரையும் இத்யாதி வாக்யத்ரயம். இந்த ரேஹம் - ''திருமலார்'' என்றவிடத்தில் ரேஹம்; சமப்தத்தாலே - †''வாட்டாற்றூர்க்கு'' என்று கீழ்ச்சொன்ன ரேஹத்தை ஸமுச்சயிக்கிறது. புள்ளூர்தியென்றவோபாதி என்றது - ''புள்ளூர்தி'' என்கிற திருநாமம்போலே ''திருமால்'' என் கிற திருநாமமும் முக்யமென்றபடி. ''திருமாலார்'' என்றத்தோடே ''சேர்விடம் தண்வாட்டாறு'' என்றத்தையும் கூட்டி ஹாவம் - ஸ்ரியஃபதித்வத்தோபாதியும் இத்யாதி. ''புகழ்கின்றபுள்'' என்ற அதற்கர்த்தம் - புகழெல்லாம் இத்யாதி. புகழ்நிற்பது அவன்பக்கலிலேயானுல் ஈஸ்வரனுக்கு வாசியே தென்ன - புகழடங்கலும் இத்யாதி. போர் - போரிலே, யுத்தத்திலே. ''இகழ்வின்றி'' என்ற அதற்கும் ''எப்பொழுதும்'' என்றதற்கும் ஹாவம் - ஸம்ஸாரி இத்யாதி. இகழ்தல் - விடுதல். ஸத் ருஷ்டாந்தமாக விவரணம் - பித்தோபஹதர் இத்யாதி. சேர்விடமான தண்வாட்டாற்றிலேயிருக் கிற - புகழ்கின்ற புள்ளூர்தி என்றந்வயிப்பது. (கூ)

---

† இதைப் பார்க்கும்போது எட்டாம் பரசுரத்தில் வரட்டார்க்கு என்றபாடமிருக்குமோ என்று ஒரெண்ணம் தோன்றுகின்றது.

பத்தாம் பாட்டு.

பிரியாதாட்செய்யென்று பிறப்பறுத்துஆளறக்கொண்டான்
அரியாகிஇரணியனை ஆகங்கீண்டான்அன்று
பெரியார்க்குஆட்பட்டக்கால் பேறுதபயன்பெறுமாறு
வரிவாள்வாயரவணைமேல் வாட்டாற்றான்காட்டினனே.

ஆ.—(பிரியாத.) - இனியொருகாலமும் தன்னைப்பிரியாதே ஸர்வசேஷ வ்ருத்தியையும் பண்ணென்றுகொண்டு என்னை அங்கீகரித்தமாகக் கொண்டான் இன்று; அரியாகிஇரணியனை ஆகங்கீண்டான்அன்று; பெரியார், தங்களை ஆச்ரயித்த வர்களுடைய சிறுமையும் கொடுக்கப்படுகிற பொருளின் சிர்மையும் பாராதே, அவர் களுக்கு "இனியில்லை" என்னும் சீரியபொருளைக் கொடுப்பானென்னுமிடம், வரிவாள் வாயரவணைமேல் வாட்டாற்றான் என்பக்கலிலே காட்டியருளினனென்கிறார்.

ஒ—பத்தாம்பாட்டில், மஹாத்மாக்கள் சிலரை விஷயீகரிக்கப்புக்கால் ஒரு வர்க்கும் கிடையாத சீரியபொருளை அவர்களளவும்பாராதே கொடுப்பர் என்னும் இவ்வர்யஸ்யிதியை, வரிவாள் வாயரவணைமேல் வாட்டாற்றான் என்பக்கலிலே காட்டி யருளினன் என்கிறார்.

[பிரியாத என்றுதொடங்கி] - எனக்காக ஹிரண்யனுடைய ஹ்ருதயத்தைப் பிளந்தான் அன்று; இன்று "எனக்கேயாட்செய்" என்று எம்மாவீட்டிலே நான் ப்ரார்த் தித்தபடியே என்னை அடிமைகொண்டான். வாள் - ஒளி. உபயவிபூதியிலும் தம்மை யொழியத் திருவாய்மொழி பாடப்பெற்றாரில்லை என்று இவர்க்குக் கருத்து.

ப.—அஹங்காரம், பெரியவர்கள் எதிர்த்தலையில் சிறுமைபாராதே தம்தரத் திலே உபகரிப்பானென்னும் இத்தை எனக்கு ப்ரகாசிப்பித்தானென்கிறார்.

பிரியாத - யாவதாத்மபாவி பிரியாதே, ஆட்செய் - அடிமைசெய், என்று - என்றுசொல்லி, பிறப்பு - அதுக்கு விரோதியான ஜந்மஸம்பந்தத்தை, அறுத்து -, அற - மிகவும், ஆட்கொண்டான் - அடிமைகொண்டவனும், அன்று - (பெற்றதமப்ப னலே ப்ரஹ்லாதன் ஈடுபட்ட) அன்று, அரியாகி - நரஸிம்ஹமாய், இரணியனை - ஹிரண் யனுடைய, ஆகம் - சரீரத்தை, கீண்டான் - பிளந்தவனும், வரி - வரியையும், வாள் - ஒளியையுமுடைத்தாய், வாய் - வஹ்நிமுகமான, அரவணைமேல் - திருவரவணையின் மேலே, வாட்டாற்றான் - திருவாட்டாற்றிலே கண்வளர்ந்தருளுகிறவன், பெரியார்க்கு- பெரியவர்களுக்கு, ஆட்பட்டக்கால் - அடிமைப்பட்டால், பெறுத - பெறுதற்கரிதான, பயன் - ப்ரயோஜநங்களையும், பெறுமாறு - பெறும் ப்ரகாரத்தை, காட்டினன் - காட்டினன்.

இ.—பத்தாம்பாட்டில், மஹாபுருஷர்களை யடைந்தால் எதிர்த்தலைபாராதே தங்கள்தரத்தைக் கொடுப்பர்கள் என்னும் அர்த்தத்தை, திருவாட்டாற்றில் நாயனார் என்பக்கலிலே காட்டினர் என்கிறார்.

[பிரியாத இத்யாதி] - 'நமக்குப்பிரியாதே அடிமைசெய்' என்று அருளிச் செய்து, விரோதியையும்போக்கி, நித்யகைங்கர்யத்தையும் கொண்டான். "எனக்கே

யாட்செய்'' என்னவேண்டுமென்று எம்மாவீட்டிலே நாம் ப்ரார்த்தித்ததையும் செய்தான்: பொய்நின்ற ஞானத்திலே அபேக்ஷித்ததையும் செய்தான்: ''தனக்கேயாக'' என்றதையும் நமக்குச்செய்தான். [அரியாகி இத்யாதி] - தன்னையழியமாறி ஹிரண்யனுடைய முருட்டுடலை அநாயாஸேந கிழித்தான். [அன்று] - அச்செயலும் ப்ரஹ்லாதனுக்கு அன்று ; எனக்காகச் செய்தான் என்கிறார்: இன்று ''க்ரியதாமிதி'' என்கிறபடியேஎன்விரோதியைப்போக்கி நித்யகைங்கர்யத்தைக்கொண்டான். [பெரியார் இத்யாதி] - மஹாபுருஷர்களை ஆஸ்ரயித்தால் ஸுஸ்தரமான ப்ரயோஜநத்தைப்பெறுவர்களென்னும் அர்த்தத்தை, வரியையும் ஒளியையும் வாயையுமுடைய திருவனந்தாழ்வான்மேலே கண்வளர்ந்தருளுகிற திருவாட்டாற்றில் நாயனார் என்பக்கலிலே காட்டினார். என்கிறமை பாராதே தன்தரத்திலே செய்தருளினார். உபயவிபூதியிலும் தம்மைப்போலே திருவாய்மொழி பாடப்பெற்றாரில்லை என்றிருக்கிறார்.

ஏடு.—பத்தாம்பாட்டு. மஹாபுருஷர்களையடைந்தால் எதிர்த்தலை பாராதே தங்கள் தரத்தைக் கொடுப்பர்களென்னும் இவ்வர்த்தத்தை, திருவாட்டாற்றில் நாயனார் என்பக்கலிலே காட்டினரென்கிறார்.

[பிரியாது இத்யாதி] - 'நமக்குப்பிரியாதே அடிமைசெய்' என்றருளிச்செய்து, விரோதியையும்போக்கி, நித்யகைங்கர்யத்தையும் கொண்டான்; ''எனக்கேயாட்செய்'' என்னவேணுமென்று நாம் * எம்மாவீட்டிலே ப்ரார்த்தித்தபடியே செய்தான். ''இந்நின்ற நீர்மை இனியாமுறுமை'' என்று *போய்நின்றஞானத்தில் அபேக்ஷித்தபடியே பிறப்பறுத்தான். ''தனக்கேயாக'' என்று *எம்மாவீட்டிலே ப்ரார்த்தித்தபடியே ஆளாக்கொண்டான். [அரியாகி இத்யாதி] - இதுக்கு முன்பே தமக்குப் பண்ணிற்றொரு உபகாரத்தைச் சொல்லுகிறார். [அரியாகி] - ஸ்ரீநரஸிம்ஹமாய் ஹிரண்யனுடைய முருட்டுடலை அநாயாஸேந கிழித்தான். [அன்று] - அன்றுஅப்படி செய்தான்; இன்று இப்படிசெய்தான். ''க்ரியதாமிதிசோவத'' (க்ரியதாமிதிமாம்வத) என்கிறபடியே என்விரோதியைப்போக்கி நித்யகைங்கர்யத்தைக் கொண்டான். ''முகப்பே கூவிப்பணிகொள்ளாய்'' என்றிறே இவர் ப்ரார்த்தித்தது. [பெரியார்இத்யாதி] - மஹாபுருஷ ஸமாஸ்ரயணத்தாலே துர்லபமான ப்ரயோஜநத்தைப் பெறுவர்களென்னும் அர்த்தத்தை, வரிவாள்வா யரவணைமேல் வாட்டாற்றான் என்பக்கலிலே காட்டினான். ''உஹாதஸ்தாம் வஸ்ரயஹ்ஹ்வெதொ தெ

பத்தாம்பாட்டு.—பிரியாது இத்யாதி. ''பெரியார்க்கு ஆட்பட்டக்கால்'' இத்யாதியைக் கடாக்ஷித்தவதாரிகை - மஹாபுருஷர்களை இத்யாதி. தரத்தை - அதிசயத்தை.

கீழ்வாக்ய விவரணமாதல், இதுதான் கீழ் இவர் அர்த்தித்தபடியே செய்தானென்கிறாதல் - எனக்கேயாட்செய் இத்யாதி. ''அற'' என்றது-காலாவயியறுகையாய், நித்யகைங்கர்யம் கொண்டானென்னுதல்; ''அற'' என்று தனக்கேயற்றுத் தீரும்படி கைங்கர்யம் கொண்டானென்னுதல். இதுக்கு ஸுசகமப்தம் - தனக்கேயாக என்று எம்மாவீட்டில் இத்யாதிவாக்யம். ப்ரஹ்லாதனுக்குச் செய்தது தமக்குச்செய்ததாக நினைத்திருக்கும் இவர் திருவுள்ளத்தை யடியொற்றி யருளிச்செய்கிறார் - இதுக்குமுன்பே இத்யாதி. ''அன்று'' என்றதுக்கு ஹ்ரஸ்வம் - அன்று அப்படி இத்யாதி. இன்று செய்ததேதென்ன - க்ரியதாம் இத்யாதி. ''க்ரியதாமிதிசோவத'' என்கிறஇது * எம்மாவீட்டிலில்லையேயென்ன - முகப்பே இத்யாதி. ''மஹாபுருஷர்கள் தங்களை யாஸ்ரயித்தவர்களுக்கு அதிலபமான ப்ரயோஜநத்தைக் கொடுப்பர்கள்'' என்னுமதுக்கு ப்ரமாணம்- மஹாத்மநாம் இத்யாதி. ''ஹொஹ்ஹ்யஸாதஸ்ரணாகரணஹ்வம்ஸவாரமதெ

வரவஷீதஸ்கிஷ்மஹுதொவி'' (மஹாத்மநாம்ஸம்ச்ரயமப்யுபேதோ நைவாவஸீதத்யதிதுர்க்கதோபி)- மஹாபுருஷஸமாச்ரயணம்பண்ணினால், பின்னை அவர்கள், கொள்ளுகிறவன்சிறுமைபார்த்தல் கொடுக்கிறதின்பெருமைபார்த்தல் செய்யாதே கொடுப்பர்களென்று இங்ஙனே நாட்டிலே ஒன்றுண்டு; அத்தை என்பக்கலிலே காட்டினன். ப்ரஹ்லாதாதிகளைக்கொண்டு கவிபாடுவித்துக்கொண்டானே? (கo)

பதினோராம் பாட்டு.

காட்டித்தன்கனைகழல்கள் கடுநரகம்புகலோழித்த
வாட்டாற்றெம்பெருமானை வளங்குருகூர்ச்சடகோபன்
பாட்டாயதமிழ்மாலை ஆயிரத்துளிப்பத்தும்
கேட்டாரார்வானவர்கள் செவிக்கினியசெஞ்சொல்லே.

ஆ.—(காட்டி.) - * அயர்வறுமமரர்கள் இத்திருவாய்மொழியைக் கேட்டால் என்படுவரோ? என்கிறார்.

ஓ.—நிமமத்தில், அயர்வறுமமரர்கள் இத்திருவாய்மொழியைக் கேட்டால் வித்ருஷ்ணராவர் என்கிறார்.

[காட்டி என்றுதொடங்கி] - தன்திருவடிகளைக்காட்டித் தன்னைக் காணப்பெறுதே நான்பட்ட மஹாதுஃவத்தைப் போக்கின திருவாட்டாற்று எம்பெருமானை. [வளங்குருகூர் என்றுமேலுக்கு] - ஸம்ருத்தமான திருநகரியையுடைய ஆழ்வாருடைய இசையோடுகூடின தமிழ்த்தொடையான ஆயிரத்திருவாய்மொழியிலும், செவிக்கு இனிதாய்ச்செவ்வியசொல்லான இத்திருவாய்மொழியை.

ப.—அநந்தரம், இத்திருவாய்மொழிக்குப் பலமாக இதினுடைய நித்யஸ்ரீலோகீயதையை யருளிச்செய்கிறார்.

தன் கனைகழல்கள் - (நிரதிசயஸௌர்யமாம்படி ஸ்ப்ருஹணீயமான வீரக்கழலையுடைய) தன்திருவடிகளை, காட்டி-, கடு - துஸ்ஸஹமான, நரகம் புகல் - ஸம்ஸாரநிரயப்ரவேசத்தை, ஒழித்த-, வாட்டாறு - திருவாட்டாற்றில், எம்பெருமானை - ஸ்வாமியானவனைப்பற்றி, வளம் - அழகிய, குருகூர் - திருநகரிக்கு நிர்வாஹகரான, சடகோபன் - ஆழ்வாருடைய, பாட்டாய் - பாட்டாயிருக்கிற, தமிழ்மாலை - தமிழ்த்தொடையான, ஆயிரத்துள்-, செவிக்குஇனிய-செவிக்கு மதுரமாய், செஞ்சொல்- (கரணத்ரயமும் ஏகரூபமாகையாலே) செவ்வியசொல்லாயிருக்கிற, இப்பத்தும் - இவைபத்தையும், வான

வதிகஸ்யவிஷ்ணோ†ஸ்ஸாதுநாம்ஸம்ஸ்ரயம்ஹ்யுபேத்யவைதேஹநைவாவஸீதத்யதிகிஞ்சநமுதொவி'' இதி விஷ்ணுதர்மே க்ருத்ரவ்யாதபாக்யாக்ரே. விவரணம்-மஹாபுருஷ இத்யாதி. பெறுதபயன் பேறுமாறு - பெறப்போகாத புருஷார்த்தத்தையும் பெறுவர்களென்னுமர்த்தத்தையென்றஸ்தார்த்தம். இது ப்ரஹ்லாதாதிகளுக்கு மில்லையோ? அவர்களைப்பற்ற இவர்பெற்ற அதிசயமேதென்ன - ப்ரஹ்லாதாதிகளை இத்யாதி; இது "ஆதங்கீண்டான்" என்றதைக் கடாக்ஷித்து. அன்று - அரியாகி இரணியனை யாகங்கீண்டான்; இன்று - ப்ரியாதாட்செய்யென்று பிறப்பறுத்தாளறக்கொண்டான்; பெரியார்க்காட்பட்டக்கால் இத்யாதயர்த்யாக்வயः. (கo)

† ஸாதுநாஸ்ரயம் என்றுபாடம் காண்கிறது.

வர்கள் - நித்யஸூரிகள், கேட்டுஆரார் - கேட்டு (ஒருகாலும்) த்ருப்தராகார். இது கலிவிருத்தம். காழிசையுமாம்.

இ—நிமமத்தில், இத்திருவாய்மொழியை அநுஸந்திக்க உரியார் நித்யஸூரிகள் என்கிறார்.

[தன்கணைகழல்கள்காட்டி] - ஸ்வரூபகுணங்களை ப்ரகாசிப்பிக்கிற வடிவைக் காட்டி ஸம்ஸாரஸம்ஸர்கத்தைத் தவிர்த்தளன்னுதல். தன்னைக்காணப்பெறாத துக்கத்தைப்போக்கினவன் என்னுதல். திருவாட்டாற்றில் என் காயினை. [வளம்] - ஸம்ருத்தி. [பாட்டாய தமிழ்மாலை] - 'வாழ்வு மெய்யெய்தவே' என்கிறபடியே இசையோடே புணர்ப்புண்ட தமிழ்த்தொடை. நித்யஸூரிகள் இத்தைக்கேட்டால் பர்யாப்தராகார். இப்படிபடுகிறது உள்ளீடானவன் ஸீலத்தாலேயோவென்னில்;—பாசுரத்துக்காகவென்கிறது. ''வாழ்வு மெய்யெய்தவே'' என்கிறபடியே செவியே தொடங்கி ரஸிக்கும். [செஞ்சொல்லே] - நினைவும் சொலவும் செயலும் ஒருபடிப்பட்ட சொல்லு. ''சிந்தையாலும் சொல்லாலும் செய்கையினாலும்'' என்னு, ''செந்தமிழ்ப்பத்தும்'' என்றாரிறே.

ஈடு.—நிமமத்தில், இத்திருவாய்மொழியை யநுஸந்திக்கவுரியார் நித்யஸூரிகளென்கிறார்.

[காட்டித்தன்கணைகழல்கள்] - நிர்ஹேதுகமாகத் தன்ஸ்வரூபரூபகுண விஹவிதிகளை ப்ரகாசிப்பிக்கிற வடிவைக்காட்டி. [கடுநரகம்புகலோழித்த] - ''இங்நின்றநீர்மை இனியாமுறுமை'' என்று அபேக்ஷித்தபடியே செய்தானுய்த்து. அறிவுடையார்க்குப் பொறுக்கவொண்ணுத நரகம் ஸம்ஸாரமிறே. [வளம்]-அழகியதான திருநகரியைத் தம்மதாக வுடையரான ஆழ்வார். [பாட்டாய இத்யாதி] - ''வாழ்வு மெய்யெய்தவே'' (பாட்டேகேயேசமதுரம்) என்கிறபடியே இசையிலே புணர்ப்புண்ட திருவாய்மொழி ஆயிரத்திலும் இப்பத்தையும் கேட்டு. [ஆரார்வானவர்கள்] - இத்தைச் சொல்லக்கேளாநின்றுல் ''இன்னம்சொல், இன்னம்சொல்'' என்னுமித்தனைபோக்கி, கேட்ட அம்சத்தாலே த்ருப்திபிறவார்களாய்த்து. ஹேயத்குணங்களை யநுஸந்தித்து, அதுக்குப் போக்குவிடுகைக்குப் பாசுரமின்றிக்கே விம்மல் பொருமலாய்ப் படுகிறவர்கள், இப்பாசுரம் கேட்டால் விடார்களிறே. அதுக்கு ஹேதுவென்? அவனுடைய ஸீலகுணநுஸந்தாநமுண்டாயோவென்னில்; இப்பாசுரத்துக்குத் தோற்றேன்கிறார். [செவிக்கினிய] - ''வாழ்வு மெய்யெய்தவே'' (ஸம்ஸ்ரவேமதுரம்) என்கிறபடியே செவிவழியேபுக்கு நெஞ்சுக்கு இனிதாகையன்றிக்கே, செவிப்பட்டபோதேபிடித்து ரஸிக்கையாலே. அதுக்கடி யென்னென்னில்,—[செஞ்சொல்லே] - நினைவும் சொலவும் செயலும் ஒருபடிப்பட்டிருக்கையாலே. ''சிந்தை

நிமமம் - காட்டி இத்யாதி. ''கேட்டாரார் வானவர்கள்'' இத்யாதிபைக் கடாகஷித்தவதாரிகை - இத்திருவாய்மொழியை இத்யாதி.

கணை - ஆஜாநுபாஹுவாதி. ''கழல்'' என்றது - திருமேனிக்கும் உபலக்ஷணம். ''காட்டித் தன்கணைகழல்கள்'' என்றதுக்கு ஹாவம் - நிர்ஹேதுக இத்யாதி. * கடுமைக்கு ஹாவம் - அறிவுடையார்க்கு இத்யாதி. பாட்டாய - தாளரூபமான. ''பாட்டாய'' என்றதுக்கு வாஸனை - பாட்டேயே இத்யாதி. புணர்ப்புண்ட - கட்டுண்ட. ''ஆரார்'' என்றதுக்கு ஹாவம் - இத்தைக்கேட்ட இத்யாதி. அவர்களப்படி அத்ருப்தராயிருப்பர்களோவென்ன - ஹேயகுணங்களை இத்யாதி. விம்மல் பொருமல் - அத்யுத்கண்ட ப்ரீதியால்வந்த ஸரீரவிகாரம். மேலுக்கவதாரிகை - அதுக்கு ஹேது இத்யாதி. ''செஞ்சொல்'' என்றுல் கரணத்ரயைகரூப்ய வாசகமாமோவென்ன - சிந்தையாலும்

யாலும் சொல்லாலும் செய்கையினாலும் தேவபிரானையே'' என்ற ''செந்தமிழ்ப்பத்தும்'' என்றபடியே இவர்தாமே. (கக)

இத்யாதி. 'காட்டித்தன்' இத்யாதிய, 'ஆயிரத்திலும்' வைத்துக்கொண்டு, 'செவிக்கினிய செஞ் சொல்லான - இப்பத்தும் கேட்டு - வானவர்கள் - ஆரார்' இத்யன்வயம். '' ஸ்வஸ்வாமிவியாம் விஜ்ஞாம் விஜயிக்ஷுர்மஹாகவிம் । ஸம்ஸ்ருவெயிரமவாக்யம் வெதெஹ்யாவ்யாஜீ ஹாரஹ ''. இதி ஸுந்தரகாண்டே. (ங - க) (கக)

த்ரவிடோபநிஷத்வங்கதி.—வெகுண்யாதிவிவெஸயிஷ்டம் வ்ருதீஸம் தவ்வுகீயவியிநெவியாதகாழி । வஸ்துநிஷ்ட்ரிதிகொந வெஹிவஷ்டெவாஜ்ஞாயிகாவ்வவிஷயொவகூதீஹ்தீயாஃ ।

த்ரவிடோபநிஷத்தாத்பர்யரத்நாவலி.—உக்ரகூராய, கெஸவகுருவே ஹிரவிவ, தயாஸீஸுநாராயணகுராய, வெஹிகுராவ்ணுவாநா, ஸிஷ்டதாஸவீ வகுஜநீயகுஹாவாய । கவ்ஹோஜாக்ஷகு, மொவிநத, உதவுயஸு ஸ்ரீ வதிகுராதி ஹாவெஃ.ஸ்ரீரங்கதீவெராஜ்யகொயவ்வவடிவிதராணெவெதிதெநாஸ்ஹாவதி ।

திருவாய்மொழி நூற்றந்தாதி

அருளாலடியிலெடித்தமாலன்பால்
இருளார்ந்ததமுடம்பையிச்சித்து — இருவிசும்பில்
இதமுடன்கொண்டேக இவரிசைவுபார்த்திருந்த
சுத்திசொல்லும்மாறன்செஞ்சொல்.

ஆழ்வார் திருவடிகளேஸரணம், எம்பெருமானார்திருவடிகளேஸரணம், சீயர்திருவடிகளேஸரணம்.

ஏழாந்திருவாய்மொழி – செஞ்சொல் - ப்ரவேஸங்கள்.

ஆ.—(செஞ்சொற்கவிகாள்.) - தான் சொன்னபடியே செய்யக்கடவனுகைச் சமைந்துகொண்டு தம்முடைய திருவுள்ளத்திலே புகுந்தருளின எம்பெருமான் தம் மோடுகலந்த கலவியாலே தமக்குப்பிறந்த நிரவயிகப்ரீதிய திஸயத்தாலே;

ஒ.—ஏழாந்திருவாய்மொழியில், இப்படி எம்பெருமான், ஆழ்வார் தப்பக்க லிலே அத்யந்நிவிஷ்டனுய், அவர் வியித்தபடியே செய்யக்கடவனுயிருந்துவைத்து, தன்னுடைய சாபலாதிஸயத்தாலே இவரை இத்தேஹத்தோடேகூடத் திருநாட்டிலே கொடுபோகையிலே மிகவும் அந்நிவிஷ்டனுய், இத்தையறியில் இவர் இசையார் என்று பார்த்து, இவரைக்கொண்டு திருவாய்மொழி பாடுவிடபாரைப்போலே புகுந்து, இவ ருடைய திருமேனியிலும் இவர்தம்மோடுகலந்து அத்யந்நிவேஸத்தைப்பண்ணி, இவ் வுடம்போடேகூடத் திருநாடேறக் கொடுபோகையிலே அவன் அந்நிவேஸிக்கிற படியையறிந்து, ''இவன் இப்படி அந்நிவேஸிக்கில் ஒருநாளும் ப்ரக்ருதிஸம்ஸ்லேஷத் துக்கு உபாயமில்லை. ஆனபின்பு, அவனுடைய அநுபவத்துக்கு விரோதியான ப்ர க்ருதிஸம்வந்யத்தை அவனியிட்டு இங்கே அறுப்பித்துக் கொள்ளவேணும்'' என்று பார்த்தருளி,''சதுர்விம்ஸதிதத்த்வாத்மக ப்ரக்ருதி தத்த்வத்தோடுள்ள ஸம்வந்யத்தை யறுத்து என்னைக் கொடுபோகவேணும்'' என்று ப்ரார்த்திக்க, உம்முடைய உடம்

பொழிய வேறு எனக்கு ப்ராப்பமுண்டோ?'' என்று அவன் நிர்வஹ்யிக்க, ''என்பக்கலுண்டான விஷயீகாரத்தாலேயன்றே இவ்வுடம்பில் அஹ்நிவேஶம் பண்ணுகிறது? ஆனபின்பு, எனக்காக இதில் ஆசையைவிட்டு அருளவேணும்'' என்று இவர் ஶரணம் புக்கிரக்க, அவனும் ''அப்படியேசெய்கிறோம்'' என்றிசைய, அத்யந்தஹ்ருஷ்டராய், அவனுடைய ஸௌஶீல்யாதிகுணங்களிலே அழுந்தி, ''அவனுக்கு அடிமைசெய்யப் புகில் அவனுடைய ஸௌஶீல்யாதிகுணத்தாலே பிழைக்கவொண்ணாது: ஆனபின்பு, தன்தாமை வேண்டியிருப்பார் அவனுடைய குணத்திலே அகப்படாதே பரிஹரித்து அடிமைசெய்யுங்கோள்'' என்று ப்ரீத்யதிஶயத்தாலே அருளிச்செய்கிறார்.

ப.—ஏழாந்திருவாய்மொழியில், கீழ் இவர்க்குப் பரமபதத்தைக் கொடுக்கையிலே யுத்யோகித்த ஸர்வேஶ்வரன் இவர் முடியிலே திருவடிகளைவைத்துத் திருவுள்ளத்திலே பூர்ணமாகப் புகுந்திருந்து, ''விரைகுழுவுநறுந்துளவம் மெய்ந்நின்றுகமழும்''என்னும்படி திருமேனி முழுக்கத் திருத்துழாய் பரிமளமாம்படியாக இவருடைய ஶரீரத்தோடு அந்தஃகரணத்தோடு மற்றுமுள்ள அவயவங்களோடுவாசியற அத்யஹ்நிவிஷ்டனுய் ஆதரிக்கிறபடியைக்கண்டு, இவ்வாதராதிஶயத்துக்கு ஹேதுவான அவனுடைய ஆஶ்ரிதவிஷயமான அஹ்நிவேஶத்தையும், அதிஶயிதஸௌக்யத்வத்தையும், ஆஶ்ரிததேஹத்திலாதரத்தையும், அதில்அத்யந்தாஹ்நிவேஶத்தையும், ரஸிகத்வத்தையும், ஸ்வாயிகத்வத்தையும், ஆஶ்ரிதார்த்த தேஹவாஸத்தையும், ஸர்வப்ரகாரஸம்ஶ்லேஷத்தையும், ஜகத்ஸ்ருஷ்ட்யாதி ஹேதுத்வத்தையும், அபேக்ஷாபாரீநத்வத்தையும் அநுஸந்தித்து, ''ஏவம்விதனான ஸர்வேஶ்வரனுடைய ஆதராதிஶய மிருந்தபடியால், நாம் ''இனியாமுறுமை'' என்று உபேக்ஷித்த தேஹாதிகளையும் விளம்பமறக் கொண்டுபோவாரைப் போலே யிராநின்றது; அஸ்த்திரமாய், தோஷஸம்ஶ்லிஷ்டமாகையாலே அபுருஷார்த்தமாய், அதஸ்வவிரோயியாகையாலே அநஹிமதமாயிருக்கிற இத்தை நம்பக்கல் ஆதரத்தாலே விரும்பாநின்றான்: இத்தை யறிவித்தும் நாம் அவனை அர்த்திக்கவும் விடுவித்துக் கொள்ளுவோம்'' என்று தெற்கில் திருமலையிலே அவனைப்பேக்ஷிக்க, அதுக்காக அவன் நிவர்த்திப்பிக்கையிலே உத்யுக்தனுப்படியைக் கண்டு ஹ்ருஷ்டராகிறார்.

இ.—ஏழாந் திருவாய்மொழியில், ''விதிவகையே'' என்கிறபடியே ஆழ்வார் விதித்தபடியே செய்வானும்படி இவர்க்குப் பரதந்த்ரனுய்வைத்து, தன்னுடைய சரமாதிஶயத்தாலே ''தலைமேலதாளிணைகள்'' என்றும், ''நறுந்துளவம் மெய்ந்நின்று கமழும்'' என்றும் சொல்லுகிறபடியே இவருடைய திருமேனியை மிகவும்விரும்பி, இத்தேஹத்தோடுகூடப் பரமபதத்தில் கூடக்கொண்டு போகையிலே அஹ்நிவேஶிக்கிறபடியைக்கண்டு, ''நாம் பொய்ந்நின்ற ஞானத்திலே 'கழித்துத் தரவேணும்' என்று அபேக்ஷித்தபோதே செய்யாதொழிந்தது நம்மைக்கொண்டு ப்ரவர்த்யம் தலைக்கட்டுகைக்காக என்றிருந்தோம்: அது ஒருவ்யாஜமாய் ஶரீரத்தையே விரும்புகிறனுயிருந்தது. இதுக்கு அடி நம்முடைய ஶரீரமென்று நம்பக்கல் விருப்பத்தாலே விரும்புகிறனித்தனை; இது ஹேயப்ரசுரமென்றும் அறிகிறிலன்: இது நமக்கு அநஹிமதமென்றும் அறிகிறிலன்:†உபசயாத்மகமாகையாலே அஸ்த்திரத்வாதி ஹேயப்ரசுரமென்றும் த்வதநுபவவிரோயியாகையாலே அநஹிமதமென்றும் அறிவித்து, இத்தைக்கழித்துத்தரவேணும்

† ''என்றுபார்த்து'' என்றுற்போலச் சிலபதங்களைக்கூட்டிஞலொழிய அன்வயிக்கா தென்று தோன்றுகின்றது.

என்று ப்ரார்த்திக்க, ''உம்மூடைய உடம்பொழிய நமக்கு ப்ராப்யமுண்டோ? உம் மூடைய உக்தேஶ்யத்தை நீர் விடாநின்றீரோ?'' என்று அவன் நிர்வர்யிக்க, ''நீ என் பக்கலுண்டான விருப்பமிறே என்ஶரீரத்தை விரும்புகிறது: இதுஎனக்கு அத்யந்தம் அகலிமதம்: எனக்காக இதில் நசையைவிட்டு அநுளவேணும்'' என்று ஶரணம்புக் கிரக்க, தன்க்கு இத்தைவிடுகை ப்ரியமன்றிக்கே யிருக்கச்செய்தேயும், இவரைக் குறித்துப் பரதந்த்ரனுகையாலே ''அப்படிசெய்கிறேம்'' என்று இசைய, ''தனக்கு அஹி மதமாயிருக்க நாம் சொன்னபடி செய்வதே!'' என்று அத்யந்தம் ஹ்ருஷ்டராய், ''இவ னுடைய ஶீலாதிகுணங்களிலே அழுந்தி இவ்விஷயத்திலே அநுஜீவிக்க இழிவார் ஐஶ் வர்யத்திலே இழியப்பாருங்கோள்: தந்தாமை வேண்டியிருப்பார் அவனுடைய ஶீலாதி குணங்களிலே அகப்படாதே கொள்ளுங்கோள்'' என்று ப்ரீத்யதிஶயத்தாலே உப தேஶித்துத் தலைக்கட்டுகிறார்.

ஈடு.—''விதிவகையே'' என்கிறபடியே அவன் தம்மைக்குறித்துப் பரதந்த்ர னுய் நிற்கிறபடியை யநுஸந்தித்தார். அவ்வழியாலே ''விரைகுழவுநறுந்துளவம்மேய்ந் நின்ற கமழுமே'' என்றும் ''தலைமேலதாளிணைகள்'' என்றும் அவன்தன் திருமேனி யோடேபுகுந்து கலந்தபடியைப் பேசினார்.

தம்மோடேவந்து கலந்து தம்மைக்குறித்துப்பரதந்த்ரனுய் திருமேனியை விட மாட்டாதே அவன் பண்ணுகிற அஹிநிவேஶத்தைக்கண்டு; ''இந்நின்ற நீர்மைஇனியா முறுமை'' என்று நாம்அடியிலேயார்த்திக்கச்செய்தேயும் இங்கு நம்மைவைத்தது ஒருகார்ய புத்யாவாகாதே என்றிருந்தோம்; அதாவது - இப்ப்ரவ்ருத்தம் தலைக்கட்டுவித்துக் கொள் ளுகையிறே; அது அவ்வளவிலன்றிக்கே நம்முடம்பு விரும்பி விடமாட்டாமையாலேயா யிருந்தது; இவன் வேறுமுடம்பனுயிருந்தான். ''கவிபாடுவித்துக்கொள்ளுகையென்று வ்யாஜமாத்ரம்: ஆநுஷங்கிக஫லமாய்வந்ததத்தனை; இதுவேஇவனுக்குநிஜவு'' என்றுபார்த் தார்; ''இவன் இவ்வுடம்பை விரும்புகிறது நம்பக்கல் ஆதரத்தாலேயிறே; இப்படி நம்மை விரும்பின இவ்வளவிலே நம் அபேக்ஷிதம் செய்வித்துக்கொள்ளுவோம்'' என்று பார்த்து, ''தேவர் திருவுள்ளத்திலோடுகிறதென்?'' என்ருர்; 'நான்உடம்பனுயே வேறுன் றியாமல் படுகிறபாடன்றே, மற்றுண்டோ?'' என்ருன்; ''அங்ஙனேண்ணுது: தேவர் இதில் பண்ணியருளுகிற விருப்பத்தைத் தவிரவேணும்'' என்று விண்ணப்பஞ் செய்ய; இவர் விலக்கினது மிகவும் அவனுக்கு அஹிநிவேஶத்துக்கு உடலாய்த்து; தந்தாமைக் கொண்டு அருமைப்படுத்துவர்களிறே மேல்விழுகைக்காக; அதுபோலேயாய்த்து. இப்படி

செஞ்சொல் ப்ரவேஶம், ஸங்கதிகதநார்த்தம் விருத்தாநுவாதம் - விதிவகை இத்யாதி- ஸங்கதி-தம்மோடே இத்யாதி. *என்றைக்குமென்னையிலே-அவன் தம்மைவைத்ததற்கு ஹேது கவிபாடுகைக்கென்றருளிச்செய்யாநிற்க, தம் உடம்பில் வ்யாமோஹத்தாலே யென்கிற தென்னென்ன அருளிச்செய்கிறார் - இந்நின்ற இத்யாதி வாக்யஜந்யத்தாலே. வேறுமுடம் பனுயிருந்தான் - கேவலம் தேஹசபலனுயிருந்தானென்றபடி. ஆனல் ப்ரபந்தம் பாடுவிக்கவில்லையோ வென்ன - கவிபாடுவித்து இத்யாதி வாக்யத்ரயம். ஆநுஷங்கிக஫லம்- அப்ரதாநமாக வந்ததென்ற படி. இதுவே - உடம்பை விரும்பிவிடமாட்டாததுவே. விரும்பிவிடமாட்டாமையாலே என்றது- ''மாயவாக்கை யிதனுள்புக்கு'' இத்யாதியைப்பற்ற. இப்படி விரும்புகிறவனைத் தவிரவேணுமென் ருல் கேட்குமோவென்ன அருளிச்செய்கிறார் - இவன் இவ்வுடம்பை இத்யாதி. ''மங்கவொட்டு'' என்றதைப்பற்றி - இதில் பண்ணியருளுகிற விருப்பத்தைத்தவிரவேணும் என்றது. ''நன்கென் னுடலம் மகிவிடான்'' என்றதைக் கடாக்ஷித்தருளிச்செய்கிறார் - இவர் விலக்கினது இத்யாதி.

இவன் இதிலே பண்ணுகிற ஆதரத்தைக்கண்டு, ''இவனுடைய அஹிநிவேஶமிருந்தபடியால் இவ்வுடம்போடே நம்மைக்கொடுபோக நினைத்திருக்கிறுன்போலேயிருந்தது; அப்படிச்செய்தபோது இஸ்லம்ஸாரம் நமக்கு நித்யமாய்விடும்; இங்கேயிருந்து இதுக்கோரு முடிவுகண்டதாமத்தை யிழந்தோமாவோமித்தனை; இத்தைக் கழித்துக்கோள்ளவேணும்'' என்றுபார்த்தார்; ''என்பக்கற்பண்ணின அஹிநிவேஶமாகில் இத்தை விரும்புகைக்கு அடி, எனக்கு இது அநஹிமதம்; தேவரும் இதில்பண்ணுகிற விருப்பத்தைத் தவிர வேணும்'' என்ன; ''நீர் உம்முடைய உத்தேஶ்யத்தை விடாதவோபாதி நாமும் நம்உத்தேஶ்யத்தை விடுவதோமோ?'' என்ன; ''இவன் இப்படிவிரும்புகிறது இதினுடைய ஶோஷஶர்ஶநம்பண்ணுமையிறே. இவனை இதில் ஶோஷஶர்ஶநத்தைப் பண்ணுவிப்போம்'' என்று பார்த்து, ''இதாகிறது உபசயாத்மகமாய் ஹேயமாயிருப்பதோன்று; விரும்பப்படும் ஆத்மாவைப்போலே ஏகரூபமாய் லிலக்ஷணமாயிருப்பதோன்றல்ல; இத்தையுபேக்ஷித்தருளவேணும்'' என்றூர்; அதுதானே இவனுக்கு விருப்பத்துக்கு உடலாய்த்து; அஹிமதவிஷயத்திலழுக்கு உகப்பாரைப்போலே ''ஸர்வஶா இவன் விடமாட்டானுயிருந்தான்; இவன்றன்னைக் காற்கட்டியாகிலும் இக்காற்கட்டை அவிழ்த்துக்கோள்ளுவோம்'' என்று பார்த்து, ''இதில்பண்ணுகிறவிருப்பத்தை தேவர் தவிரவேணும்'' என்று ஶரணம்புக்கார்; இவர் †சொன்னபடியே செய்யஇழிந்தவனுகையாலே தனக்கு இதிலே மேன்மேல் அபேக்ஷை செல்லச்செய்தேயும் இவர்க்கு இது இப்படி உபேக்ஷாவிஷயமான பின்பு நாமும் இனி இத்தை வருந்தி உபேக்ஷிப்போம்'' என்று பார்த்தான். இவர்பக்கல் பாரதந்த்ர்யத்தாலே இத்தையோழிய அவன் கொடுபோவானுயிருந்தான். ஆக, இப்படியாலே தொடங்கின பாரதந்த்ர்யத்தை நிரூபித்து, ''ஸர்வநியந்தாவாய் ஸர்

அதெப்படியென்ன - நந்தாமை இத்யாதி. அஹிநிவேஶமிருந்தபடியால் என்றது - ''ஒருமாநொடியும் பிரியான்'' இத்யாதியைப்பற்ற. பலபாட்டுக்களிலும் இவர் தேஹாத்தில் அவன் வ்யாமோஹம் பண்ணும் ப்ரகாரம் சொல்லுகையைப்பற்ற வேஹாமுகமான உக்திப்ரத்யுக்திகளே யருளிச்செய்கிறூர் - என்பக்கல் இத்யாதி. ''திருமாலிருஞ்சோலை - கைவிடேல்'' என்றதத்தைப்பற்ற - நீர் உம்முடைய உத்தேஶ்யத்தை இத்யாதி. இப்ப்ரவேஶத்திலே மூன்றிடத்திலே ஈஶ்வரன் விரும்புகிறதாகவும் இவர் தவிரச்சொன்னதாகவும் சொல்லுகிறது - பலபாட்டுக்களிலும் இவர் திருமேனியில் ஈஶ்வரனுக்கு உண்டான வ்யாமோஹத்தைச் சொல்லுகையாலே. அங்ஙனமன்றிக்கே, 'மங்கவொட்டே'' என்றும், பின்னும் ''மங்கவொட்டுஉண்மாமாயை'' என்றும் சொல்ல, பின்னும் அவன் இதின்தோஷம் அறியமாட்டாமையாலே ஆனைக்குப்பு ஆடுவாரைப்போலே யிருக்க, ''பொங்கைம் புலனும்'' இத்யாதியாலே ஶோஷஶர்ஶநம் பண்ணுவிக்கையாலே முக்காலருளிச்செய்கிறுரென்றூல் நல்லது; இது பாட்டுவ்யாக்யாநங்களிலே ஸ்புடம். 'இதினுடைய தோஷஶர்ஶநமென்று தொடங்கி ஹேயமாயிருப்பதோன்றென்னுமளவும் - ''பொங்கைம்புலனும்'' இத்யாதியைப்பற்ற. உபசயம் என்றது - அபசயத்துக்கும் உபலக்ஷணம். விருத்திக்ஷயங்களே யுடைத்தாயென்றபடி. காற்கட்டை-விரோதியானவுடம்பை. ''மங்கவொட்டு'' என்றதத்தைப்பற்ற - தவிரவேணும் என்றது. ''நங்கள் கோனே'' என்று ஸ்வாமித்வத்தை யநுஸந்தியாலும், ''மங்கவொட்டு'' என்று ப்ரார்த்திக்கையாலும், ''ஶாயபுநாதிஃ-ஶரணாமதிஃ - யாதவா-வுவதிஃ'' என்றிருக்கையாலே-சரண்ம் புக்கார் என்றது. இவர் ப்ரார்த்தித்தால் அத்யஹிவிஷ்டனுனவன் தவிருமோவென்ன - இவர் சொன்னபடியே இத்யாதி. வருந்தி என்றது - ''தானுங்காரமாய்ப்புக்கு'' என்றதிலே விவக்ஷிதம். ''மானுங்காரமனங்கெட'' இத்யாதியைப்பற்ற - இத்தையோழிய அவன் கொடுபோவானுயிருந்தான் என்றது. தொடங்கின பாரதந்த்ர்யத்தை நிரூபித்து - * அருள்பெறுவாரில் தொடங்கின

---

† சொன்னபடிஎன்று அடையவளைந்தான்பாடம்.

வாதிகளான ஸர்வேச்வரன், தனக்கு இதிலே அபேக்ஷையும் செல்லாநிற்கச்செய்தே, நாம் 'இத்தைத் தவிரவேணும்' என்னத் தவிருவதே! இதோரு ஸீலமிருக்கும்படியே !! இவ்விஷயத்தில் ஒருவரும் இழியாதேகோள்ளுங்கோள் ; இழிந்து நான் பட்டதுவே யமையும்''என்று ப்ரீதிப்ரகர்ஷத்தாலே பிறர்க்குச் சொல்லித் தலைக்கட்டுகிறார்.

முதற் பாட்டு.

செஞ்சொற்கவிகாள்! உயிர்காத்தாட்செய்ம்மின் திருமாலிருஞ்சோலை
வஞ்சக்கள்வன்மாமாயன் மாயக்கவியாய்வந்துஎன்
நெஞ்சுமுயிரும்உள்கலந்து நின்றூர் அறியாவண்ணம்என்
நெஞ்சுமுயிருமவையுண்டு தானேயாகிநிறைந்தானே.

ஆ.—எம்பெருமானைக் கவிபாடுகிறவரைக் குறித்து, ''நீங்கள் அவனுக்கு அடிமைசெய்யுமிடத்தில் உங்களுயிரைக் காத்துக்கொண்டு அடிமைசெய்புங்கோள். அவன் தனக்குஅடிமைசெய்வாரை அலாத்ம்யமாம்படி அதிமாத்ரஸம்ச்லேஷத்தைப் பண்ணிவாயிக்குமே:அவர்களுடையஇச்சாநுகுணமாக அடிமைசெய்வித்துக்கொள்ளும் ஸ்வபாவனல்லனே யென்னில் ;—அவன் வாயிக்கும் ஸ்வபாவனுயிருந்துவைத்தே வாயியாதானைப்போலே யிருக்கும் ஒருமஹாவஞ்சகன் கிடிகோள்;எங்ஙனேயென்னில்;-என்னை உபகரணமாகக்கொண்டு கவிசொல்லுகையென்னும் வ்யாஜத்தினுலே என்னுள்ளேபுகுந்து கலந்து, ''இன்னபடிசெய்தருளினன்'' என்று * அயர்வறுமமரர்க்கும் அறிய நிலமல்லாதபடிதாருபடி என்னெஞ்சையும் உயிரையும் தன்னுள்ளேயடக்கி, தானேயாம்படி மாள லூஜித்து பரிபூர்ணனனன்''என்கிறார்.

ஒ.—முதற்பாட்டில், ''திருவாய்மொழி பாடுவித்துக்கொள்ள'' என்று ஒரு பேரையிட்டுக்கொடு வந்துபுகுந்து தம்பக்கல் எம்பெருமான் பண்ணின வ்யாமோஹத்தைச்சொல்லி, இவனுக்கு அடிமைசெய்வார் இவன் மூணவெள்ளத்திலே அகப்படாதேகொள்ளுங்கோள் என்கிறார்.

[செஞ்சொற்கவிகாள் உயிர்காத்தாட் செய்ம்மின்] -செவ்விய சொல்லையுடைய கவிகாள்! கவிபாடி அடிமைசெய்யுமிடத்தில், உங்களைப் பரிஹரித்துக்கொண்டு அடிமை செய்யுங்கோள். [திருமாலிருஞ்சோலை வஞ்சக்கள்வன்] - ''என்கண்ணன் கள்வம் எனக்குச் செம்மாய்நிற்கும்'' என்னுமாபோலே மெய்செய்கிறனென்று தோற்றும்படி தெரியாமே வஞ்சிக்கவல்லனுய், அதுக்கடியான மஹாஸ்சர்ய மூணசேஷ்டிதங்களையுடையான். [மாயக்கவியாய் என்றுமேலுக்கு] - ''அத்யாஸ்சர்யாவஹமான திருவாய்மொழி பாடுவித்துக்கொள்ள'' என்று ஒரு பேரையிட்டுக்கொண்டு இப்பரிமாற்றத்துக்கு நிலவரானுர்க்கும் தெரியாதபடி என்நெஞ்சையும் உயிரையும் உள்ளேபுக்குக் கலந்து அவற்றை லூஜித்து என்அஹிமாநத்தைப்போக்கித் தானே எனக்கு அஹிமாநியாய் அத்தாலே பூர்ணனனன்.

ஈஸ்வரனுடைய பாரதந்த்ர்யத்தை இத்திருமாய்மொழியிலே நிரூபித்தென்றபடி. ''உயிர்காத்தாட் செய்ம்மின்''என்றதற்கை - ஒருவரும் இழியாதே கோள்ளுங்கோள் என்றதை.

ப.—முதற்பாட்டில், ''கவிபாடுவித்துக்கொள்ள'' என்றொரு வ்யாஜத்தாலே ஈச்வரன் தம்பக்கல் பண்ணின அஹிநிவேஶத்தைக் கண்ட ஹர்ஷத்தாலே, தத்தாமை வேண்டியிருப்பார் இவ்விஷயத்திலகப்படாமல் ஆத்மாவை நோக்கிக்கொண்டு அடிமைசெய்யுங்கோளென்று, தாம் பட்ட படியை யருளிச்செய்கிறார்.

